Registered as a Newspaper

# உதயன்

அகவை 37

சுடர் : 37
கதிர் : 01

சனிக்கிழமை
27 நவம்பர் 2021

கார்த்திகை 11 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 32

விலை: 30/=

உதயன் இன்று 37ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறான். இதுவரை துணைநின்ற, நிற்கின்ற வாசகர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள், விநியோகஸ்தர்கள் அனைவருக்கும் உதயனின் நன்றிகள்.

# மாவீரர் நாள் இன்று: தமிழர் நினைவேந்துக!

## தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் கூட்டாக கோரிக்கை

யாழ்ப்பாணம், நவம்பர் 27

தமிழீழத் தனியரசு அமைப்பதற்காகப் போராடி, வீரச்சாவடைந்த மாவீரர்களை அஞ்சலிக்குமாறு தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் கூட்டாக அழைப்பு விடுத்துள்ளனர். சட்ட ஒழுங்குகளை மதித்து அஞ்சலிகளை முன்னெடுக்குமாறும், ஒன்றுசேர்ந்து தமிழ் மக்கள் இவ்வாறு செய்வதன் ஊடாக அடக்குமுறைக்கு எதிரான பலத்தைக் காண்பிக்குமாறும் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

31 ➤



(கோப்புப்படம்)

## வடக்கு- கிழக்கை காக்க வந்துதித்த வீரத் தமிழன்!

*தலைவர் பிரபாவுக்கு விக்னேஸ்வரன் புகழாரம்*



கொழும்பு, நவ. 27

இலங்கையில் வடக்கு - கிழக்கை மையமாக வைத்து அங்கு உதித்த வீரத் தமிழனின் இன்றைய (நேற்றைய) பிறந்தநாளில், அவர் ஞாபகார்த்தமாக நேதாஜி

31 ➤

## பிரபாவின் பிறந்தநாள் படத்தால் தாதியர் கல்லூரியில் கைகலப்பு.

*பணிப்பாளரின் தலையீட்டால் சமரசம்*

யாழ்ப்பாணம், நவ. 27

யாழ்ப்பாணம் தாதியர் கல்லூரியில், தலைவர் பிரபாகரனுக்காக கேக் வெட்டும் ஒளிப்படம் பகிரப்பட்டமையால் சிங்கள மற்றும் தமிழ் மாணவர்களிடையே முரண்பாடு

31 ➤

## நினைவேந்தலை தடுக்க மன்னார் நீதிமன்று மறுப்பு

மன்னார், நவ. 27

மன்னாரில் மாவீரர் தினத்துக்குத் தடைகோரும் பொலிஸாரின் விண்ணப்பத்தை மன்னார் நீதிவான் நீதிமன்று

31 ➤

முல்லையில் நினைவேந்தலை

## மீண்டும் தடுக்கமுற்பட்ட பொலிஸுக்கு தோல்வி

முல்லைத்தீவு, நவ. 27

நினைவேந்தலைத் தடுக்க முல்லைத்தீவு நீதிமன்று திருத்திய கட்டளையுடன் அனுமதி வழங்கிய நிலையில், அத

31 ➤

## நாடாளுமன்றில் பிரபாகரனுக்கு பிறந்தநாள் வாழ்த்து

கொழும்பு, நவ. 27

"தமிழ் இனத்தின் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு எனது பிறந்த நாள் வாழ்த்துகளை தெரி

31 ➤



## யாழ்.பல்கலையில் புலிகளின் தலைவருக்கு பிறந்தநாள் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 27

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்தநாளான நேற்று, யாழ்.பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாட்டத்தில்

31 ➤

## மீன்பிடித்தவர் சாவு மின்னல் தாக்கியதா?

வவுனியா, நவ. 27

வவுனியா இராசேந்திரகுளம் பகுதியில் மீன் பிடிக்க சென்றவர்

31 ➤

## ரயர் கொளுத்திய மூவர் கைது

யாழ்ப்பாணம், நவ. 27

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பிறந்த தின

31 ➤






## மேதகுவின் பிறந்தநாளில் சிவாஜியின் 'கேக்'

கிளிநொச்சி, நவ. 27

"இன்றைய நாள் மகிழ்ச்சியான நாள்" என்றுகூறி நேற்று

31 ➤

## தடையை நீக்க கிளிநொச்சி நீதிமன்று மறுப்பு

கிளிநொச்சி, நவ. 27

மாவீரர்நாள் நினைவேந் தலை பொது இடங்களில் நடத்த முடியாது.

31 ➤

## மற்றொரு வீட்டிலும் சிலிண்டர் வெடிப்பு

கொழும்பு, நவ. 27

நிக்கவெரட்டிய பிரதேசத்தில் நேற்றும் வீடு ஒன்றில் எரிவாயு சிலிண்டர் வெடித்ததில், குறித்த வீடு கடு

31 ➤

## மக்களின் உரிமைக்காக உயிர் நீத்த எம் மறவர்களுக்கு அஞ்சலி



# நீர் நிலைகளுக்கு செல்ல வேண்டாம்

**வவுனியா,நவ.27**

**வவுனியாவில் தொடர்ச்சியான மழைகாரணமாக நீர் நிலைகள் நிரம்பியுள்ளன. எனவே மக்கள் குளப்பகுதியிலுள்ள பூங்காவில் படகுச் சவாரி உட்பட நீர் நிலை விளையாட்டுக்களில் ஈடுபடுவதிலும் சுய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்று வவுனியா நகரசபைத் தலைவர் இ. கௌதமன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா குளப்பகுதியில் அமைந்துள்ள பூங்கா தொடர்பில் வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது. எனவே இதனை தற்போதைய நிலையில் நகரசபை கண்காணிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. முற்று முழுதாக ஒப்பந்தகாரரே அதனைப் பராமரிக்கின்றார்.

எனவே அங்கு எவ்வாறான நிலை உள்ளது என்பது தொடர்பில் நகரசபை கண்காணிக்க முடியாது.

வவுனியா குளம் நீர் நிறைந்துள்ளதால் மக்களே அவதானமாகச் செயற்பட வேண்டும்.

நீர் நிலை விளையாட்டுக்கள் படகுச் சவாரி என்பவற்றில் மிக அவதானம் தேவை.

வவுனியாவில் அனைத்து நீர் நிலைகளும் நீர் நிரம்பியுள்ளன என்று இடர் முகாமைத்துவப் பிரிவும் தெரிவித்துள்ளது. ஆகவே மக்கள் அவ்வாறான நீர் நிலைகள் மற்றும் அவற்றோடு அண்டிய பகுதிகளுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும் -என்றார்.

(ஒ-4-110)

## அம்பலப்பெருமாள்குளம் கொள்ளளவு தாண்டியது

முல்லைத்தீவு,நவ.27

முல்லைத்தீவு அம்பலப்பெருமாள் குளம் கொள்ளளவை எட்டி, வான் பாய ஆரம்பித்துள்ளது.

ஏற்கனவே கோட்டைகட்டிய குளத்தின் வான் வெள்ளம் வன்னேரிக்குளத்தை நிரப்பி வன்னேரிக்குளம் வான் பாய்ந்த வண்ணம் உள்ளது.

தற்போது அம்பலப்பெருமாள் குளம், கோட்டைகட்டியகுளம் ஆகியவற்றின் வான் வெள்ளம் வன்னேரிக்குளத்தை நிரப்பி வன்னேரிக்குளத்தின் வான் வெள்ளம் மண்டைக்கல்லாறு வழியாக பூநகரி கடலைச் சென்றடைந்து கொண்டிருக்கின்றது.

குளங்கள் வான் பாய்வதால் அந்தப்பகுதிகளுக்கான போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது. (ஒ-4-13)

## எதிர்வரும் நாள்களில் டெங்கு அதிகரிக்கும்

யாழ்ப்பாணம்,நவ.27

தென்மராட்சிப் பிரதேசத்தில் எதிர்வரும் நாள்களில் டெங்குத் தொற்று அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

எனவே டெங்கு நுளம்பை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை கிராம அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை அறிவித்துள்ளது தென்மராட்சிப் பிரதேசங்களில் டெங்கு நுளம்புக் குடம்பிகள் அடர்த்தியாக அதிகரித்துள்ளன. பூச்சியியல் ஆய்வுகளின் ஊடாக இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனவே கிராமிய டெங்கு ஒழிப்புக் குழுக்களின் செயற்பாட்டை வலுப்படுத்தி, பொது மக்களுக்கு அறிவுறுத்தி நுளம்பு பெருகும் இடங்களைக் கண்டறிந்து அழிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சகல கிராம மட்ட உத்தியோகத்தர்களும் கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-4-159)

## நாவலர் குருபூசை

வவுனியா,நவ.27

வவுனியாத் தமிழ்ச் சங்கமும் ஆதி விநாயகர் ஆலயமும் இணைந்து நடத்தும் நாவலர் பெருமானின் குருபூசை இன்று ஆதிவிநாயகர் ஆலய வசந்த மண்டபத்தில் மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் "நலம் பெருக்கிய நாவலர்" என்ற பொருளில் சிவத்தமிழ்ச் செல்வர் சிவ. கஜேந்திரகுமாரும், "நாவலர் நற்பணிகள்" என்ற பொருளில் சைவமணி செல்வ.சண்முகமும் உரையாற்றுவர்.

(ஒ-4)

# வான் பாயும் குளங்கள் விவசாயம் கடும் பாதிப்பு

முல்லைத்தீவு,நவ.27

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் மழை காரணமாக, பல சிறு குளங்கள் வான்பாய்கின்றன.

இதனால் விவசாயச் செய்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் நீர்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள 20 பெருங்குளங்களில் 15 குளங்கள் நீர் மட்டம் நிரம்பி வான் பாயத்தொடங்கியுள்ளன என்று முல்லைத்தீவு மாவட்ட நீர்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

முத்தையன்கட்டு நீர்பாசனப் பிரிவின்கீழ் உள்ள விசுவமடுக்குளம், உடையார்கட்டுக்குளம், மருதமடுக்குளம், மதவாளசிங்கன் குளம், கணுக்கேணிக்குளம், வவுனிக்குள நீர்பாசனப் பிரிவின் கீழ்உள்ள தென்னியன்குளம், அம்பலப்பெருமாள்குளம், மருதங்குளம், பழையமுறிகண்டிக் குளம், கோட்டைகட்டியகுளம், மல்லாவிக்குளம், தேறாங்கண்டல் குளம் ஆகியன நீர்மட்டம் நிரம்பி வான் பாயத் தொடங்கியுள்ளன.

அதேவேளை தண்ணிமுறிப்புக் குளத்தின் நீர்வரத்து அதிகமாகக் காணப்படுவதால், அதன்மூன்று வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன.

வவுனியா வடக்கில் பெய்துவரும் அதிகளவான மழையால் தண்ணிமுறிப்புக் குளத்துக்கான நீர் வரத்து அதிகரித்துள்ளது என்று கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்தார்.

(ஒ-4-19)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## நெருப்பாற்றையும் நீந்திக் கடப்போம்!

**தா**யகத்தைக் காத்து தமிழீழ தனியரசு அமைப்பதற்காக விதையாகிப்போன மாவீரர்களை பூசிக்கும் நன்னாள் இன்று. இந்த நாளிலேயே தமிழர் உரிமைக்காக பேனா தூக்கிய உதயனும் வந்துதித்தான். உங்கள் உதயனுக்கு இன்று வயது 37.


'அரசியல், பொருளாதார சுதந்திரம் மலர வேண்டும். சமூக சமத்துவமும் சகோதரத்துவமும் பூத்துக் குலுங்க வேண்டும். ஈழம் வாழ் தமிழ் மக்கள் உலகின் ஏனைய பகுதி மக்களுக்கு இணையாக உயர வேண்டும். அதற்கேற்ற அபிவிருத்தியும் உழைப்பும் இந்தப் பூமியில் செறிந்து பரவ வேண்டும். எங்களிடம் உள்ள கல்வி, மனிதசக்தி முதலான பல்துறை ஆற்றல்களையும் ஒருமுகப்படுத்தவேண்டும். சொந்த மண்ணின் வளங்களைக் கண்டறிந்து அவற்றைத் தக்கவாறு பயன்படுத்தவேண்டும். எமது வருங்காலச் சந்ததிச் செல்வங்கள் வேலைவாய்ப்புக்கும் ஜீவனத்துக்கும் கொழும்பையும் பிறநாட்டுத் தலைநகரங்களையும் நாடாதிருக்கச் செய்ய வேண்டும். தமிழர் தமது பிறந்த மண்ணில் சகல உரிமைகளுடனும் வசதிகளுடனும் முதலாந்தர பிரஜைகளாக வாழ வேண்டும். தம்மைத் தாமே ஆண்டு தமது பணிகளைத்தாமே நிர்வகித்து அன்னை மண்ணின் வளம் காணுதல் வேண்டும். இதுவே உதயனின் ஆசையும் அபிலாஷயும். தமிழ்ப் பெருமக்கள் இதனை ஈட்டுவதற்காக உதயன் தன்னை அர்ப்பணம் செய்வான். அந்த அர்ப்பணமே அவனது உதயநாள் சங்கற்பம்' என்று தனது உதயவேளையில் உதயன் உறுதிபூண்டான்.

அவன் வரித்துக்கொண்ட இலட்சியத்துக்காக – இலக்குக்காக இன்று வரையில் இம்மியும் பிசகாது – துளியளவும் விட்டுக் கொடாது – உறுதியுடன், உங்கள் ஆதரவால் வலிமையுடன் கருத்துச்சமராடிக் கொண்டிருக்கின்றான். உதயன் நெருப்பாறுகளைக் கடந்தே வந்திருக்கின்றான். இன்னமும் எரிமலையாய் கொதித்துக் கொட்டிக்கொண்டிருக்கும் அந்தத் தணல்களுக்கு மேலாகவே அவன் பயணித்துக் கொண்டிருக்கின்றான்.

தன் மக்களுக்காக – தமிழர் தேசத்துக்காக – தமிழீழ தனியரசுக்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டம் முகிழ்ந்தபோது அதற்குப் பக்கபலமாய் – உரமூட்டுபவனாக தனித்து – துணிந்து நின்றவன் 'உதயன்'. இவை சுயதம்பட்டம் அல்ல. மீளப் பெறமுடியாத இழப்புக்களை உதயன் இன்றும் சந்தித்துக் கொண்டிருப்பதற்கு இதுவே காரணம்.

அடித்தார்கள், உதைத்தார்கள், எரித்தார்கள், சுட்டும் கொன்றார்கள், வழக்குகளும் போட்டுப் பார்த்தார்கள் ஆனால் உதயனின் பயணத்தை எவராலும் நிறுத்த முடியவில்லை. தடைகள் எல்லாம் படிகளாக மாறியது உங்கள் ஆதரவினால் மாத்திரமே. என்றென்றும் உங்களுக்கு உதயன் நன்றியுடையவன்.

'தம்மைத்தாமே ஆண்டு, தமது பணிகளைத் தாமே நிர்வகித்து அன்னை மண்ணின் வளம் காணுதல் வேண்டும்' என்று உதயநாள் சங்கற்பத்தில் உறுதிபூண்டதை அடைவதற்காக உதயன் என்றும் உழைப்பான். அவனுக்கு எப்போதும், களமாடி வீரகாவியமான எங்கள் வீரர்கள் – பேனாப் போராளிகள் ஆசிகள் வழங்குவார்கள்.



# முல். தொடரும் கனமழை 34 குடும்பங்கள் பாதிப்பு:

**முல்லைத்தீவு, நவ.27**

**முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடரும் கனமழை காரணமாக ஒருவர் உயிரிழந்தார். 34 குடும்பங்களைச் சேர்ந்த 101 பேர் பாதிக்கப்பட்டனர் என்று முல்லைத்தீவு மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.**

அதனடிப்படையில் நேற்று முன்தினம் மாலைவரையான காலப்பகுதியில் ஒருவர் உயிரிழந்தார். 34 குடும்பங்களைச் சேர்ந்த 101 பேர் பாதிக்கப்பட்டனர் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 19 பேரும், புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் பிரிவின் ஆனந்தபுரம் கிராம அலுவலர் பிரிவில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 17 பேரும், புதுக்குடியிருப்பு மேற்கு கிராம அலுவலர் பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 7 பேரும், தேவிபுரம் கிராம அலுவலர் பிரிவில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 34 பேரும், மன்னாகண்டல் கிராம அலுவலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 4 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை மன்னாகண்டல் பகுதியில் இறப்பு ஒன்று பதிவாகியுள்ளது.

வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவில் 9 குடும்பங்களைச் சேர்ந்த 18 பேரும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 2 பேரும் பாதிக்கப்பட்டனர்.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் பிரிவில் ஆனந்தபுரம் கிராமத்தில் பாதிக்கப்பட்ட 6 குடும்பங்களைச் சேர்ந்த 18 பேர் அவர்களுடைய வீடுகளில் இருந்து இராணுவத்தினரால் படகு மூலம் மீட்கப்பட்டு, ஆனந்தபுரம் கிராம அலுவலர் அலுவலகத்தில் அமைக்கப்பட்ட இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

(ஒ-4-19)

## 60 வயதானவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி

கிளிநொச்சி,நவ.27

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இன்று பூஸ்டர் தடுப்பூசி செலுத்தப்படும் என்று கிளிநொச்சி மாவட்ட தொற்று நோயியலாளர் மருத்துவர் நிமால் அருமைநாதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பொது மருத்துவமனை, கரைச்சி, பூநகரி, கண்டாவளை மற்றும் பளை சுகாதார மருத்துவ அதிகாரிகள் பணிமனையில் தடுப்பூசி ஏற்றப்படும்.

இரண்டாம் கட்ட தடுப்பூசி பெற்று மூன்று மாதங்களுக்குப் பின்னர் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

எனினும் முதலாம், இரண்டாம் கட்ட தடுப்பூசி பெற்றும் தொற்றுக்குள்ளானவர்கள் ஆறு மாதங்களுக்குப் பின்பே மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அதேவேளை முதல்கட்ட தடுப்பூசியாக அஸ்ராஜெனகா தடுப்பூசியைப் பெற்று, இண்டாம்கட்ட தடுப்பூசியைப் பெறாதவர்கள், இரண்டாம் கட்ட தடுப்பூசியாக பைஸர் தடுப்பூசியைப்பெற்றுக் கொள்ளமுடியும்.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் கிராமத்தில் உள்ள பொதுச் சுகாதார மாதுக்களின் அலுவலகத்தில் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும் - என்றார்.

(ஒ-4-113)

## மலர் முற்றம் நாளை வரை திறந்திருக்கும்

யாழ்ப்பாணம்,நவ.27

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம், வட மாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு, நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நடத்தி வரும் மலர் முற்றம், நாளை ஞாயிற்றுக்கிழமை வரை திறந்திருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த் மலர் முற்றத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த தாவர உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்திகளைக் காட்சிப்படுத்தியுள்ளனர். விற்பனையும் இடம்பெற்று வருகின்றது. (ஒ-4)

நவம்பர் 2021

**வடமாகாண மரநடுகை மாதம்**



"பூட்டன் நட்ட பனைமரம் காய்க்கிறது. பாட்டன் நட்ட பலா மரம் பூக்கிறது. வெட்டி எரித்ததன்றி நீயென்ன நிழல் வைத்தாய் மாசடையாச் சூழல் சாவடையா வாழல்!." – **கவிஞர் புதுவை இரத்தினதுரை**

# 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு திங்களிலிருந்து 3ஆவது தடுப்பூசி

## வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், நவ. 27**
**60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு, கொரோனா மூன்றாவது தடுப்பூசி நாளைமறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் வழங்கப் படவுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.**

இது பற்றி அவர் அனுப்பிய செய் திக் குறிப்பில்,
60 வயதுக்கு மேற்பட்டவர்களில், ஏற்கனவே சினோபார்ம் தடுப்பூ சியை இரண்டு தடவைகள் பெற் றுக்கொண்டவர்கள் மட்டுமே தமது தடுப்பூசி அட்டையை சமர்ப்பித்து மூன்றாவது தடுப்பூசியைப் பெற் றுக்கொள்ளலாம். இரண்டாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து ஆகக்குறைந்து மூன்று மாதங்கள் கால இடைவெ ளியின் பின் மூன்றாவது தடுப்பூசி யைப் பெற்றுக்கொள்ளலாம்.
60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நிலையங்கள், திகதிகள் பற்றிய விவரங்கள் அந் தந்த பிரதேசங்களுக்குரிய சுகாதார மருத்துவ அதிகாரிகளால் அறியத் தரப்படும்.
தடுப்பூசி அல்லது வேறுமருந்துக ளுக்கு ஒவ்வாமை உடையவர்க ளுக்கு எதிர்வரும் 4, 11 ஆம் திக திகளில் சனிக்கிழமை தடுப்பூசி வழங்கப்படும். அதற்கென யாழ்ப் பாண மாவட்டத்தில் யாழ்.போதனா மருத்துவமனை, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, தெல்லிப்பழை, சாவகச்சேரி ஆதார மருத்துவம னைகளிலும், கிளிநொச்சி, முல் லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களின் மாவட்ட பொது மருத்துவமனைகளிலும் இத்தடுப்பூசிகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
ஒவ்வாமை உள்ளதாகச் சந்தேகிக் கப்படுபவர்களுக்கு தடுப்பூசி வழங் கப்படாது திருப்பி அனுப்பப்பட்டவர் கள் தடுப்பூசி வழங்கும் நிலையத்தில் உள்ள மருத்துவ அதிகாரியின் பரிந்துரைக் கடிதத் தைப் பெற்றுக்கொண்டு மேற்குறிப் பிட்ட மருத்துவமனைகளில் ஏதா வது ஒன்றில் தமக்குரிய தடுப்பூ சியை பாதுகாப்பாக பெற்றுக் கொள்ள முடியும். - என்று பணிப் பாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.
(து-26)

# மருத்துவக் கருத்தமர்வு இன்று காலை 7மணிக்கு

யாழ்ப்பாணம், நவ. 27
வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவ கார அலகு ஏற்பாடு செய்துள்ள 'சூம்' செயலி ஊடான மருத்துவக் கருத்தமர்வுகள் இன்று சனிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் காலை 9 மணிவரை நடைபெறவுள்ளது.
'யாவர்க்கும் நலம்' என்ற குறித்த நிகழ்ச்சித் தொடரா னது சனிக்கிழமைகளில் மேற்குறித்த நேரத்தில் நடைபெறுகின்றது. இந்தக் கருத்தமர்வுகளில் பிரபல மருத்துவ நிபுணர்கள் கலந்து சிறப்பித்துத்துள்ளார்.
இன்று 'பாலியல் ஆரோக்கியமும் குடும்பக்கட்டுப்பா ட்டு முறைகளும்' எனும் தலைப்பில் நடைபெறவுள்ள கருத்தமர்வில் அனைவரும் பங்கேற்று பயன்பெறு மாறு கேட்டுக்கொள்கின்றோம். பயனர் பெயர் - 899 8528 2023, கடவுச்சொல் - 354485.
(து)

# தொற்று 714 சாவு 26

கொழும்பு, நவ. 27
இலங்கையில் நேற்று 714 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்ப டுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட் சத்து 61 ஆயிரத்து 59 ஆக எகிறியுள்ளது.
அவர்களில் 18 ஆயிரத்து 21 பேர் சிகிச்சை நிலையங் களில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 406 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.
அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 28 ஆயிரத்து 806 ஆக அதிகரித் துள்ளது.
இதேவேளை, இலங்கையில் மேலும் 26 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.
இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா உயிரி ழப்புகளின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 258 ஆக அதிகரித்துள்ளது.
(து-22)

# அபிவிருத்திகளுக்கு மஹிந்தவே காரணம்

## இராஜாங்க அமைச்சர் புகழாரம்

கொழும்பு,நவ.27
இலங்கையில் அண்மைக் கால அபிவிருத்திகள் அனைத்துக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்சவே கார ணம் என்று விமான சேவை கள், ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் வி.சானக தெரி வித்தார்.
பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத் தித் திட்டத்தின்கீழ் நிர்மாணி க்கப்பட்ட புதிய விமான ஓடு தளம் மற்றும் ஓடுபாதை யைத் திறக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற் றுகையிலேயே அவர் இத னைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கை யில்; ஐந்து ஆண்டுகளாக நிறுத்தப் பட்டிருந்த அபிவி ருத்தியை மீண்டும் மேம்ப டுத்தும் தருணம் இது. இந் தத் திட்டத்தை ஆரம்பித்த பிரதமர் மஹிந்த ராஜபக் சவே திறந்து வைக்கக் கிடைத்தமை பெருமைக்கு ரிய விடயம். இடைநிறுத்தப் பட்டிருந்த இந்தத் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கும்போது பெரும் சவால்கள் காணப் பட்ட போதிலும், அதனை முன்னெடுத்துச்செல்லுமாறு ஜனாதிபதி ஒப்படைத்தார்.
கொழும்புத் துறைமுகத்தை எடுத்துக்கொண்டால் அதனை மேம்படுத்தியது மஹிந்தவே.- என்றார்.
(ஒ-4)

# வாரத்தில் ஒருநாள் பரிசோதனை

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணி யகத்தில் டிசெம்பர் மாதம் தொடக்கம், கொரோனா தொடர்பான பரிசோதனை மற் றும் தடுப்பூசி ஏற்றல், வாரத்தில் ஒரு நாள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
பிரதி வியாழக்கிழமைகளில் அன்டிஜென் மற் றும் பி.சி.ஆர்.பரிசோதனைகளும், கொரோ னாத் தடுப்பூசி ஏற்றும்பணிகள் பிரதி வெள் ளிக்கிழமைகளிலும் இடம்பெறும். (ஒ-4-9)

# சிவாஜிக்கு தடைகோரிய நேற்றைய மனுவும் தள்ளுபடி

## பொலிஸார் தாக்கல்செய்த ஆவணங்களின் உண்மைநிலையை புலன்விசாரணை செய்ய உத்தரவு



யாழ்ப்பாணம், நவ. 27
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் வல்வெட்டித் துறை தீருவிலில், நினை வேந்தல் செய்யவுள்ளார் என்றும் அதற்குத் தடை விதிக்குமாறும் கோரி பருத்தித்துறை நீதிமன்றில் வல்வெட்டித்துறைப் பொலிஸார் தாக்கல் செய்த தடை உத்தரவை நீதிமன்று நேற்று நிராகரித்தது.
பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற எல்லையில் நவம்பர் 21 தொடக்கம் 28ஆம் திகதிவரை நினை வேந்தல் நிகழ்வுகளை முன்னெடுக்கதடைகோரி பருத்தித்துறை, நெல்லியடி மற்றும் வல்வெட்டித் துறை பொலிஸார் தாக்கல் செய்த விண்ணப்ப ங்களை தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டது.
இந்தநிலையில், வல்வெட்டித்துறை தீருவில் திடலில் நாளை (இன்று) மாவீரர் நாள் நிகழ்வுகள் நடைபெ றும் திட்டமிடல் உள்ளதால் அதற்கு தடை உத்தரவு வழங்குமாறு வல்வெட்டித்துறை பொலிஸார் பருத் தித்துறை நீதிவான் நீதிமன்றில் புதிய விண்ணப்பம் ஒன்றை நேற்றுத்தாக்கல் செய்தனர். பிரதிவாதியான சிவாஜிலிங்கம் சார்பில் மூத்த சட்டத்தரணி வி. திருக்குமரன் முன்னிலையானார்.
இருதரப்பு விண்ணப்பங்களையும் ஆராய்ந்த நீதி வான், பொலிஸாரின் விண்ணப்பத்தில் கோரப்பட்ட தடை உத்தரவு கோரிக்கையை நிராகரித்து கட்டளை யிட்டார்.
அவ்வாறு, பொலிஸாரால் பாரதூரமான செயல் இடம்பெறலாம் என தாக்கல் செய்யப்பட்ட சிவாஜி லிங்கம் தொடர்பான மூன்று ஆவணங்களையும் புலன் விசாரணைசெய்து வரும் டிசெம்பர் 10ஆம் திகதி மன்றுக்கு அறிக்கையிடுமாறு உத்தரவிட்டு வழக்கை ஒத்திவைத்தார்.
(து-26)


# மரண அறிவித்தல்

## திருமதி தெய்வானைபிள்ளை சண்முகநாதன்



யாழ்ப்பாணம் கந்தர்மடத்தை பிறப் பிடமாகவும் பிறவுண் வீதியை வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வானைபிள்ளை சண்முக நாதன் நேற்று (26.11.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற சண்முக நாதன் அவர்களின் அன்பு மனைவி யும், சந்திரபிரேமா, காலஞ்சென்ற சந்திரகாந்தன், மற்றும் லோகேஸ்வரன், தில்லேஸ்வரன், காலஞ்சென்ற விஜயநாதன், நிஷாளினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரம் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தனர்.
077 7570 203
(CS 693) 1-6

## பொதுக்கூட்டம் - கைதடி வீட்டுத்திட்ட நம்பிக்கை சங்கம்

கைதடி வீட்டுத்திட்ட சங்க யாப்பு பிரிவு 5A யின் பிரகாரம் சங்கத்தின் பொதுக்கூட்ட அறிவிப்பு

**திகதி - 04.12.2021**
**நேரம் - காலை 10 மணி**
**இடம் - இல.53A , சிங்கமலைத்தோட்டம் கைதடி கிழக்கு , நாவற்குழி.**

**நிகழ்ச்சி நிரல்**

1. அக வணக்கம்
2. தலைமை உரை
3. செயலாளரின் வருடாந்த அறிக்கை 2020-2021
4. கணக்கு அறிக்கை 2020-2021
5. ஏனைய முக்கிய விடயங்கள்


A. சட்ட விரோத குடியிருப்புக்கள்
B. நம்பிக்கைச்சபை உறுப்பினர்களால் தவறான முறையிற் . கையாடப்பட்ட காணிகள் மற்றும் யாப்பிற்கு முரணாக வியாபார அடிப்படையில் காணிகளைக் கையாண்டமை.
C. கடந்த கால சங்க நடவடிக்கைகளை ஆராய ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவர் தலைமையிலான விசாரணைக்குழு அமைத்தல்.
D. புதிய நம்பிக்கைச்சபை தெரிவு

**குறிப்பு:** சங்க அங்கத்தவர் அடையாள அட்டையுடன் அல்லது சங்க அங்கத்துவதற்கான ஆதாரத்துடன் வருபவர்கள் மட்டுமே அங்கத்துவ பற்றுசீட்டு / காணி உறுப்பின் உறுதி வருபவர்கள் மட்டும், நிகழ்ச்சியில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவார்.

**க.செவ்வேள்**
**செயலாளர்**
**021 224 4489**

(CS 41284) (3/6)

## மணிவிழா வாழ்த்து




**திரு. கணவதி பத்மநாதன்**

சேவைக்காலம்:
05.08.1998 - 26.11.2021
(யா/மனிப்பாய் இந்துக்கல்லூரி)
எமது பாடசாலை **ஆய்வுகூட உதவியாளராகக்** கடமையாற்றிய **திரு. கணவதி பத்மநாதன்** அவர்கள்

**இன்று 27.11.2021 தனது 60 வயதினைப் பூர்த்திசெய்து ஓய்வுபெற்று** மணிவிழாகாணும் அவரை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
**அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள்**
**மானிப்பாய் இந்துக்கல்லூரி** (cr.36481) (2.6)

# மீள்கேள்வி அறிவித்தல் - 2022
## கரைச்சி பிரதேச சபை கிளிநொச்சி.

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சந்தைகள், இறைச்சிக்கடைகள் உள்ளிட்ட குத்தகை நிலையங்களை 2022.01.01- 2022.12.31 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்படுகின்றன.

| விண்ணப்பப்படிவம் விநியோகிக்கப்படும் திகதி, நேரம் | கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி, நேரம் | கேள்வி திறக்கப்படும் திகதி, நேரம் |
|---|---|---|
| திகதி:- 2021.11.29 ஆம் திகதி முதல் 2021.12.06 ஆம் திகதி வரை, அலுவலக நாட்களில் மட்டும். | திகதி:- 2021.12.07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை | திகதி:- 2021.12.07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை |
| நேரம்:- மு.ப 09.00 - பி.ப 2.00 வரை | நேரம்:- மு.ப 10.00 மணி | நேரம்:- மு.ப 10.00 மணி |
| இடம்:- கரைச்சி பிரதேச சபை தலைமை அலுவலகம். | இடம்:- கரைச்சி பிரதேச சபை தலைமை அலுவலகம். | இடம்:- கரைச்சி பிரதேச சபை தலைமை அலுவலகம். |

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகள் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை எம்மால் வழங்கப்பட்ட கடித உறையில் தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி என முகவரியிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிட்டு 2021.12.07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவு தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். அல்லது பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்படும் கேள்வி பெட்டியினுள் மேற்குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் இடப்பட வேண்டும்.

இரண்டாவது பிரதியை உள்ளூராட்சி உதவி ஆணையாளர். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம். கிளிநொச்சி என முகவரியிட்டு குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவு தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விகள் யாவும் 2021.12.07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு கரைச்சி பிரதேச சபையில் கேள்விச் சபை முன்னிலையில் திறக்கப்படும். கேள்விச் சபையின் முடிவே இறுதி முடிவு கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விகாரர் பிரசன்னமாகி இருக்கலாம்.

| இல | குத்தகை நிலையம் | கேள்வி வைப்பு பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்வி படிவ கட்டணம் மீளளிக்க முடியாதது | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வி தொகை |
|---|---|---|---|---|
| | சேவைச்சந்தை -கிளிநொச்சி | | | |
| 1 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை மீன் | 50,000.00 | 1,000.00 | 2,574,000.00 |
| 2 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை மரக்கறி | 120,000.00 | 1,000.00 | 5,407,380.00 |
| 3 | கிளிநொச்சி சந்தை துவிச்சக்கரவண்டி, மோட்டார் .பாதுகாப்பு நிலையம் | 60,000.00 | 1,000.00 | 3,539,497.50 |
| .4 | கிளிநொச்சி சேவைச்சந்தை புதிய பொதுமலசலகூடம் | 3,000.00 | 1,000.00 | 71,582.84 |
| | கிளிநகர்ப் பகுதி | | | |
| 1 | கிளிநொச்சி சிறுவர் பூங்கா அருகில் உள்ள ஐஸ்கிறீம் விற்பனை நிலையம் | 10,000.00 | 1,000.00 | 641,520.00 |
| 2 | பரந்தன் சந்தியில் இருந்து இரணைமடுச் சந்தி வரையான A9 வீதி வாகன தரிப்பிடம் | 6,000.00 | 1,000.00 | 156,795.30 |
| 3 | மருதநகர் இயற்கை பூங்கா | 1,000.00 | 1,000.00 | 32,400.00 |
| | பொதுச்சந்தை – பரந்தன் | | | |
| 1 | பரந்தன் சந்தை தொகுதி | 1,000.00 | 1,000.00 | 75,240.00 |
| 2 | பரந்தன் கோழி இறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 268,290.00 |
| 3 | பரந்தன் ஆட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 69,300.00 |
| | பொதுச்சந்தை- வட்டக்கச்சி | | | |
| 1 | வட்டக்கச்சி சந்தைதொகுதி | 7,000.00 | 1,000.00 | 171,870.57 |
| 2 | வட்டக்கச்சி கோழி இறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 346,500.00 |
| 3 | இராமநாதபுரம் மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 355,014.00 |
| 4 | இராமநாதபுரம் கோழி இறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 256,247.10 |
| | பொதுச்சந்தை- இரணைமடு | | | |
| 1 | இரணைமடு மாட்டிறைச்சிக்கடை | 20,000.00 | 1,000.00 | 1,192,950.00 |
| 2 | இரணைமடு கோழி இறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 644,490.00 |
| | கனகாம்பிகைக்குளம் | | | |
| 1 | கனகாம்பிகைக்குளம் சிறுவர் பூங்கா | 1,000.00 | 1,000.00 | 5,400.00 |
| | பொதுச்சந்தை- உருத்திரபுரம் | | | |
| 1 | D10உருத்திரபுரம் சந்தை தொகுதி | 1,000.00 | 1,000.00 | 14,313.40 |
| 2 | D10உருத்திரபுரம் மாட்டிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 297,198.00 |
| | பொதுச்சந்தை- ஸ்கந்தபுரம் | | | |
| 1 | ஸ்கந்தபுரம் சந்தை தொகுதி | 10,000.00 | 1,000.00 | 372,487.50 |
| | பொதுச்சந்தை- தருமபுரம் | | | |
| 1 | தருமபுரம் சந்தை தொகுதி | 2,000.00 | 1,000.00 | 50,794.25 |
| 2 | தருமபுரம் கோழி இறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 140,580.00 |
| | பொதுச்சந்தை- கல்லாறு | | | |
| 1 | கல்லாறு மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 71,280.00 |
| | பொதுச்சந்தை- முரசுமோட்டை | | | |
| 1 | முரசுமோட்டை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 45,018.67 |
| | பொதுச்சந்தை- அக்கராயன் | | | |
| 1 | அக்கராயன் மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 90,189.00 |
| | பொதுச்சந்தை- புன்னைநீராவி | | | |
| 1 | புன்னைநீராவி மாட்டிறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 199,980.00 |
| 2 | புன்னைநீராவி கோழி இறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 219,780.00 |

### நிபந்தனைகள்

01. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் எதுவித அறிவித்தலுமின்றி இரத்துச் செய்யப்படும்.
02. கடந்தகாலக் கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளை செலுத்ததவறியவர்களும். கறுப்பு பட்டியலில் உள்ளவர்களும் குத்தகை கேள்விகளில் பங்குபற்றத் தகுதியற்றவர்கள்.
03. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ. நிராகரிப்பதற்கோ கேள்விசபைக்கு அதிகாரமுண்டு.
04. கேள்விகாரர் கரைச்சிப் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் நிரந்தரமாக வசித்தல் வேண்டும்.
05. கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ள வரும்போது தம் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணத்தின் நிழற்பிரதியை (தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதி பத்திரம்) கிராம சேவையாளர் மூலம் உண்மைப் பிரதி என சான்றுப்படுத்தி சமர்ப்பிப்பதுடன். கிராம சேவையாளரால் வழுங்கப்பட்ட வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழையும் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
06. கேள்வி விண்ணபத்தை சமர்ப்பிக்கும் போது சபையால் வழங்கப்பட்ட கேள்விப்பத்திரம். கடித உறை என்பவற்றை மட்டுமே பயன்படுத்த முடியும்.
07. சித்தியடையும் கேள்விகாரர் கேள்வி தொகையின் மூன்றில் ஒரு பகுதி தொகையினை சபையினால் விதிக் கப்படும் கால எல்லைக்குள் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும். குறித்த கேள்விகாரர் ஒப்பந்தத் திற்கு அமைவாக குத்தகை நிலையத்தை நடாத்தினால் குறித்த வைப்பு தொகை புரட்டாதி. ஐப்பசி. கார்த்திகை. மார்கழி மாதங்களின் குத்தகை ஒப்பந்தமாக மாற்றம் செய்யப்படும்.
08. இறைச்சி கடைகள். சந்தைகள். குத்தகை நிலையங்கள் அனைத்தும் குத்தகைக்கு எடுப்பவராலேயே நாடாத் தப்பட வேண்டும். குத்தகைகாரர் தவிர்ந்த வேறு ஒருவரால் குத்தகை நிலையம் நடாத்தப்படின் உடனடியாக ஒப்பந்தம் இரத்து செய்யப்படுவதுடன் வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
09. மாதாந்த குத்தகைக் கட்டணங்களை அதேமாதம் 30ம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். குறித்த கால எல்லைக்குள் செலுத்தத்தவறின் பத்து நாட்களுக்கு உட்பட்டு செலுத்தும் பட்சத்தில் கட்டுப்பணத்துடன் 10% தண்டப் பணத்தையும். காலதாமதம் பத்து நாட்களுக்கு மேற்படும் பட்சத்தில் கட்டுப்பணத்துடன் 15% தண்டப்பணத் தையும் சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
10. தொடர்ச்சியாக இரு மாதங்கள் குத்தகைகட்டணங்கள் செலுத்ததவறும் பட்சத்தில் எதுவித முன்னறிவித்தலு மின்றி குத்தகை நிலையம் சபையால் பொறுப்பேற்கப்படும்.
11. கொல்களத்தில் வெட்டப்பட்ட மாட்டிறைச்சியை. இறைச்சி கடையினை குத்தகைக்கு எடுத்தவர் தன்னால் குத்தகைக்கு பெற்றுக்கொண்ட குத்தகை நிலையத்துக்கு மட்டும் எடுத்துச்செல்ல முடியும். பிரதேச சபை எல்லைக்கு அப்பால் எக்காரணத்திற்காகவும் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட மாட்டாது.
12. துவிச்சக்கர வண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையத்திற்கான கட்டணமாக துவிச்சக்கர வண்டிக்கு ரூபா.5.00 உம். மோட்டார் சைக்கிளுக்கு ரூபா.10.00 உம். முச்சக்கர வண்டி. கயஸ் போன்ற சிறியரக வாகனங்களுக்கு ரூபா 20.00 உம். கனரக வாகனங்களுக்கு ரூபா 50.00 உம் மட்டுமே அறவிடமுடியும்.
13. அனைத்து தராசுக்கொட்டகைக்குமான வரி அறவீட்டினை மேற்கொள்ளும் போது தற்போது பாவனையிலுள்ளவாறு 3% வரியினையே அறவிட முடியும். வரி வீதங்களின் அதிகரிப்பையோ குறைப்பையோ சபையின் அனுமதியின்றி மேற்கொள்ள முடியாது.
14. கிளிநகர்ப்பகுதி வாகன தரிப்பிட கட்டண அறவீடு. ஒழுங்கு படுத்தல் செயற்பாடுகள் அனைத்தும் "2016.02.02ம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தகமானிப் பத்திரிகையின் (அதி விசேமானது) பகுதி 2- பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் வாகனங்களை நிறுத்துதலை முறைப்படுத்தல். ஒழுங்குபடுத்தல். மேற்பார்வை செய்தல். கட்டுப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல்" தொடர்பான 1 தொடக்கம் 36 வரையான நியமத்துணை விதிகளுக்கு கட்டுப்படும்.
15. ஆரம்பகேள்வி தொகையைவிட குறைவான கேள்வி கோருபவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன், கேள்விவைப்புப்பணமும் மீளளிக்கப்பட மாட்டாது.
16. கேள்விகாரர் இலங்கை பிரஜையாகவும் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் இருப்பதை அறிமுகச்சான்றிதழ் மற்றும் வதிவிடசான்றிதழை சமர்ப்பிப்பதன் மூலம் உறுதிப்படுத்தவேண்டும்.
17. கேள்விகோரும்போது கட்டுப்பணத்தை குறித்தகால எல்லைக்குள் (அதிகபட்சம் ஒருவாரகாலம்) செலுத்துவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.
18. சபையால் கட்டப்பட்டகடைகள் காணப்படாதவிடத்து சபையால் கடைகட்டப்படும்வரை தற்காலிக கடைகுத்தகை தாரராலேயே கட்டப்பட வேண்டும். இதற்கான செலவீனங்களை சபை பொறுப்பேற்காது என்பதுடன் சபையால் கடை கட்டிவழங்கப்படவில்லை என்றகாரணத்தை முன்வைத்து மாதாந்தகட்டணத்தில் விலக்களிப்போ. குறைப்பனவோ வழங்கப்படமாட்டாது.
19. இறைச்சிகடைக்குரிய மாதாந்த இடவாடகை கட்டணமாக ரூபா1500.00 இனை ஒவ்வொரு மாதமும் சபைக்கு செலுத்த வேண்டும்.
20. இங்கு குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக பிரதேச சபை தவிசாளர்/செயலாளரினால் காலத்துக்குகாலம் விதிக்கப்படும் எழுத்து மூல நிபந்தனைகளையும் குத்தகைகாரர் கடைப்பிடிக்க வேண்டும்.
21. மாட்டிறைச்சி கடைகளை குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் வெளியிடப்படும் வர்த்தமானிகள். சுற்றுநிருபங்களுக்கு அமைய சபையினால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப் படுத்தப்படும்.
22. இந் நிபந்தனைகள் தொடர்பாக சபையின் எந்தவித முடிவையும் ஏற்பதுடன் இது தொடர்பில் சபைக்கெதிராகவோ தவிசாளர்/செயலாளருக்கெதிராகவோ நீதிமன்றநடவடிக்கை எதனையும் மேற்கொள்ளமுடியாது.

**தவிசாளர்,**
**கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.**

(CR 36480) (3.6)

## அறிவித்தல்


**வலி.தென்மேற்கு பிரதேச சபை**
**மானிப்பாய் பட்டின உப அலுவலகம்,**
**மானிப்பாய்**

வட்டாரம் : 03
ஆதன இலக்கம் : 88/12

### மெமோரியல் ஒழுங்கை

வட்டாரம் 03 மெமோறியல் ஒழுங்கை, ஆதன இலக்கம் 88/12 இல் அமைந்துள்ள உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோவில்பற்று மானிப்பாய் இறை "ஆள்வாக்கூரியன் தோட்டம்" என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 03 குளி 15.28 கொண்ட இவ்வாதன மானது மெமோறியல் ஒழுங்கை, மானிப்பாயைச் சேர்ந்த கிருஷ்ணன் துரைச்சாமி ஆகிய இவரால் அவ்வூரைச்சேர்ந்த கந்தையா அகிலன் பெண் தயாளினிக்கு பிரசித்த நொத்தாரிஸ் செல்வி கிருஷ்ணவேணி சுந்தரலிங்கம் முகதாவில் நிறைவேறிய 1059 ஆம் இலக்க 03.04.2013 ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த ஆதன மானது தமக்கு சொந்தம் என தெரியப் படுத்தி எமது மானிப்பாய் பட்டின உப அலுவலக (மானிப்பாய்) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட் புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். இவ்வாதனத்தின் தாயுறுதி யானது பிரசித்த நொத் தாரிசு திரு.ஆர்.வசந்தசேனன் முகதாவில் நிறை வேறிய 2550 இலக்க 06.07.1982ம் திகதிய நன்கொடை உறுதியின் மூலம் கிருஷ்ணன் துரைச்சாமிக்கு வந்தடைந்ததாகும். நில அளவையாளர் திரு. நா.சர வணமுத்து அவர்களால் வரையப்பட்ட 769ம் இலக்க 2013.03.19 ம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் வாதனமானது "ஆள்வாக்கூரியன் தோட்டம்" நிலப்பரப்பு 03 குளி 15.28 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக பிரசுரத் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாத மானது கந்தையா அகிலன் பெண் தயாளினி என்பவர் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**மாதிரி வரைபடம்**




**தவிசாளர்**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

(CS 41289) (3/6)

## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், அரச உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், தனியார் துறையினர் வெளிநாட்டு மண மக்கள் ஏராளமாக உள்ளனர்.
நீங்கள் விரும்பும் மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்த மாக உடன் தரப்படும்.

**264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு.**
(யா/ கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)
**021 222 9306, 077 138 7596, 071 999 9306**

(CS 18026) 1-6

## மரண அறிவித்தல்

தோற்றம்
09
.
02
.
1949



மறைவு
24
.
11
.
2021

அமரர் திருமதி
**கிருஷ்ணகுமாரி (சீத்தா) புத்திரசிகாமணி**

சுதுமலை மத்தி மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஷ்ணகுமாரி புத்திரசிகாமணி அவர்கள் கடந்த (24.11.2021) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் புத்திரசிகாமணியின் அன்பு மனைவியும், ஷஞ்ஜிதா (ரேக்கா - முகாமைத்துவ உதவியாளர் பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய்) அவர்களின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த 24.11.2021 அன்று நடைபெற்றது என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சுதுமலை மத்தி,**
**மானிப்பாய்.**

தகவல்:
**மகள் மற்றும்**
**குடும்பத்தினர்.**

(cs.41291) (2.6)

## சிறுவர்களுக்கு மகிழ்வூட்டல்



யாழ்ப்பாணம்,நவ.27
கியூடெக்-கரித்தாஸ் சர்வமத சகவாழ்வு சிறுவர் கழகத்தின் ஏற்பாட்டில், நாவாந் துறை பங்கு பொது மண்டபத்தில் உலக சிறுவர்தினம் கொண்டாடப்பட்டது.


நிகழ்வில் சிறுவர்களின் கலை நிகழ்வு கள், ஓவியம், வாழ்த்துமடல், கண்காட்சி மற்றும் சிறுவர்களை மகிழ்வூட்டி பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் கியூடெக் - கரித்தாஸ் நிறுவன இயக்குநர் அருட்தந்தை ச. இயூஜின் பிரான்சிஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம விருந்தி னர்களாக நேர்வே கரித்தாஸ் நிறுவனத் தின் மூத்த நிகழ்ச்சித்திட்ட ஆலோசகர் ஆரோன் கால்பன், தேசிய கரித்தாஸ் இயக்குநர் அருட்தந்தை மகேந்திர குண திலக்க ஆகியோர் கலந்து சிறப்பித்த னர்.

(ஒ-4)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்

மலர்வு
04
-
03
-
1938



உதிர்வு
29
-
10
-
2021

29.10.2021 அன்று சிவபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம்
**அமரர் Eng. மயில்வாகனம் சபாரத்தினம் B.Sc,**
F.I.E (Sri Lanka) M.I.C.E (London), Chartered Engineer
**(ஓய்வுபெற்ற பிரதிப் பணிப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (27.11.2021) சனிக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக் கரையில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் மு.ப. 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்தி பிராத்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம். அன்னார் சிவபதம் அடைந்த செய்தி கேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அயலவர்களுக்கும், துண்டுப்பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும் இறுதிக் கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது இதய பூர்வமாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பாரதி வீதி,**
**கம்பர்மலை, வல்வெட்டித்துறை.**

**குடும்பத்தினர்**

(CS 41293) (3/6)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்



பிறப்பு
22.02.1945

இறப்பு
28.10.2021

**அமரர் சரவணமுத்து பாலசுப்பிரமணியம் (சித்தப்பா)**

அப்பா என்றழைத்த எங்கள் தெய்வம்
அறிவுதனை ஊட்டி
அன்புதனைக் காட்டி
அன்னையுமாய் தந்தையுமாய்
அயராது எங்கள் உயர்வுக்காய்
அரும்பாடுபட்டு
அல்லல்படும் வேளையிலும்
ஆறுதலாயிருந்து - எம்மையெல்லாம்
அரவணைத்து வந்தீரே - அப்பா!
இல் வாழ்வு சிறக்க வைத்து - இன்று
காலனவன் அழைத்தான் என்று - எங்களுக்கு
கதை பல சொல்லிவிட்டு - எங்களை
கலங்கவைத்துச் சென்றதேனோ
நாட்கள் தான் நகர்ந்தாலும் - அப்பா
நாங்கள் உம்மை மறப்போமா!

அன்னாரின் மறைவுச்செய்தி கேட்டு இறுதி நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கும், நேரடியாகவும் தொலைபேசி ஊடாகவும், முகநூலின் ஊடாகவும் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவிய அன்பு உறவுகளுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் இன்று (27.11.2021) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**அளவெட்டி வடக்கு**
**077 476 4428**
**077 885 1772**

**"நினைவோரம் நீர் இருக்க**
**நித்தம் உமைத் தேடுகின்றோம்"**
**குடும்பத்தினர்.**

(CS 41294) (3/6)

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கோரிக்கை

# எங்களது கண்ணீரில் அரசியல் செய்யாதீர்

யாழ்ப்பாணம், நவ 27

தமது சுகபோகங்களைத் தக்க வைப்பதற்காக எங்கள் கண்ணீரில் எவரும் அரசியல் செய்யவேண்டாம். நாம் ஆரம்பத்திலிருந்தே அரசியலுக்கு அப்பாற்பட்டு நீதிக்காகவே போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம் என்று வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளைத்தேடி தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு எம்முடன் போராடிய உறவுகளில் நூற்றுக்கு மேற்பட்டவர்களை இழந்துள்ளோம்.

4 வருடங்களையும் கடந்து, தொடரும் எமது போராட்டத்தில் பேரணிகளையும், போராட்டங்களையும் நடத்தி சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்தோம். இப்படியான போராட்டங்களின்போது எமக்கு தடைகள் ஏற்படுத்தப்படுவது வழமை. மக்களின் வாக்குகளால் நாடாளுமன்ற கதிரையில் அமரும் பெரும் பேறையும், பல வரப்பிரசாதங்களையும் பெற்றவர்கள், அவற்றைத் தொடர்ந்து அனுபவிக்கும் பேராசையில் வலி சுமந்த எங்கள் போராட்டத்தைக் கையில் எடுப்பதையோ, உரிமை பாராட்டுவதையோ எம்மால் அனுமதிக்க முடியாது. அரசியல் கட்சியோ அல்லது தனிநபரோ அல்லது எமது சங்கம் தவிர்ந்த வேறு அமைப்புக்களோ எமது போராட்டத்துக்கு உரிமை கோர முடியாது. எம் உறவுகளுக்கான நீதி கிடைக்கும் வரை தொடர்ந்தும் உங்கள் ஆதரவை கோரிநிற்கின்றோம் -என்றுள்ளது.

(ஒ-4-6)

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**பத்மலிங்கம் சந்திரகாந்தன்**

**(கண்ணன்)**

திதி: 27.11.2021

தோற்றம்
21.09.1967

மறைவு
20.11.2011

என்றும் உங்கள் நினைவில்

குடும்பத்தினர்.
ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

(cs.682) (2.6)

## தாதிய உதவியாளர்கள் தேவை

சாவகச்சேரியில் அமைந்துள்ள மொடேர்ன் மெடிக் கெயர் வைத்தியசாலையில் கடமையாற்ற தாதிய தொழில் தெரிந்த பயிற்சி பெற்ற பணியாளர்கள் தேவை. தென்மராட்சியை சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விருப்பம் உள்ளவர்கள் தங்கள் விண்ணப்பங்களுடன் 10.12.2021 முன் நேரில் சமுகம் தரவும். தகுதி உள்ளவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

**பணிப்பாளர்**

**தொடர்பு : 021 492 7129**

(CHA 680) (3/6)

## மரண அறிவித்தல்



தோற்றம்
31.03.1940

மறைவு
26.11.2021

### நாகலிங்கம் பாலசிங்கம்

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர்- கொழும்பு விவேகானந்தா மகா வித்தியாலயம்)

கைதடி தெற்கு கைதடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் பாலசிங்கம் அவர்கள் நேற்று (26.11.2021) வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, சின்னத்தம்பி, சுப்பிரமணியம், குமாரசுவாமி, கண்மணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் தங்கமுத்து அவர்களின் மைத்துனரும், கலாநந்தன் (சுவிஸ்), இரவீந்திராதேவி (நோர்வே), சுபத்திராதேவி ஆகியோரின் சிறிய தந்தையும், காலஞ்சென்ற ஆறுமுகம், மற்றும் சந்திரசேகரம், சின்னத்தம்பி (அண்ணாத்துரை - கொழும்பு), சண்முகரத்தினம் (நோர்வே), கனகம்மா (கனடா), நடராஜா, கனகரத்தினம் (கனடா), செல்வரத்தினம் (கனடா), நாகேந்திரம் (இந்திரன், அவுஸ்திரேலியா) ஆகியோரின் தாய்மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.11.2021) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**021 205 7035**
**077 332 3100 (சுபத்திராதேவி-பெறாமகள்)**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

(CR 5518) 1-6

## அளவெட்டி மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ-து)

## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள இலிகிதர்(302/15) பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை காரியாலயத்தில் 10/- செலுத்தி பெற்றுக் கொள்ளவும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்பத்திரத்துடன் கல்வி, பிறப்பத்தாட்சி பத்திரம், அனுபவச்சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளை இணைத்து பொதுமுகாமையாளர் அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம், கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி என்னும் முகவரிக்கு 13.12.2021ம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**01. பதவி - இலிகிதர்(302/15)**

சம்பள அளவுத்திட்டம் (04/2018இன் படி) 15545 - 18245 / 130x10 - 140 x10

**பதவிக்குரிய தகைமைகள்**

அ. கூட்டுறவுப்பணியாளர்களினது 16வது சம்பளத்திட்டத்தில் இலிகிதர் பதவியில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

ஆ. க.பொ.த(சாதாரணம்) இல் கணிதம் அல்லது வர்த்தக_எண்கணிதம் அல்லது எண்கணிதம் உடன் சிங்களம் அல்லது தமிழ் பாசை உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியும் கூட்டுறவுச்சங்க இலிகிதர் பதவியொன்றில் ஒரு வருடத்திற்கு குறையாத அனுபவமும் இருத்தல் வேண்டும் அத்துடன் கணினி தகைமை அறிவும் அவசியம் தேவை.

குறிப்பு – 1. பதவிக்கான வயதெல்லை 18 – 45
2. சங்கத்தால் கோரப்படும் பிணைப்பணம் செலுத்த வேண்டும்.

**27.11.2021**

**பொதுமுகாமையாளர்**
**அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம்**

(CS 36473) (3/6)

## மரண அறிவித்தல்

பிறப்பு
24
.
12
.
1983

இறப்பு
20
.
11
.
2021



### ஆனந்தகிருஷ்ணன் தணிகைக்குமரன் (தனுஸ்)

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், லண்டன் சட்பறி (Sudbury) யை வதிவிடமாகவும் கொண்ட ஆனந்தகிருஷ்ணன் தணிகைக்குமரன் (தனுஸ்) கடந்த 20.11.2021 சனிக்கிழமை லண்டனில் இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் திரு.திருமதி. ஆனந்தகிருஷ்ணன் - சுந்தரேஸ்வரி தம்பதியினரின் பாசமிகு மகனும், திரு.திருமதி. சுந்தரமூர்த்தி - லோகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், சிந்துவின் பாசமிகு கணவரும், நிதுன் , நிகிஷா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சின்னையா பரமேஸ்வரி, மற்றும் புவனேஸ்வரி, பாலசரஸ்வதி ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற அன்னம்மா மற்றும் சின்னத்தங்கம் ஆகியோரின் மருமகனும், ஆனந்தகௌரி (சுவிஸ்), கௌசலா (ஆசிரியர் - யா/அத்தியார் இந்துக் கல்லூரி நீர்வேலி), சுதர்சினி (ஜேர்மன்), கமலக்குமரன் (ஆசிரியர் யா/இடைக்காடு மகா வித்தியாலயம் அச்சுவேலி), ஆகியோரின் சகோதரனும், திவாகரன், காந்தீபன், சிவலிங்கம், லக்சிகா, நிலானி ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிரூபனின் சகலனும், ஆகாஷ், அஸ்மிதா, ஆஷிகா, ஆர்த்திகா, அக்ஷிகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அபினாஸ், அப்சரன், அத்விகா, தன்விகா, ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (28.11.2021) ஞாயிற்றுக்கிழமை 8th kenton scout centre, 387, kenton road harrow HA3, OYG எனும் இடத்தில் நடைபெற்று, பூதவுடல் Golders, green crematorium 62,Hoop lane, London தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**(இந்த லிங்கின் ஊடாக இறுதிக் கிரியைகளை பார்வையிடலாம்**

https://youtu.be/DifP8BPzY-0 )

**ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.**

077 619 7660

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(cr.36483) (2.6)

## கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

கீழ்க்காணும் உணவகங்களை நடாத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் பணிமனையில் 15.12.2021 ஆம் திகதி மு.ப 10.00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

| உணவகத்தின் பெயர் | அமைவிடம் |
|---|---|
| பிரதான உணவகம் - I | திருநெல்வேலி |
| பிரதான உணவகம் - II | திருநெல்வேலி |
| முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகபீட உணவகம் | கலாசாலை வீதி,திருநெல்வேலி. |
| மருத்துவபீட உணவகம் | திருநெல்வேலி |
| மருத்துவமாணவர் விடுதி உணவகம் | யாழ்ப்பாணம் |
| இராமநாதன் உணவகம் | மருதனார்மடம் |
| ஆனந்தகுமாரசுவாமி மாணவர் விடுதி உணவகம் | திருநெல்வேலி |
| சித்தமருத்துவ அலகு உணவகம் | கைதடி |

மீளளிக்கப்படும் கேள்விவைப்புபணமாக ரூபா 2000/= இனை மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 970000060000268இற்கும், மீளளிக்கப்படாதகட்டணமாகரூபா 500/= இனை மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம்970000060000276 இற்கும் தனித்தனியாக செலுத்திபெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுகளினை சமர்ப்பித்து கேள்விப்படிவங்களை இப்பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப்படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாக மேற் காட்டப் பட்டபடி குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி ஊடாகவோ (தொலைபேசி இல 0212226716) பெற்றுக் கொள்ளலாம்.

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்**
**26.11.2021**

(cr 36482 (2.6)

# உங்களை மறவோம் கல்லறைத் தெய்வங்களே!

அழகான பொழுதுகளாய்
உங்கள் நினைவுகள் சுமந்து நடக்கின்றோம் நாங்கள்

ஈழக்கனவை இதயத்தில் சுமந்து
இளமை வாழ்வைத்துறந்த - எம்
உள்ளம் நிறைந்த கடவுளர் நீங்கள்

கார்த்திகைத் தீபமாய்
பார்போற்றும் தெய்வமாய்
ஊர்போற்றும் உத்தமர்கள் நீங்கள்
உங்களை நாங்கள் என்றும் மறவோம்...

தேசத்தலைமையின் வழித்தடம் தவறாத
தேசக்குழந்தைகள் நீங்கள்
நேசம்மறவா மக்களின் உள்ளம் நிறைந்த
உன்னத வீரக்குழந்தைகள் நீங்கள்
உங்களை நாம் மறவோம்...

ஈழம் மலரும்
இதயம் நிறையும் என்ற
காலப்பொழுது கனவினைச் சுமந்த
கார்த்திகைத் தீபங்கள் நீங்கள்
உங்களை நாம் என்றும் மறவோம்..

காலப்பொழுதில் காத்திருந்தோம்
உங்கள் வாசல்வர கல்லறைத் தீபங்களே!
கண்ணுறங்குங்கள் என்றோ ஒருநாள் விடியும்
உங்களை நாம் என்றும் மறவோம்...

வீரக்குழந்தைகளே! விடுதலைக்கனவு சுமந்த
தேசப்புதல்வர்களே!
பாசப்புதல்வர்களே! இந்த
பார்முழுவதும் உங்கள் நினைவுகள் சுமந்து
நெஞ்சம் மறவாது
நினைவுடன் நாங்கள்
நிம்மதியாய் உறங்குங்கள்
கார்த்திகைத் தீபங்கள்
கல்லறைத் தெய்வங்களே!
உங்களை மறவோம்
என்றும் உங்கள் நினைவுடன்

உருத்திரபுரம் விமல்





# மரண அறிவித்தல்



தோற்றம் 28 . 04 . 1931

மறைவு 23 . 11 . 2021

## அமரர் திருமதி
## இராசம்மா சிவக்கொழுந்து

(ஓய்வு நிலை ஆசிரியர் – ஊரெழு கணேசா வித்தியாலயம், வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம், வசாவிளான் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்)

வசாவிளானைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா சிவக்கொழுந்து அவர்கள் கடந்த (23-11-2021) செவ்வாய்க் கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி முத்துப்பிள்ளை தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற சிவக்கொழுந்து அவர்களின் அன்பு மனைவியும், சிவகுமாரன், சிறீகுமாரன், சிறீரங்கன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலாம்பிகை, அமிர்தாம்பிகை, நீலாம்பிகை, நேசாம்பிகை, பாலாம்பிகை, கதிர்காமத்தம்பி, கமலநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மாலினியின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (29-11-2021) திங்கட் கிழமை அன்று கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
சி.சிறீரங்கன் (மகன்)
தொ.பே: 001 647 218 2205

(CR 36472) (3/6)

# வீர யாகத்தின் அகரங்கள்

மாவீரச் செல்வங்களே, தியாகத்தின் சிகரங்கள் ,
வீர யாகத்தின் அகரங்கள். காற்றோடு கலந்தவர்கள்
வீர காவியம் ஆனவர்கள்
வரலாற்றில் நிலைத்தவர்கள்.
உங்களின் கல்லறைகள் கூட பகைவனைப் பயமுறுத்தும்...!

கி.விபுலன்



# கிண்ணியா படகு விபத்து: யாழ். பல்கலையில் அஞ்சலி



யாழ்ப்பாணம், நவ.27

கிண்ணியா படகு விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

கிண்ணியா படகு விபத்தில் சிறுவர்கள் உட்பட ஆறு பேர் உயிரிழந்தனர். பலர் பாதிப்புக்குள்ளாகினர். இந்தச் சம்பவம் நாடளாவிய ரீதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியிருந்தது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் உயிரிழந்தவர்களின் ஒளிப்படங்கள் வைக்கப்பட்டு, தீபம் ஏற்றி, மலர் தூவி நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்தப் படகு விபத்துக்குக் காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. (எ-இ)



# வல்வெட்டித்துறையில் கைக்குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், நவ.27


வல்வெட்டித்துறையில் நேற்று வெள்ளிக்கிழமை வெடிபொருள் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

வீடு கட்டுவதற்காக அத்திபாரம் வெட்டும் போதே கைக்குண்டு தென்பட்டது என்றும், இது தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, பொலிஸார் விசேட அதிரடிப் படையினரின் உதவியுடன் கைக்குண்டை மீட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-20)

# பிரதேச சபையில் கண்டனத் தீர்மானம்

நாடாளுமன்றத்தில் வரவு-செலவுத்திட்ட கூட்டத் தொடரில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் ஆகியோரால் ஆற்றப்பட்ட சர்ச்சைக்குரிய நாடாளுமன்ற உரைகள் தொடர்பாகவும், “ஒரே நாடு ஒரே சட்டம்” தொடர்பான ஆணைக்குழுவின் தலைவராக கடும் போக்கு பௌத்தபிக்கு கலகொட அத்தே ஞானசார தேரர் நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் வலி.தென்மேற்குப் பிரதேசசபையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கண்டனத் தீர்மானம் மீதான விவாதத்தின் போது ஈ.பி.டி.பியினர் சபை நாகரிகத்துக்கு முரணான வார்த்தைகளைப் பிரயோகித்து தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். தவிசாளர் அவர்களை எச்சரித்ததை அடுத்து, அவர்கள் சபையை விட்டு வெளியேறினர். அதன்பின்னர் சபையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (எ-115)




# அகவையில் உதயன்



















## உதயனுடன்தான் எமது பொழுது புலருகின்றது



யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் முதன்மைப் பத்திரிகையான 'உதயன்' இன்று தனது 37ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கின்றான். 'உதயன்' நாளிதழ் ஆரம்பமாகி 36 வருடங்கள் பூர்த்தியாகி இன்று அவனுக்கு 37ஆவது பிறந்தநாள்.

ஒவ்வொரு நாளும் காலையில் உதயனைப் பார்க்கா விட்டால் எதையோ இழந்து விட்டது போன்ற உணர்வு வரும். ஈற்றில் 'உதயன்' நாளிதழைக் கையில் எடுத்துப் பார்த்த பிறகுதான் நிம்மதி கிடைக்கும். அந்த அளவுக்கு எம்மோடு ஒன்றித்து விட்ட புதினப் பத்திரிகையை அதன் பிறந்தநாளில் ஆசிகூறி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

1985ஆம் ஆண்டில் முதன்முதல் வெளியான 'உதயன்' ஒரு ரூபாதான். கால மாற்றத்தால், கடதாசி விலையேற்றத்தால் தவிர்க்க முடியாத பல காரணங்களால் இப்போது கூடிய விலையில் உதயன் எங்கள் கைகளில் தவழ்கிறான்.

எத்தனையோ முறை 'உதயன்' தாக்கப்பட்டு அலுவலக உத்தியோகத்தர்கள் சுடப்பட்டார்கள். அத்தனை இடையூறுகளையும் தாண்டி இன்று வீறு நடைபோடும் உதயனை நாம் உளமார மகிழ்ந்து வாழ்த்துகிறோம்.

நாட்டில் நடப்பவற்றை இரத்தினச் சுருக்கமாக அறியத் தருவதில் 'உதயன்' முன்னணியில் திகழ்கிறான். ஆதலால் எங்களது அபிமானப் பத்திரிகை என்ற வகையில் இன்னமும் அழகாக வெளிவந்து அளப்பரிய சேவையாற்றி அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்த வேண்டுமென்று அருளாசி வழங்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
*நல்லை ஆதீன குருமுதல்வர்*

## தமிழ்த் தேசியப்பரப்பில் திடமான நடை தொடரட்டும்

துல்லியமான செய்திகள், நடுநிலைமை, அஞ்சாமை எனப் பத்திரிகைக் கோட்பாட்டுக்கு இணங்க செயற்பட்டுவரும் உதயன், தொடர்ந்தும் தன்பணி தவறாது தமிழ்த் தேசியப் பரப்பில் செயற்பட வேண்டும் என்று இறையாசீருடன் வாழ்த்துகின்றேன்.


உதயன் பத்திரிகை தமிழர்களின் குரலாக ஓங்கி ஒலித்து இன்று 37ஆவது ஆண்டுக்குள் காலடி எடுத்து வைப்பதையிட்டும், அதை முன்னிட்டு வெளிவரும் சிறப்பிதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டும் மிக மகிழ்வடைகின்றேன்.

உதயன் பத்திரிகை யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்ட மூன்றாவது செய்திப் பத்திரிகையாக கடந்த 37 ஆண்டுகளாக இடையறாத் தொடராகத் தமிழ் மக்களுக்குச் செய்திப்பணி ஆற்றுவதற்காகப் பல சவால்களை எதிர்கொண்டு சாதனைகள் பலவற்றை நிலைநிறுத்தி எத்துயர் வரினும் நிமிர்ந்து நிற்பேன் தொடர்ந்து வருவேன் என எடுத்தியம்பிக் கொண்டிருக்கின்றது. உதயன் பத்திரிகையின் இந்தத் தினசரி வெளியீட்டுப் பணிக்காக இரவு பகலாகப் பசி நோக்காது, கண் துஞ்சாது பணியாற்றும் நிர்வாக இயக்குநர், ஆசிரிய குழுவினர், செய்தியாளர்கள் மற்றும் பணியாளர்கள் உடனுழைப்பாளர்கள் அடங்கிய குடும்பத்தை மனதாரப் பாராட்டுகின்றேன்.



தமிழர்களின் குரலாக, நெருக்கடிகள், நெருக்குவாரங்கள் மிகுந்த காலகட்டத்தில் செயற்பட்டுவந்த உதயன், ஓர் அரணாக தன் பாதையை இனியும் நேர்த்தியாக்க வேண்டும். அதற்கு இறையருள் கிடைக்க வேண்டும் என்று ஆசிக்கின்றேன்.

**கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை**
*ஆயர் யாழ்ப்பாண மறைமாவட்டம்*




## தமிழ் மக்களுடைய காவலனாக நெறிதவறாமல் பயணிக்கின்றான்



மக்களின் மனம் நிறைந்த தமிழ் நாளிதழான உதயன், 1985ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி வெளிவந்த முதலாவது பத்திரிகை தொடக்கம் கடந்த வாரம் வரை பிரதம ஆசிரியராகப் பணிபுரிந்த தலைமகனின் இழப்போடும், தவிப்போடும் தன் 37ஆவது அகவையில் கால்பதிக்கின்றான்.

கடந்து வந்த அகவைகளில் நேரடியாகக் காட்டப்பட்ட கடும்கண்காணிப்பு, விடுக்கபட்ட உயிர் அச்சுறுத்தல்கள் என்பனவற்றுக்கிடையிலும், தமிழ் மகள் எதிர்கொண்ட நெருக்கடிகளையும், துன்பியல்களையும் சர்வதேசம் அறிய வேண்டுமென்ற வேணவாவுடன் எதிர்ப்பட்ட தடைகளைத் தகர்த்து நாடும் பொழுதும் வீறுகொண்டு உதயன் வெளிவந்து கொண்டிருக்கின்றான்.

முக்கிய செய்திகள், அரசியல் செய்திகள், இன்றைய பெருந்தொற்றுச் செய்திகள், குடாநாட்டுச் செய்திகள் என்பவற்றுடன் முச்சந்தி முரளி, அழுத்தமான ஆசிரியத்தலையங்கள் என்பவற்றுடன் காத்திரமாக வலம்வரும் உதயனின் ஊடகப் பயணம் போற்றுதற்குரியதே. நிபந்தைகளுக்குப் பணியாமலும், நிர்ப்பந்தங்களைக் கண்டுகொள்ளாமலும் மக்கள் சேவையே மாண்பெனக் கருதி உன்னதமாகப் பயணித்துக்கொண்டிருக்கும் உதயனின் சேவை மென்மேலும் சிறக்கவும் வளரவும் என் ஆசிகளை அன்புடன் அறியத்தருகின்றேன்.

**ஸ்ரீலஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்**
பிரதம குரு
வல்வை ஸ்ரீ முத்துமாரி
அம்மன் தேவஸ்தானம்

## உதயன் பத்திரிகை நடமாடும் பல்கலை



உதயன் பத்திரிகை 37ஆவது ஆண்டில் கால் பதிக்கின்றது என்பது ஒரு மகிழ்வான செய்தியாகும். இந்த மகிழ்வான நேரத்தில் உதயன் பத்தரிகைக் குடும்பத்துக்கு எமது இறையாரசீர்மிக்க வாழ்த்துக்களையும் ஆசீர்களையும் தெரிவிக்கிறோம்.

இன்று பத்திரிகைகள் அறிவித்தல் அறிவுறுத்தல் விளக்குதல் மகிழ்வித்தல் விளம்பரப்படுத்தல் என்ற தன் பணிகளால் மக்களுக்கு பெருந்துணை புரிந்து வருகின்றன. உதயன் பத்திரிகையானது நடமாடும் பல்கலைக் கழகமாக நாட்டின் பட்டிதொட்டி எங்கும் சென்று செய்திகளை அறிக்கையிட்டு மக்கள் மத்தியில் நடக்கும் நிகழ்வுகள் பற்றி மக்களிடையே ஒரு கருத்துருவாக்கத்தை உருவாக்கி மக்களை நெறிப்படுத்துகின்றது.

தொடரட்டும் உதயன் பத்திரிகையின் சிறப்புப் பணி என இறையாசீருடன் வாழ்த்துகிறோம்.

**கலாநிதி இம்மனுவல் பெர்னாண்டோ ஆண்டகை**
*ஆயர் மன்னார் மறைமாவட்டம்*

## ஈழத்தின் இதயமாக உயர்ந்தார் உதயன்



வாசிக்கத்துடிக்கும் வாசகர்களுக்கும், சாதிக்கத்துடிக்கும் சாதனையாளர்களுக்கும் உயிர் கொடுக்கும் உதய சூரியனாய் யாழ். மண்ணில் உலா வந்து கொண்டிருக்கும், அச்சு ஊடகத்தில் அசையாது சிம்மாசனம் இட்டு வீற்றிருக்கும் உதயன் பத்திரிகைக்கு என் புன்னகை தழுவிய நல்லாசி வழங்குவதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகிறேன்.

கொரோனா எனும் கொடியோனால் மக்கள் கொத்து கொத்தாக மடிந்த போதும் கொண்ட கொள்கை மாறாமல் ஈழத்தமிழ் பரப்பில் இன்று வரை வெற்றி நடை போட்டுக் கொண்டிருக்கும் உதயனுக்கு உணர்வு பூர்வமான நல் வாழ்த்துக்கள். வடக்கின் வசந்தமாக ஈழத்தின் இதயமாக உதயன் எனும் நாமம் சூடி எண்ணிலடங்கா இன்னல்கள் பல தாண்டி 37ஆவது அகவையில் கம்பீரமாக கால் பதிக்கும் உனை வாழ்த்த வார்த்தைகளே இல்லை. பல நூற்றாண்டு தாண்டி பல கோடி இதயங்களை வெல்லவும் பாரினில் மணம் பரப்பி ஒளி வீசும் தீபமாய் எங்கும் வலம் வர வழமாய் வாழ வாழ்த்துகிறேன்.

**மௌலவி ஏ.எம்.றழீம் (மக்கி)**
பிரதம இமாம் முஹியித்தீன் ஜும்மாப்பள்ளி,
பெரிய கடை, யாழ்ப்பாணம்.

## தமிழ் மக்களின் மனங்களில் நீங்காமல் நிறைந்திருப்பான்



காலத்தின் சேவையாகவும் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ற சேவையாளனுமாக தன்னை அடையாளப்படுத்திய உதயனானவன் பத்திரிகைத்துறையில் தனது 36 வயதைப் பூர்த்தி செய்து 37ஆவது வயதில் அடியெடுத்து வைக்கின்றான். உதயன் நாழிதழ் தனது பணியினை தர்மத்தின் வழிநெடுக்கே ஆற்றிட அகமகிழ்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துகொள்கின்றோம். பல இன்னல்களுக்கு மத்தியில் மக்களிடத்தே செய்திகளை கொண்டு சென்று சேர்க்கும் சேவையைச் செய்த உதயன் நாளிதழானது அன்றாட மக்கள் வாழ்வியலில் மறையாத இடத்தைப் பிடித்துள்ளது.

மக்கள் மனதினில் என்றும் நிலைத்திருக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

**சிவஸ்ரீ ஜெ.மயூரக்குருக்கள்**
**பிரதமகுரு, ஆதிவிநாயகர் திருக்கோவில், வவுனியா**



## நீண்டு நிலைபெறவேண்டும்

உலகளாவிய ரீதியில் இன்று ஊடகத்துறை நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக விரிவடைந்து உள்ளது. அத்துடன் பல்வேறு காரணங்களை முன்வைத்து பலவித சவால்களையும் சந்திக்கும் சந்தர்ப்பங்களும் அதிகரித்துள்ளன. இவற்றுக்கு மத்தியில் யாழ்ப்பாணத்தில் கடந்த முப்பத்தேழு வருடங்களாக தனக்கென தனி இடத்தை தக்கவைத்து உதயன் பத்திரிகை தினமும் உலா வருவது சிறப்பாகும்.

எவ்வளவுதான் நவீன தொழில் நுட்ப வசதிகளுடான செய்திகள் பரப்பப்பட்டாலும் தினசரிப் பத்திரிகைகள் மூலம் செய்திகளை அறிந்து கொள்ளும் ஆர்வலர்கள் பலர் இருக்கவே செய்கின்றனர். காலை எழுந்தவுடன் பத்திரிகை கடையை நோக்கி விரையும் மக்கள் செய்திகளை அறிவதில் அவர்களுக்குள்ள ஆர்வத்துக்கு எல்லாம் வடிகாலாக அமைவது எமது பத்திரிகைகளே. இதில் உதயன் முக்கிய இடம் வகிக்கின்றான் என்றால் மிகையாகாது. பல்வகை புதினங்களையும் வழங்கி வரும் 'உதயன்' மேலும் நீண்ட காலம் நின்றுழைக்க ஆசி வேண்டி எல்லாம் வல்ல நல்லைக் கந்தப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

**தவத்திரு வேலன் சுவாமிகள்**
**சிவகுரு ஆதீனம், யாழ்ப்பாணம்.**

## உதயனின் சாதனைப் பயணம் உறுதியுடன் தொடரும்



உதயன் என்ற பெருவிருட்சம் இன்றோடு தன் 37ஆவது ஆண்டில் விழுது பரப்பி வியாபித்து நிற்கின்றது. கடந்துவந்த 36 வருடங்களும் உதயன் சந்தித்த சோதனைகளும், நிகழ்த்திக்காட்டிய சாதனைகளும் தமிழ் ஊடகப் பரப்பில் தனியொரு வரலாறாக நிலைத்து நிற்கும்.

உதயனை ஆரம்பித்த தருணத்தில்கூட இந்தளவுதூரம் ஓர் இனத்தின் குரலாக கொண்டாடப்படும் ஊடகமாக அடையாளப்படுத்தப்படும் என்ற எண்ணமே இருந்ததில்லை. ஆனால், கொண்ட கொள்கையில் குன்றிடாத வேகமும் இலட்சியத்தில் இருந்து தடம்மாறாத பயணமும் ஊடக நேர்மையும் மக்கள் நலனும் கொண்டு உதயன் தொடர்ச்சியாக வெளிவந்தமையும் அதற்கு மக்கள் காட்டிய ஆதரவுமே இந்த உன்னத நிலையை நாம் அடைவதற்குக் காரணிகளாகின.

உதயனின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரும், ஸ்தாபக ஆசிரியரும் வாழ்நாள் பிரதம ஆசிரியருமான ம.வ.கானமயில்நாதனை இழந்ததால், உதயன் வரலாற்றில் முதல்முறையாக அவர் இல்லாத ஓர் ஆண்டு நிறைவை எதிர்கொள்ள வேண்டிய நிலை. ஆயினும், இன்னும் உரத்தோடும் நேர்மைத் திறத்தோடும் பிரதம ஆசிரியர் அமைத்த பாதைவழியே தொடர்ந்தும் உதயன் பயணிப்பான் என்பதை உறுதி செய்கின்றேன்.

உதயனின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த பணியாளர்கள், விளம்பரதாரர்கள், விநியோகஸ்தர்கள், வாசகர்கள், படைப்பாளர்கள், ஏனைய ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் நன்றிகளும் வாழ்த்துக்களும்;.

**ஈ.சரவணபவன்**
*உதயன் குழுமத் தலைவர்,*
*முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்*

## தொடரட்டும் உதயனின் காத்திரமான பணிகள்!



இலங்கையின் வடக்கு மாகாணத்தில் இருந்து கடந்த 36 ஆண்டுகளாக வெளிவந்த உதயன் பத்திரிகையானது, இன்று 37ஆவது அகவைக்குள் செல்வதையிட்டு வெளிவரும் சிறப்பு இதழுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.


ஊடகமானது துணிவு, நடுநிலைமை, அஞ்சாமை ஆகிய பண்புகளைக்கொண்டு திடமாகச் செயற்பட வேண்டும். இந்தப் பண்புகளை தனக்கென வரித்துக்கொண்டு இலங்கையினதும் வடக்கு மாகாணத்தினதும் ஊடகப் பரப்பில் ஆக்கபூர்வமான செயற்பாட்டை உதயன் பத்திரிகை வழங்கி வருகின்றது என்றால் அதை மறுத்துரைப்பதற்கில்லை.

உதயன் பத்திரிகையானது இனங்களுக்கிடையே நல்லிணக்கையும், அபிவிருத்தியையும் காத்திரமாக ஏற்படுத்தும் வகையில் இனியும் செயற்பட வேண்டும் என்று வாழ்த்துகின்றேன். மும்மணிகளின் ஆசி உண்டாகட்டும்.

**கௌரவ மஹிந்த ராஜபக்ச**
*பிரதமர்,*
*இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு.*




## எவருக்கும் அடிபணியாத 'உதயன்' நீடூழி வாழட்டும்



'துணிச்சல்மிக்க எவருக்கும் அடிபணியாத 'உதயன்' பத்திரிகைக்கு எனது பிறந்தநாள் வாழ்த்துக்கள். 'உதயன்' மக்கள் மனங்களில் தொடர்ந்து நீடூழி வாழ வேண்டும்.

சாதாரண மக்களுக்கு உண்மையான செய்திகளைக் கொண்டு செல்வது பத்திரிகைகளின் பிரதான கடமை. மக்கள் எப்போதும் தங்களுக்கு முக்கியமான விடயங்கள் சம்பந்தமாக உண்மைகளை அறிவது அவர்களின் மறுக்க முடியாத உரிமை. அதைப் பத்திரிகைகள் நிறைவேற்றுவது ஒரு புனிதமான பணி.


மக்களுக்கு உண்மைகள் சென்றடைந்தால்தான் அவர்கள் அந்த உண்மைகளின் அடிப்படையில் தங்களது நியாய பூர்வமான முடிவுகளை எடுக்கலாம்.

அந்தவகையில், யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகை தன்னால் இயன்றளவுக்கு அந்தக் கடமையை நிறைவேற்றி வந்திருக்கின்றது. அதைத் தொடர்ந்து நிறைவேற்ற வேண்டும் என்பது எனது அவா.

மக்களுக்குச் சேவை புரிந்து அதன் மூலமாக எங்களுடைய மக்கள் தங்கள் கருமங்கள் சம்பந்தமாக தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்கு 'உதயன்' தொடர்ந்து செயற்பட வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்

**இரா.சம்பந்தன்**
*நாடாளுமன்ற உறுப்பினர்,*
*திருகோணமலை மாவட்டம்,*
*தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.*

## இன நல்லிணக்கத்துக்காக பாடுபடுகின்றான் உதயன்!



பல்வேறு அரசியல், சமூக, பொருளாதார, இருப்பு மற்றும் கலாசார சவால்களுக்கு அவ்வப்போதைய காலகட்டங்களில் முகம் கொடுத்து இலங்கை பத்திரிகைத்துறையின் வரலாற்றில் 'உதயன்' என்ற நாமத்தை பதித்த இந்தப் பத்திரிகைக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் அக மகிழ்வடைகிறேன்.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இருந்து நாளாந்தம் பத்திரிகை ஒன்று தொடர்ச்சியாக வெளியிடுவது வரவேற்கத்தக்க விடயமாகும். பல்வேறு அச்சுறுத்தல்கள், துன்புறுத்தல்கள், மற்றும் இடையூறுகளை எதிர்கொண்டு, அனைத்தையும் தாண்டி ஓர் அச்சுப்பத்திரிகையாக அதன் 36 வருட பயணம் என்பதை சாதனையாகப் பார்க்கிறேன்.

இலங்கையின் பிரிக்கமுடியாத முற்போக்கு தேசியவாதத்தின் பாதுகாப்பின்மையை இயக்கும் பிரதான இயங்கியலை அடையாளம் காணுவதும் அதனைத் தேற்கடிக்கும் பொறுப்பும் பத்திரிகைத் துறைக்கும் உண்டு என நம்புகிறேன். காலத்துக்கு ஏற்ற மதிப்பீடுகளை பகுப்பாய்வு ரீதியாக அணுகி, நாம் காண விரும்பும் ஐக்கிய இலங்கைக்கு வலுச்சேர்க்கும் ஊடகமாக 'உதயன்' தொடர்ந்து உதித்திட வாழ்த்துகிறேன்.

ஜனநாயகத்துக்கான பரந்த சவால்களைத் தோற்கடிக்கவும், உண்மையான மக்கள்சார், சமூக விழுப்பியலை அஞ்சாது துணிச்சலுடன் வெளிப்படுத்தவும், பிரதான மூன்று சமூகங்களுக்கிடையிலும், மும்மொழி பத்திரிகைகளுக்கிடையிலும், ஊடகவியலாளர்களுக்கிடையிலும் தேச நலனுக்காக ஐக்கியத்தின் அடையாளமாகவும், நாட்டைப் பாதுகாக்கவும், இலங்கையின் பன்முக நீடித்த கலாசார விழுமியங்கள் வேரூன்றவும் நவீன ஊடக கற்பிதங்களுடன் உதயன் பயணிக்க வாழ்த்துகிறேன். நவீன ஊடகங்களின் செயற்பாட்டு இயல்பை உன்னிப்பாக அவதானித்து, திறந்த இயல்பில், தர நியமங்களை பாதுகாத்த வண்ணம் தங்கள் வாசகர்களுக்கு புதிய ஊடகங்களின் அனுகலை எதிர்வரும் காலங்களில் வழங்கி வாசகர்கள் வட்டத்தை விரிவுபடுத்தி ஊடக பரப்பில் புதிய அத்தியாயங்களை நிலைப்படுத்தி முன்னேற வாழ்த்துகிறேன்.

வெறுமனே தகவல்கள், நிகழ்வுகளை மட்டும் தராமல், மக்களின் தேவைகளுக்காக, குறைகளுக்குத் தீர்வு காண்பதற்காக செய்திகளை தந்த உதயன், வாசகர்களின் நீங்காத ஆதரவோடு, அதே உத்வேகத்துடனும், துணிச்சலுடனும் 37 ஆண்டுகளைத் தொட்டு, வெற்றி பயணத்தை தொடரும் இந்த நன்னாளில், 'உதயன்' ஜனநாயகத்தின் நான்காவது தூணாக, சுதந்திரமாக செயற்பட்டு, தன் பணியை செம்மையாகச் செய்து வர என்றும் உறுதுணையாக இருக்கும் பிரதம ஆசிரியர் குழாமுக்கும், ஆய்வு சார் விடயங்களை சமூகமயப்படுத்தும் ஏனைய பிரதி ஆசிரியர் குழாமுக்கும், ஏனைய நிர்வாகத்தினருக்கும் ஊழியர்கள் உள்ளிட்ட தங்கள் மனித வளங்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சஜித் பிரேமதாஸ**
*எதிர்க் கட்சித் தலைவர்*

## இனத்தின் வழிகாட்டியாய் என்றும் நிலைக்கட்டும்!



தமிழ்த் தேசியத்தின் நாளிதழாக வெளிவந்து கொண்டிருக்கும் உதயன் பத்திரிகையின் 37ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு, வெளிவரும் சிறப்பு இதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்வு அடைகின்றேன்.

தமிழர் தேசத்தில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட வரலாறு 70 ஆண்டுகளைக் கடந்து நிற்கின்றது. 1958, 1977, 1983 தமிழினத்துக்கு எதிரான இனக்கலவரங்களும் 1972களிலிருந்து ஆயுதப் போராட்டங்களும் நிகழ்ந்திருக்கின்றன. லட்சக்கணக்கான மனிதங்களும் உயிர்களும் மதிப்பிட முடியாதளவு உடைமைகளும் சொத்துக்களும் அழிக்கப்பட்டன. இந்த நெருக்கடி மிகுந்த காலகட்டத்தில், யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் உதயன் நாளேடானது, அபரிமிதமான பணியை தமிழர்களுக்காகவும் தமிழ்த் தேசியத்துக்காகவும் ஆற்றியிருக்கின்றது என்று சொன்னால், அதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை.

இலங்கையில் அனைத்துமொழி ஊடகத்துறையும் உயிர் அச்சுறுத்தல்களுக்குள்ளாகின. ஊடகவியலாளர் ஆசிரியர்கள் கொல்லப்பட்டனர். அச்சம்பவங்களுக்கு இன்று வரை நீதி கிடைக்கவில்லை. அந்த நிறுவனங்கள் பல மூடப்பட்டுவிட்டன. ஆனால், தமிழின தமிழ்த்தேச விடுதலைக்காகத் துணிச்சலுடன் அர்ப்பணித்து நிற்கும் ஊடகத்துறையில் உதயன் நாளேடும், உதயன் குழுமமும் கடந்துவந்த அத்தனை ஆண்டுகளும் தமிழின விடுதலை வரலாற்றிலும் முக்கியம் பெற்ற வரலாற்றுக் காலமாகும். உதயன் நாளேடும், உதயன் குழுமமும் தொடர்ந்து சிறப்புற வளம்பெற்றுத் தமிழினத்தை வளர்க்க வேண்டும். தமிழர் தேசமும் தமிழ் இனமும் விடுதலை பெற வேண்டும் என வாழ்த்தி நிற்கின்றேன்.

**மாவை சோ.சேனாதிராசா**
தலைவர் தமிழரசுக்கட்சி

# உதயன் என்றும் இடையறாத இழை



செய்தித்தாள்களை வெறும் செய்தி அறிவிப்புகளாகக் கொள்ளும் ஒரு கருதுகோள், ஊடக உலகில் வழமையாக நிலவி வருகிறது. ஆனால் இடையறாது இயங்கிக் கொண்டிருக்கும் மக்கள் தொடர்பு இழை என்றே செய்தித்தாள்களை மதிப்பிட வேண்டியிருக்கிறது. பல தளங்களில், பலருடைய கரங்களில் உருவாகும் காலப்பதிவு இழை தான் பத்திரிகை என்பது.

37ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் 'உதயன்' கடந்த கால மற்றும் நிகழ்காலங்களில் களத்திலிருந்து பணியாற்றுபவர் முதல் கதிரையிலிருந்து செயற்படுபவர்வரை அனைவரின் அர்ப்பணிப்பினாலும் உருவானது என்றே சொல்லவேண்டும். 'இடுக்கண் அழியாமை' என்ற திருக்குறள் அதிகாரத்தின் பொருள்விளக்கம் 'உதயன்' என்றே கூறலாம்.

'அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற இடுக்கண் இடுக்கண் படும்'

என்ற வள்ளுவர் வாக்குக்கு வடிவம் கொடுத்தது போல, பல நெருக்குவாரங்களுக்கு மத்தியிலும் மனம் அழியாமல் தலைநிமிர்ந்து நிற்கிறான் 'உதயன்'. எழுத்துப்பணி என்பது தன்னலம் கருதாத ஒரு தொடர் இயக்கம் என்பதை நிரூபித்துள்ளான் 'உதயன்'. இடர்காலங்களிலும் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு கணினியுகத்திலும் கால்பதித்து நிற்கின்றான் 'உதயன்'. செறிவு குறையாத எளிமை, ஓரம் சாராத நடுவு நிலைமை, எதிர்மறை தவிர்த்த ஆக்க அணுகுமுறைபோன்ற பண்புகளை ஆதாரமாகக் கொண்டு, 'உதயன்' மேலும் பல ஆண்டுகள் பயணித்து தமிழுக்கும், மக்களுக்கும் தன் பணியைத் தொடர்ந்து வெற்றிகரமாக மேற்கொள்ள உளமார்ந்த வாழ்த்துக்கள்.

**ராகேஷ் நட்ராஜ்**
*இந்திய துணைத்தூதுவர்*

# நேர்த்தியான பணிகளால் மனங்களை வென்றுள்ளான்




தமிழ் மக்களின் அபிமானத்தைத் தனதாக்கி, போர்க் காலத்திலும் சரி, பல்வேறு இக்கட்டான நேரத்திலும் சரி துணிச்சலுடன் ஊடகப் பணியாற்றிவரும் உதயன் பத்திரிகை இன்று 37ஆவது அகவைக்குள் கால்பதிப்பதை முன்னிட்டு வெளிவரும் சிறப்பிதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஊடகப் பணியென்பது அவ்வளவு இலகுவான பணியல்ல. அதிலும், போர்க்காலத்தில் இந்தப் பணியை ஆற்றுவதென்பது மிகவும் சவாலானது மற்றும் பாரதூரமானது. அந்தப் பணியை நேர்த்தியாக ஆற்றிக்கொண்டிருப்பதால்தான் இன்று தமிழ் மக்களின் மனங்களில் உதயன் நிறைந்துள்ளான்.

போரின் பின்னரான நாட்டின் மறுகட்டுமானத்துக்கும், அபிவிருத்திக்கும், நல்லிணக்கத்துக்கும் உதயன் வழங்கிவரும் பங்களிப்புக்கு நன்றியும் பாராட்டும் தெரிவிப்பதுடன், இந்தப் பணி தொடர வேண்டுமெனவும் ஆசிக்கின்றேன்.

**கௌரவ நாமல் ராஜபக்ச**
*அமைச்சர், விளையாட்டுத்துறை,*
*இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு.*




# எதற்கும் துணிந்தவன்



பத்திரிகைத்துறையில் ஒரு மைல்கல்லாக இருப்பது உதயன் பத்திரிகை. இதை எவரும் மறுக்கவும் மறக்கவும் முடியாது.

ஈழ விடுதலைப் போராட்டத்தின் உச்சகட்டமான காலப்பகுதியில் இலங்கை அரசு பொருளாதாரத்தடை விதித்திருந்த நேரத்தில், பத்திரிகை அச்சுப் பொருள்களுக்கு மாபெரும் தட்டுப்பாடு நிலவிய காலகட்டத்திலும் சோர்ந்துவிடாமல் சாதாரணக் கடதாசிகளில் கூட உதயன் பத்திரிகை அச்சிட்டு மக்களின் பிரச்சினைகளை வெளியுலகத்துக்குக் காட்டியது ஒரு வரலாற்று சம்பவம்.


தமிழ் பேசும் மக்களுக்காக குரல் கொடுத்து உதயன் பத்திரிகை சந்தித்த உயிர், பொருள் இழப்புகள் சொல்லில் அடங்காதவை. அரசு மற்றும் அரசியல் தரப்புகளின் தவறுகளைச் சுட்டிக்காட்டுவதற்கு உதயன் எப்பொழுதும் தயங்கியதில்லை.

மழை, வெள்ளம், புயல் போன்ற இயற்கைப் பேரிடர் நேரங்களிலும் உதயன் பத்திரிகை தனது சேவையை தொடர்ந்து முன்னெடுத்து வருவது பாராட்டுதற்குரியது.

உதயன் பத்திரிகையின் தரம் வாய்ந்த முழுமுதல் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக செய்யப்பட்டு வரும் ஆசிரியர் பீடத்தினருக்கும் இதர பணியாளர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளை தெரிவிப்பதோடு உதயன் பத்திரிகையானது மேலும்மேலும் பல அகவைகள் கண்டு, தமிழ் மக்களுக்காக சேவைகள் செய்யவேண்டும் என்று வாழ்த்துகின்றேன்

**செல்வம் அடைக்கலநாதன்**
*நாடாளுமன்ற உறுப்பினர்,*
*வன்னி தேர்தல் மாவட்டம்.*

# நெருக்கடியான காலத்திலும் செம்மையான மக்கள் பணி!



இலங்கையின் வட பகுதியில் கடந்த 36 ஆண்டுகளாக மக்கள் குரலாக ஒலித்துக் கொண்டிருக்கும் உதயன் தினசரிப் பத்திரிகை தனது இதுவரையான நீண்டகாலச் சேவையை இனிதே நிறைவுசெய்து 37ஆவது ஆண்டில் காலடி எடுத்துவைக்கும் இந்தத் தருணத்தில் வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

யாழ்ப்பாணத்தில் பல தமிழ்ப் பத்திரிகைகள் வெளிவந்தபோதும் காலத்துக்குக் காலம் நாட்டில் ஏற்பட்ட குழப்பநிலைகள் இன்னும் பிற காரணிகளால் பல பத்திரிகைகள் தமது சேவைகளை இடைநிறுத்தி பின்வாங்க வேண்டிவந்தது. ஆனால் உதயன் பத்திரிகையும் அதன் ஆசிரிய குழாமும் மிகக் கடுமையாக உழைத்த தன் பயனாக நெருக்கடியான காலகட்டங்களில் கூட தமது பணியை இயலக்கூடிய அளவு செம்மையாக மக்களுக்கு வழங்கிவந்துள்ளன. இது பாராட்டுக்குரியது. காகிதாதிகள் தட்டுப்பாடான நேரத்திலும் மற்றும் அச்சிடும் இயந்திரத்திற்கான மை போன்றவை கிடைத்தற்கரியதாகக் காணப்பட்ட காலங்களில் கூட தமது விடா முயற்சியின் பயனாக கடித உறைகளுக்குப் பயன்படும் தாள்கள் மற்றும் கோப்புக்கள் கட்டப்படும் தடித்த மட்டைகள் என்பவற்றில் அச்சேற்றி அவ்வப்போது முக்கிய செய்திகளை மக்களுக்கு உதயன் பத்திரிகை வழங்கி வந்துள்ளது. பல ஆண்டுகாலம் அப்பளுக்கின்றி அரசியல் பக்கச்சார்பில்லாது நடுநிலையாக உண்மையானதும் நேர்மையானதுமான செய்திகளை மக்களுக்கு தொடர்ந்து உதயன் வழங்கவேண்டும் என வாழ்த்துவதுடன் உதயன் நிறுவனத்தின் உரிமையாளர், ஆசிரியபீடம், அனைத்து உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து நிறைவு செய்கின்றேன்.

**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**
நாடாளுமன்ற உறுப்பினர்
யாழ் மாவட்டம்

# தனித்துவமான செய்திகளுடன் முத்திரை பதித்தான் உதயன்!



உதயன் பத்திரிகை 37ஆவது வருட அகவையைக் கொண் டாடுவதில் பெரும் மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடந்த 37 வருடகாலமாக தமிழ் மக்கள் மத்தியில் ஊடக தர்மத்தை பேணுவதுடன் தனித்துவமான நடுநிலையான செய்திகளை வழங்கி வருவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். உதயன் பத்திரிகையை தமிழ் பேசும் மக்களின், குறிப்பாக வடக்கு கிழக்கு மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஓர் ஊடகமாக நான் பார்க்கின்றேன்.

அலையலையாய் வரும் செய்திகளை நிலைபெறும் விதமாய் பல உண்மை முகத்துடன் உலகுக்கு வெளிப்படுத்தும் விதம் அளப்பெரியது. மேலும் எதிர்வரும் காலங்களில் நமது மக்களின் எண்ணங்களையும் சிந்தனைகளையும் வெகுஜன ஊடகம் என்ற அடிப்படையில் சிறப்பான முறையில் தங்களது சேவை அமைய வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.


**தவராசா கலையரசன்**
*நாடாளுமன்ற உறுப்பினர், அம்பாறை மாவட்டம்.*

# சவால்களை எதிர்கொண்டு விருதுகளாக மாற்றியவன்!

தமிழர் தாயகத்தில் 36 ஆண்டுகளை நிறைவுசெய்து, இன்று 37ஆவது ஆண்டுக்குள் செல்லும் உதயன் பத்திரிகையை அதன் பிறப்பு நாளான இன்று வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன்.

பிராந்தியப் பத்திரிகை ஒன்றுக்கான இடத்தை ஆரம்பத்திலிருந்து நிரப்பிக் கொண்டிருக்கும் உதயன் பத்திரிகையானது ஊடகம் என்பதன் அர்த்தப்பாட்டுடன் தனது பணியைத் தொடர்ந்து முன்னெடுப்பது மிக மகிழ்ச்சிக்குரியதே.

இதன் வளர்ச்சி என்றென்றும் தொடரவேண்டும் என்பதே எமது அவா. ஊடகமானது அழுத்தங்களையும், எதிர்ப்புகளையும், அச்சுறுத்தல்களையும், பிரச்சினைகளையும் எதிர்கொண்டேயாகவேண்டும் என்பதற்கு உதயன் மாத்திரம் விதிவிலக்கான ஒன்றல்ல. ஊடகப்பரப்பில் பல சாதனைகளையும் விருதுகளையும் வென்றுள்ள உதயன் அதற்காக எதிர்கொண்ட சவால்கள் கணக்கிலடங்காதவைகளாகும். அவற்றினால் துவண்டு போகாத ஒன்றாக நிமிர்ந்து நிற்கும் உதயன் மக்களுக்காக செய்திகளை வழங்கும் பத்திரிகையாக என்றென்றும் மிளிர வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.



**கோவிந்தன் கருணாகரம் (ஜனா)**
நாடாளுமன்ற உறுப்பினர், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு

# அகவை



## சிங்கள ஆக்கிரமிப்புக்கு எதிராக துணிச்சல் மிகுந்த ஊடகப் பணி





உதயன் பத்திரிகை தனது ஊடகப் பணியில் 36 ஆவது ஆண்டினை வெற்றிகரமாக நிறைவு செய்வதனை முன்னிட்டு உதயனை வாழ்த்துதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பேருவகை அடைகின்றது. தமிழ் மக்களது உரிமைப் போராட்ட வரலாற்றில் உதயன் பத்திரிகையின் பங்கும் பணியும் என்றும் மறக்க முடியாதவை. உதயன் பத்திரிகையானது ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து தமிழ் மக்களின் உரிமைக்காகவும், தமிழ் மக்கள் மீதான சிங்கள பௌத்த பேரினவாதத்துக்கு எதிராகவும் குரல் கொடுத்து வந்துள்ளது. குறிப்பாக தமிழ்த் தேசத்தின் மீது சிங்கள தேசம் ஆக்கிரமிப்பு யுத்தத்தை கட்டவிழ்த்து விட்டிருந்த நிலையில் யுத்த களத்திலிருந்து வெளிவந்த துணிச்சல் நிறைந்த பத்திரிகையாகும். வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதளவு நெருக்கடிகள் மத்தியிலும் பல உண்மைகளை யுத்த களத்திலிருந்து வெளிப்படுத்துவதில் துணிந்து செயற்பட்டமையினால் அதன் ஊடகவியலாளர்கள் பலர் அரசினாலும் அதன் துணை இராணுவக் குழுவினராலும் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். பத்திரிகை அலுவலமும் அதன் பொறித்தொகுதியும்கூட மோசமாக தாக்கிச் சேதமாக்கப்பட்டது.

அவ்வாறான அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாது மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக குரல் கொடுத்தமையால் உதயன் பத்திரிகை மீது மக்களுக்கு அபரிமிதமான நம்பிக்கையும் மரியாதையும் வளர்ந்தே வந்துள்ளது. உதயனின் இத்தகைய அர்ப்;பணிப்பான செயற்பாடுகளால் மக்கள் கண்ணைமூடிக்கொண்டு நம்பும் நிலைகூட இருந்தது. இந்த நிலையில் அந்த நம்பிக்கையை துஷ்பிரயோகம் செய்யாத வகையில், மக்களுக்கு சரியான முறையில் உண்மையாகவும் நேர்மையாகவும் தகவல்களை வழங்கி, அறிவூட்டி வழிகாட்டிச் செல்ல வேண்டிய பொறுப்பும் கடமையும் உதயன் பத்திரிகை நிறுவன உரிமையாளருக்கும் ஆசிரியர்கள், செய்தியாளர்கள் உத்தியோகத்தர்களுக்கும் உண்டு. அந்தக் கடமையை உதயன் பத்திரிகை சரிவர ஆற்றவேண்டும்.

ஒவ்வொரு பத்திரிகையின் ஆசிரியர் பீடமும் தனித்துவமான கொள்கைகளைக் கொண்டிருக்க முடியும். எனினும் மாற்றுக் கருத்துக்கள் முன் வைக்கப்படும்போது, அந்தக் கருத்துக்களுக்கும் இடமளித்து, அத்தகைய செய்திகளையும் பிரசுரித்து, மக்கள் மத்தியில் விவாதங்கள் ஏற்படுத்தப்படக் கூடிய வகையிலும், அத்தகைய விவாதங்களின் மூலம் மக்களாகவே சிந்தித்து முடிவெடுக்கக் கூடிய வகையிலான கலாசாரத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் முற்போக்காகச் செயற்படுவதோடு, தனது கொள்கைகளையும் வெளிப்படுத்துவதே சிறந்த ஊடக தர்மமாகும். அந்தவகையில், ஏனைய சில ஊடகங்கள் மாற்றுக்கருத்துகளை இருட்டடிப்பு செய்வதுபோல் செயற்படாமல், மாற்றுக் கருத்துக்களுக்கும், அதன் மூலம் ஏற்படக்கூடிய விவாதங்களுக்கும் இடம் வழங்கக்கூடிய வகையில் உதயன் பத்திரிகை முன்னின்று செயற்படவேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

இலங்கைத்தீவில் எமது இனம் தனது இருப்புக்காக நீண்ட நெடிய போராட்டத்தை, ஈடுசெய்ய முடியாத விலைகொடுத்து நடத்தியுள்ளது. தனது இலக்கை நோக்கி தமிழ் இனம் இன்னமும் போராடிக் கொண்டேயிருக்கின்றது. இந்த விடுதலைப் பயணம் வெற்றியடைய வேண்டுமானால் இந்தத் தீவை மையப்படுத்தி இடம்பெறும் பூகோள ஆதிக்கப் போட்டியும், இந்தப் போட்டியில் தமிழ் மக்களது நலன்களை அடைந்து கொள்வதற்கு ஏற்ப, எவ்வாறு தமிழ்த் தரப்பு நடந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பிலும் உதயன் ஆசிரியபீடம் ஆழமான கரிசனை கொண்டு உண்மை நிலைமைகளுக்கு முக்கியத்துவம் வழங்கவேண்டும்.

தமிழ் மக்களை ஏமாற்றி, ஒற்றையாட்சி அரசியல் அமைப்பை கொண்டுவர முயற்சிக்கும் தரப்பினரின் துரோகத்தனங்கள் தொடர்பாகவும் மக்கள் அறிவூட்டப்பட்டு தெளிவூட்டப்பட்டு வழிகாட்டப்படல் வேண்டும். அவ்விடயத்தில் உதயன் பத்திரிகை தனது பொறுப்பை உணர்ந்து தமிழ் மக்களின் உண்மையான தமிழ்த் தேச விடுதலைக்காக செயற்படும் எனவும் நம்பிக்கையுடன், உதயன் பத்திரிகையின் வெற்றிப் பயணம் தொடர வாழ்த்துகின்றோம்.

| | |
|---|---|
| **கஜேந்திரகுமார் பொன்னம்பலம்** | **செல்வராசா கஜேந்திரன்** |
| *நாடாளுமன்ற உறுப்பினர்* | நாடாளுமன்ற உறுப்பினர் |
| *தலைவர்* | பொதுச் செயலாளர் |
| *தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி* | தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி |

## ஊடகப் போராளி உதயனுக்கு உளம் நிறைந்த வாழ்த்துக்கள்



தமிழ்மக்களின் உள்ளத்திலும், உணர்விலும் இரண்டறக் கலந்திருக்கும் ஓர் இனத்துவ உறவாகவே 'உதயனை' நான் கருதுகிறேன். ஈழ விடுதலைப் போராட்ட காலத்திலும் சரி, இனவிடுதலைப் போர் மௌனிக்கப்பட்டதற்குப் பின்னரான இன்றைய காலகட்டத்திலும் சரி என்றுமே எமது மக்களுக்காய் ஓங்கி ஒலிக்கும் மக்களின் குரலாக இருந்து, பேனா முனையில் தமிழர்களைத் தாங்கி நிற்கும் உதயனின் பணி அளப்பரியது.

தமிழின வரலாற்றுத் தடங்களை மீட்டிப்பார்க்கையில் காலப்பிரவாகத்தின் கறைபடிந்த நாள்களில் கூட தமிழர்களுக்கான சூரியனாய் உதயன் உதித்தே வந்திருக்கிறான் என்பது உண்மை. பத்திரிகைத்துறையில் தான் கொண்ட கொள்கையில் பிறழ்வின்றி, வரித்த இலட்சியத்தில் தளர்வின்றி மூன்றரை தசாப்தங்களைக் கடந்தும் மக்கள் மனங்களில் செல்லக்குழந்தையாய் சிம்மாசனமிட்டு உதயனால் மட்டுமே அமர முடியும் என்பதும் அத்தகைய இடத்தை இனி எப்பத்திரிகையாலும் எட்டிப்பிடிக்கவோ, இட்டுநிரப்பவோ முடியாது என்பதும் நாம் உய்த்தறிந்த உண்மை.

அடக்குமுறைக்குட்பட்ட எமது மக்களின் அவலக்குரலை சர்வதேசத்துக்கு சொல்லுகின்ற பலமான சாட்சியாகவே உதயனின் பயணம் இன்றளவும் தொடர்கிறது. தொடர்ச்சியாக தமிழரின் உரிமைக் குரலாய் ஒலித்துவரும் ஒரே காரணத்துக்காக எத்தனை எத்தனையோ இடர்களையும், இழப்புக்களையும், உயிர்களையும் விலைகொடுக்கும் நிலை வந்தபோதும், தமிழர்களைப் போன்றே அடுத்தடுத்து அடக்குமுறைகளுக்குள் அகப்பட்டுக் கொண்ட போதும் தடம் மாறாது பயணிக்கும் உதயன் தனது 37ஆவது ஆண்டில் காலடி பதிப்பதையிட்டு உளப் பூரிப்படைகின்றேன்.

தமிழ் மக்களின் அபிலாசைகளையும் வடக்கு, கிழக்கின் நிலைப்பாட்டையும் சர்வதேசத்துக்கு எடுத்துக்கூறும் ஒரு பலமான சாட்சியாக பயணித்துக்கொண்டிருக்கும் உதயன் இனியும் எதிர்வரும் இடர்களையெல்லாம் கடந்து என்றென்றும் தமிழ்மக்களுக்காய் தன் பணி தொடர வேண்டுமென இவ் அகவை நாளில் அகமகிழ்ந்து வாழ்த்திநிற்கிறேன்.

**சிவஞானம் சிறீதரன்**
*நாடாளுமன்ற உறுப்பினர்,*
*யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம், கிளிநொச்சி.*






### ஓங்கியே உயர்க!

உதயனே! உனக்கெம் வாழ்த்துக்கள்! – என்றும்
உதயமே காட்டும் நோக்கில் – சந்திக்கும்
எதையுமே தாங்கும் போக்கில் – நிமிர்ந்து
புதினங்கள் வழங்கும் பணியில் —ஓங்கியே உயர்க!

*ப.மகேந்திரதாசன்*
*நாயன்மார்க்கட்டு*

## அச்சு ஊடகத்துறையில் அசைக்க முடியா இடம்



யாழ்ப்பாண குடாநாட்டின் அச்சு ஊடகத்துறையில் தனக்கெனத் தனியிடம் பதித்து 36 வருடங்களை நிறைவுக்கு கொண்டு வந்து 37ஆவது வருடத்தில் காலடி வைக்கும் உதயன் பத்திரிகைக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பத்திரிகைகள் மக்களுடைய வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அவை மக்களுக்கு செய்திகளை மட்டும் எடுத்துச் செல்லாது விழிப்புணர்வுகளையும் எடுத்துச் சென்று அவர்களை விழிப்படையச் செய்கின்றன. உதயன் பத்திரிகை இந்தக் கடமையை பல சவால்கள், நெருக்கடிகள் மற்றும் இழப்புக்களுக்கும் மத்தியில் உரிய வகையில் இன்றுவரை செய்து வருகின்றது.

வயதால், திறமையால், அனுபவத்தால் நீண்ட ஊடக பயணத்தைக் கொண்டுவரும் உதயன் பத்திரிகை ஊடக தர்மத்தை கடைப்பிடித்துத் தூயபாதையில் தனது ஊடக பணியைத் தொடர வேண்டுமென்று கேட்டு உதயனின் வளர்ச்சியில் ஆரம்பம் முதல் இன்றுவரை பங்காற்றிய அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**த.சித்தார்த்தன்**
**நாடாளுமன்ற உறுப்பினர்**

## உதயன் பத்திரிகையின் வேகம் சற்றும் குறையவில்லை




உதயன் பத்திரிக்கை ஆரம்பிக்கப்பட்டபோது எவ்வாறு தமிழர்களுக்கான வீரத்துடன் செய்யப்பட்டதோ அது இந்த அளவிலும் சற்றேனும் குறையவில்லை. கால மாற்றத்துக்கு ஏற்றால்போல் உதயன் பத்திரிகையும் தன்னை மெருகேற்றி தமிழ் மக்களுக்கான தனித்துவ பத்திரிகையாக என்றும் இருந்துகொண்டிருக்கிறது.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட வரலாறுகளில் உதயன் பத்திரிகையின் சேவை என்பது பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. எவ்வளவு உயிர் பொருள் இழப்புகள் மத்தியிலும் மனம் தளராது தமிழ் இனம் சார்ந்த அரசியல சமூகப் பிரச்சினைகளுக்கு மிகத் துணிவாக குரல் கொடுத்து வருகிறது. யுத்த காலத்திலும் சரி தற்போதைய இயற்கை பேரிடர் காலத்திலும் சரி செய்திகளை உடனுக்குடன் துல்லியமாக தருவதில் உதயன் பத்திரிக்கை முன்னணியில் திகழ்கிறது. உதயன் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை அதன் வீச்சுக் குறையாமல் வழிநடத்திச் செல்லும் உதயன் குழுமத்தினருக்கு எனது பாராட்டுகளை தெரிவிப்பதோடு தொடர்ந்தும் பத்திரிகை துறையில் தனக்கென தனி இடத்தைப் பதித்து பல நூறு வருடங்கள் தமிழ் மக்களுக்காக சேவை செய்ய வேண்டும் என்று இந்நாளில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

**வினோநோகராதலிங்கம்**
*நாடாளுமன்ற உறுப்பினர், வன்னி தேர்தல் மாவட்டம்*

## மக்களின் குரலாக செயற்படுகின்றான்




வடக்கு மாகாணத்தில் தனக்கென தனியான முத்திரையைப் பதித்துள்ள உதயன் பத்திரிகை, தனது 37ஆவது அகவையில் காலடி எடுத்துவைப்பதை முன்னிட்டு வெளிவரும் சிறப்பிதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

உதயன் பத்திரிகையானது வடக்கு மாகாணத்தில் ஒரு துடிப்பான சேவையை மக்கள் மத்தியில் ஆற்றிவருகின்றது. தமிழ் மக்களின் குலராக, தமிழ் மக்களின் பிரதிநிதியாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் உதயன், இன்னும் பல்லாண்டு காலம் நேர்மையாகவும், நடுநிலைமையாகவும், திடமாகவும் மக்கள் பணியாற்ற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

உதயனின் வெற்றிக்காக உழைத்துக் கொண்டிருக்கும் ஆசிரிய பீடத்தினர், பணியாளர்கள் அனைவருக்கும் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

**ஜீவன் தியாகராஜா, ஆளுநர்**
வடக்கு மாகாணம்

## துன்பியல்களைத் தாண்டி நடைபோடுகிறான் உதயன்



அகவை முப்பத்தேழாவதில் காலடிவைக்கும் 'உதயன்' பத்திரிகைக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

தற்போதய காலகட்டத்தில் நவீன தொழில்நுட்ப, தொடர்பாடல் வசதிகள் செய்திப் பரிமாற்றத்தில் ஏற்படுத்தியுள்ள வளர்ச்சி பிரமிக்கத்தக்க தொன்றாகும். இது இன்று மனிதனின் கையில் உலகைச் சுருக்கி இருக்கின்றது. வரலாற்று ரீதியாக தகவல் பரிமாற்றம் மனிதனின் நாகரிக முன்னேற்றத்துக்கு உறுதுணையாக இருந்திருக்கின்றது. அந்த வகையில் உலக வரலாற்றில் இலங்கையின் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகள் மற்றும் ஊடகங்கள் இலங்கைத் தமிழர்களின் வரலாற்றில் முக்கிய திருப்பங்களையும் தாக்கங்களையும் ஏற்படுத்தி இருக்கின்றன.

அத்தகைய முக்கிய வரலாற்றுக் காலகட்டத்தில், குறிப்பாக வடமாகாணத்தில் இருந்து இலங்கைத் தமிழர்களின் கலை, கலாசார, சமூக, பொருளாதார, அரசியல் சார்ந்த விடயங்கள், மற்றும் உலகச் செய்திகளையும் மக்கள் காலடியில் கொண்டுசேர்க்கின்ற பணியை 'உதயன்' கடந்த நான்கு தசாப்தங்களாகச் செய்து வருகின்றான். அத்துடன், உதயன் தனது வளர்ச்சியில் எதிர்நோக்கிய பல சவால்களையும் வெற்றிகொண்டு பலதுன்பியல் சம்பவங்களையும் தாண்டி தற்பொழுதுவரை நாளாந்தம் வெளிவருவது விதந்து குறிப்பிடத்தக்கதாகும்.

உதயன், வடமாகாணத்தில் மட்டுமல்லாது உலகளாவிய ரீதியிலும் தமிழர்கள் மத்தியில் முக்கிய செய்தி ஊடகமாக மிளிர்வது பாராட்டத்தக்கதாகும். உதயன் நாழிதழானது, மக்களுக்கான தமது ஊடகப் பணியினை தொடர்ந்தும் நடுநிலை தவறாது சிறப்பாகச் செய்வதற்கு உதயன் குழுமத்தினருக்கு எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கணபதிப்பிள்ளை மகேசன்,**
மாவட்டச் செயலர், யாழ்ப்பாணம்.

## இடைவிடாத முயற்சியே உதயனின் வெற்றி



36 ஆண்டுகளைக் கடந்துவந்து இன்று 37ஆவது அகவையில் தடம் பதிக்கும் உதயன் பத்திரிகைக்கு, ஆசியையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

நவீனத்துவமும் நாகரிகமும் நிறைந்து, ஒரு கைக்குள்ளேயே உலகம் அடங்கி, உலகின் ஒரு முனையில் நடப்பதை மறுமுனையில் அந்நொடியே பார்க்க முடிந்த போதிலும், செய்தித் தாள்களுக்குரிய வரவேற்பு குறைந்துபோகவில்லை. பண்பாட்டையும் கலாசாரத்தையும் மனித விழுமியங்களையும் பேணியவாறு அவை வெளிவருகின்றமையே அவற்றிற்கான சிறப்புக் காரணமாக அமைகின்றது.

அந்த வகையில் உதயன் நாளிதழ் 36 வருடங்களைக் கடந்து வந்திருப்பதானது அதன் கடின உழைப்பினாலும் இடைவிடாத முயற்சியினாலும் என்றால் மிகையாகாது. இலக்கியம், அரசியல், மருத்துவம், வாழ்வியல், பொருளாதாரம் என பல துறைகளையும் இணைத்து, ஒழுங்குபடுத்திப் பயணித்துக் கொண்டிருக்கும் சிறப்பு உதயன் நாளிதழுக்கு உண்டு. இதற்காக உழைக்கும் பத்திரிகைக் குழுமத்தினரை மனதாரப் பாராட்டுவதுடன் இவர்களது பணி தொடரவும் வாழ்த்துகின்றேன்.

**திருமதி அ.ஸ்ரான்லி டி மெல்**
மாவட்ட செயலர், மன்னார்




## வடக்கு, கிழக்கு மக்களுக்காக அயராது உழைத்தவன் உதயன்



'உதயன்' செய்தித்தாள் ஆரம்பிக்கப்பட்டு இன்றைக்கு 36 வருடங்கள் பூர்த்தியையொட்டி வவுனியா நிர்வாக மாவட்ட செயலாளராக வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த 36 வருடங்களுள் உதயன் பத்திரிகையானது வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களின் சமூக, பொருளாதார, கலாசார மற்றும் அரசியல் சார்ந்த பல்வேறு துறைகளிலும் வாசகரது அறிவை மேம்படுத்த ஆற்றிய ஊடகப்பணி தொடர்பில் பெருமிதம் அடைகின்றேன். மேலும், 30 வருட காலங்களாக யுத்த நிலையில் பெரும் பாதிப்புக்குள்ளான வட, கிழக்கு மக்களுக்கு தொடர்ந்து வந்த சமாதானமான சூழலில் புதிய எதிர்பார்ப்புக்களுடன் நல்லிணக்கத்தோடு வழியேற்படுத்தியதுடன், மக்களது சமூக வாழ்வை ஒளிமயமாக்க உதயன் பத்திரிக்கைக்கு மேலும் வாய்ப்புக்கள் கிட்டவேண்டுமென பிரார்த்தித்து எனது வாழ்த்துக்களை மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பீ.ஏ.சரத்சந்ர**
மாவட்ட செயலாளர், வவுனியா

## சரித்திரப் பின்னணி உடையவன் உதயன்



இலங்கைத் திருநாட்டின் வடபுலத்திலிருந்து இடையறாத மக்கள் சேவையினை ஆற்றிவருகின்ற உதயன் பத்திரிகை முப்பத்தி ஏழு ஆண்டுகளை எட்டியிருப்பதை ஒட்டி வெளிவரும் சிறப்பிதழுக்கு எனது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் மன நிறைவடைகிறேன்.

ஊடக தர்மத்தை நன்கு அறிந்து கொண்டு வருகின்ற இடர்கள் அனைத்தையும் கடந்து முப்பத்தி ஏழு ஆண்டுகளை ஊடகப்பரப்பில் எட்டுவது என்பது சாதாரண விடயம் அல்ல என்பதை பதிவுசெய்ய விரும்புகிறேன்.

உண்மை, நடுநிலை, உடனடித்தன்மை என்பன ஊடகங்களின் உயரிய பண்பாகும். இப்பண்புகளைக் கொண்டு உதயன் எதிர்காலத்திலும் தனது வீச்சுக்குறையாத வகையில் வெளிவரவேண்டுமென வேண்டி நிற்கிறேன்.

தற்காலத்தில் நவீனத்துவம் மற்றும் தொழில் நுட்பம் காரணமாக பத்திரிகைகளை வாசிப்பதில் நாட்டம் குறந்து செல்வது உண்மைதான். இந்தகைய சவால்கள் அனைத்தையும் எதிர்கொண்டு பயணிப்பது என்பது கடினமான விடயமாகும்.

என்றாலும் பத்திரிகை துறையைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் என்பது புத்திஜீவிகளின் எதிர்பார்ப்பாகும். உதயனின் பணி சிறக்க அயராது பயணிக்கும் அனைவருக்கும் பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்வதோடு மலர் சிறக்கவும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த காலப் பத்திரிகை வரலாற்றில் நீண்டகால சரித்திரப் பின்னணியைக் கொண்ட உதயன் பத்திரிகை மேன் மேலும் மக்களுக்கு செய்திப்பணியாற்ற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்துக் கொள்வதோடு உதயன் பத்திரிகைக் குழுமத்தினர் அனைவருக்கும் அன்பு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

**க.விமலநாதன்,**
மாவட்டச் செயலர்
முல்லைத்தீவு.

## தனித்துவக் குரலாக ஓங்கி ஒலிக்கட்டும்!



தமிழ்ச் சமூகத்தைத் தகுந்த முறையில், வழிநடத்திக் கொண்டிருக்கும் உதயன் பத்திரிகையின் 37ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

சமநிலைத்தன்மையுடைய செய்திகளைத் துல்லியமாக ஆராய்ந்து வழங்குவது பத்திரிகைகளின் தலையாய பொறுப்பாகும். அவ்வகையில் அகிலமெங்கும் அன்றாடம் இடம்பெறும் நிகழ்வுகளைச் செய்திகளாக்கி அவற்றை மக்களிடையே கொண்டுசென்று அவர்களை அறிவுள்ள, ஆரோக்கியம் மிக்க சமூகமாக மாற்றுகின்ற குறிக்கோளுடன் வீறுநடை போடுகின்ற பணியில் பத்திரிகைகள் ஈடுபடுகின்றன எனக்கூறின் அது மிகையாகாது.

கருத்துச் சுதந்திரமானது ஜனநாயகத்தின் அத்திபாரமாகவும் அடிச்சுவடாகவும் அமைந்துள்ளது. அனைத்துச் சமூகங்களின் மத்தியிலும் சமாதானம் மற்றும் ச்கவாழ்வை கட்டியெழுப்புவதற்காக இந்த நாட்டின் ஐக்கியம், நேர்மை மிகு பண்பு, சுபீட்சம் மற்றும் சமாதானம் என்பவற்றை ஊக்குவித்து தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரலாக தமிழ் பேசும் மக்களின் மனதில் நீங்கா இடம் பிடித்து தொடர்ந்தும் உதயம் பெற வேண்டும் என்றும், அதற்காக தொடர்ந்து பயணிக்கும் முகாமையாளர், இதழாசிரியர் உள்ளிட்ட ஊடகவியலாளர் குழுவுக்கும் எனது மனம் நிறைந்த நல்லாசிகளை அன்போடு வழங்கி நிற்கின்றேன்.

**திருமதி ரூபவதி கேதீஸ்வரன்**
மாவட்டச் செயலர், முல்லைத்தீவு.

## தமிழர் தாயகத்தினுடைய தனித்துவ அடையாளம்



யாழ்ப்பாணக் குடாநாட்டை மையப்படுத்திய அச்சு ஊடக வரலாறு என்பது நீண்டகாலப் பாரம்பரியம் மிக்கது என்பதுடன் தனித்துவம் மிக்கதுமாகும். இலங்கையில் தமிழில் வெளிவந்த முதலாவது அச்சு ஊடகம் உதயதாரகை முதல், இலங்கைத் தமிழர்களின் குரலாக இன்று வரை ஒலிக்கும் உதயன் உட்பட நூற்றை அண்மித்த அச்சு ஊடகங்கள் எமது யாழ்பாண மண்ணில் இதுவரை வெளிவந்துள்ளன. அந்த ஊடகங்கள் ஒவ்வொன்றும் ஏதோ ஒருவகையில் தனித்தன்மை வாய்ந்தவை. அந்தவகையில் உதயனுக்குப் பல தனித்துவங்கள் உண்டு. குறிப்பாக, குறிக்கப்பட்ட காலத்தில் மிக நீண்ட காலம் யாழ்ப்பாணத்தில் வெளிவந்த ஒரேயொரு அச்சு ஊடகம் எனும் வரலாற்று அடையாளம் உதயனுக்கு உண்டு.


உதயனின் ஆசிரியபீடம் பலமுறை மாற்றம்பெற்றபோதும் உதயன் தன் தனித்துவத்தை இழக்காது இன்றுவரை பயணிக்கின்றமை அதன் தெளிவான செல்நெறிக்குச் சான்று பகர்கின்றது. உதயனின் வார வெளியீடான சஞ்சீவி உருவாக்கிய ஓர் இலக்கிய பரம்பரை ஈழத்தில் உண்டு. இன்று முன்னிலை வகிக்கின்ற பல இளைய கதை சொல்லிகள், கவிஞர்கள், பத்தி எழுத்தாளர்கள் என பலதரப்பட்ட இலக்கியவாதிகள் உதயன் - சஞ்சீவி உருவாக்கி வளர்த்த ஆளுமைகள்.

உண்மையை அச்சமின்றி உரைக்கும் திறத்தால் உதயன் சந்தித்த வலிகளும் அதன் பணியாளர்களின் இழப்பும் அவர்கள் இழப்பால் அவர்கள் குடும்பங்கள் படும் துயரும் என்றும் நினைவில் நின்று நீள வலி தருவன. முதல் நாளிரவு தனது பணியாளர்களைப் துப்பாக்கி கலாசாரத்துக்குப் பலிகொடுத்தபோதும் மறுநாள் அதிகாலையில் தவறாது வெளிவந்த உதயனின் துணிச்சல் தான் அதன்பலம். அந்தப்பலம் தான் அவன் மீது சமூகம் கொண்டுள்ள ஈர்ப்புக்கு காரணம்.

உதயன் தற்போது பயணிக்கும் ஊடகச் சூழலும் பெரும் சவாலானது. கட்டற்ற ஊடகப் பெருவெளிகளின் தாக்கம், ஊடகங்களின் பணியில் பாதியை செய்யும் சமூக வலைத் தளங்களின் ஆக்கிரமிப்பு, எனச் சவால்கள் நாளுக்கு நாள் நீள்கின்றன. இருந்தும் உதயன் தன்னிலை தவறாது வெளிவருகின்றமை பாராட்டுக்குரியது. தமிழர் தாயகத்தின் தனித்துவமான ஊடகம் எனும் அடிப்படையில் உதயனுக்கான சமூகப் பொறுப்பும் ஒப்பீட்டளவில் மாறுபட்டது என்பதுடன் பெரிதானதும் கூட. எனவே இதனையுணர்ந்து உதயன் தன் தடம் மாறாது முன்னே செல்ல என் வாழ்த்துக்களை பதிவதுடன் உதயனின் அனைத்து முயற்சிகளிலும் இறையருள் நிற்க எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

**பேராசிரியர் சி.சிறிசற்குணராசா**
துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## தமிழ் மக்களின் குரலாக ஒலிக்கின்றான் உதயன்!



நாட்டின் கல்வி, பொருளாதார, கலாசார, விளையாட்டு, பண்பாடு போன்றவற்றின் அபிவிருத்திக்கு பத்திரிகை பெரும் பங்கு வகிக்கின்றது. அந்த வகையில் 36 ஆண்டுகளாக தமிழ் மக்களுக்கான குரலாக ஒலித்துக்கொண்டிருக்கும் 'உதயன்' பத்திரிகை எதிர்வரும் 27ஆம் திகதியுடன் 37ஆவது ஆண்டுக்குள் காலடி எடுத்து வைப்பதை நினைத்து நாமும் பெருமை கொள்கின்றோம். பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் தங்களது அளப்பெரிய சேவையை மக்களுக்காக வழங்கி வருகின்ற 'உதயன்' நிறுவனத்தை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.


உள்நாட்டிலும், உலகளாவியரீதியிலும் நடைபெறுகின்ற பல்வேறு செய்திகள், கட்டுரைகள், விளையாட்டுச் செய்திகள், வணிகச்சூழ்நிலைகள், சினிமா தகவல்கள் என பல விடயங்களை தன்னகத்தே கொண்டு தினமும் 'உதயன்' இதழ் பிரசுரமாகி வருகின்றது. தற்போது எமது மக்களின் தினசரி தகவல் அறியும் முறைகளில் பிரதானமாக உதயன் பத்திரிகை திகழ்கின்றது என்பதை நினைத்து மகிழ்வடைகின்றோம். நாட்டின் மூலைமுடுக்குகளில் நடைபெறும் அனைத்து செயற்பாடுகளையும் அறிந்துகொள்ள உதயன் பத்திரிகை மிகவும் உறுதுணையாக அமைகின்றது.

பத்திரிகை சேவை என்பது இனம், மதம், மொழி கடந்து நாட்டு மக்கள் அனைவருக்கும் பயனுடையதாக அமைதல்வேண்டும். அந்தவகையில் நாட்டின் ஒவ்வொரு மக்களது வாழ்விலும் 'உதயன்' பத்திரிகையின் செயற்பாடுகள் கை கொடுக்க வேண்டும் என வாழ்த்துவதோடு, தங்களது பத்திரிகை செயற்பாடுகள் எந்தவித தடைகளும் இன்றி தொடர்ந்து முன்னே பயணிக்க வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கலாநிதி.த.மங்களேஸ்வரன்.**
துணைவேந்தர்,
வவுனியாப் பல்கலைக்கழகம்.




## வாசகர்களே உதயனின் பலம்



37ஆவது ஆண்டில் கால்பதித்து இன்னும் நிமிர்ந்து நிற்கின்றஉதயனை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். உதயன் கடந்து வந்த பாதை மிகவும் கரடுமுரடானது. பல்வேறு தடைகளையும் தாண்டி இத்தனை ஆண்டுகளாக யாழ்ப்பாணத்தில் ஒரு பத்திரிகை வெளிவந்துகொண்டிருக்கிறது என்றால் அதற்கு வாசகர்கள் கொடுக்கின்ற மதிப்பே பிரதானமானதாகும். உதயனின் வாசகர்கள் பல்வேறு தரத்தினர். அரசியல் அறிந்தவர்கள் சிலர் நாட்டு நடப்புகளை அறிவதில் ஆர்வம் கொண்டவர்கள் சிலர் இலக்கிய ஆர்வம் கொண்டவர்கள் இன்னும் சிலர் இவ்வாறு பலதரப்பட்ட வாசகர்களுக்கும் ஏற்ற வகையில் உதயனின் பணி தொடர வேண்டும். வாசகர்கள் உதயனுக்காக என்றும் காத்திருப்பார்கள் என்ற நம்பிக்கையோடு வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**பேராசிரியர் ம.இரகுநாதன்**
தலைவர், தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் .

## ஓர்மம் மிக்க ஊடகத்துறைக்கு எடுத்துக்காட்டு..!



நாளும்பொழுதும் ஊடகங்கள் சூழ்ந்த உலகிலே எமது மக்கள் வாழ்ந்து கொண்டிருந்தாலும், அவர்களது நம்பிக் கைக்குப் பாத்திரமான, மனதோடு இசைந்த ஊடகத்துடனான அவர்களது உறவும் பிணைப்பும் மிகநெருக்க மானதாகவே இருக்கும்.

'உதயன்' அந்த வகையில் தமிழ் மக்களிடம் அலாதியான வரவேற்புடைய செய்திப் பத்திரிகையாக இத்துணை வருடங்களாகத் திகழ்ந்து வருவது என்பது ஊடகத்துறை வரலாற்றில் மிக இலகுவான விடயமல்ல. அதிலும், நெருக்கடிகள், அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் கருத்துச் சுதந்திரத்தின் உரிமைக்குரலாக 'உதயன்' கடந்து வந்திருக்கும் பாதை ஓர்மம் மிக்க ஊடகத்துறைக்கு ஓர் எடுத்துக்காட்டு. காலம் மாறும்போதும், போக்குகள் புத்தாக்கம் பெறும்போதும், அவற்றையெல்லாம் மிக இலாவகமாகத் தனக்குள் தனது தனித்துவம்கெடாது உள்வாங்கி, மக்களின் அடையாளமாகத் தன்னைத் தொடர்ந்தும் நிலை நிறுத்துவதில் 'உதயன்' கண்டிருக்கும் வெற்றிகள் ஊடகத் துறையில் ஈடுபடும் இளம் தலைமுறையினருக்கு திசைகாட்டிடும் நற்குறிகாட்டிகள் என்பதில் மறு கருத்து இருக்க முடியாது.

மக்களுக்கான தகவல்களைத் தனக்கே உரித்தான முன்வைப்புடன் 'உதயன்' பகிர்ந்துகொள்ளும் பாங்கு, வடபுலத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகளிடையே தனித்துவமானதாக அமைவது மாத்திரமல்லாது, பல சமயங்களில் கொழும்பிலிருந்து வெளிவரும் நாடளாவிய நாளிதழ்களுக்கும் ஒரு முன்மாதிரியாக அமைந்து விட்டிருக்கின்றது. எவ்வழி எதனைக்கேட்பினும், அது 'உதயன்' தரும் செய்திக்குரிய சுவாரசியத்துக்கு நிகரில்லை என்பது, இணையவழிப் புதிய ஊடகங்களின் பிரசன்னத்திலும், பெருந்தொற்றுச் சமராடும் இப்பொழுதுகளிலும் தளராது நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. அச்சு ஊடகமாகப் புலமையாளர் போற்ற வளர்ந்திருக்கும் 'உதயன்', புதிய ஊடகங்கள் கோலோச்சும் இணையப்பரப்பிலும் இலத்திரனியல் ஊடகக்களத்திலும் தனது முத்திரையை இன்னும் ஆழமாகப்பதித்து, தமிழ் ஊடகத்துறையின் தன்னிகரில்லாத வலுவான விருட்சமாய் கிளைபரப்பிட வாழ்த்துக்கள்.

**கலாநிதி சி.ரகுராம்**
துறைத்தலைவர், ஊடகக் கற்கைகள்
யாழ். பல்கலைக் கழகம்.

## தடம்மாறாப் பயணத்தின் திசைகாட்டி



இந்த மண்ணில் இன்று வாழும் அகவை ஐம்பது கடந்தவர்கள் பல்வேறு இடர்களையும் இன்பங்களையும் அனுபவித்துள்ளனர். அவற்றைப் பசிய நினைவுகளாக இன்றும் தம்முள் கொண்டுள்ளனர். இவை அனைத்தும் உதயனுக்கும் பொருந்தும்.

இடர்கள் பல கண்டபொழுதிலும் இன்றும் தனது நேரிய பயணத்தைச் சீரிய பாதையில் உதயன் மேற்கொண்டு வருகிறான்.

1985ஆம் ஆண்டு நாளிதழ் வெளிவந்த நாள் தொட்டு உதயனுடன் என் காலை விடியல் அமைந்திருக்கிறது. பாடசாலைப் பையனாக சாவகச்சேரிச் சந்தையில் மீசையரின் பேப்பர்க் கடையில் உதயன் முதல் பிரதியைத் தள்ளுண்டு நெருக்குண்டு வாங்கிய நினைவுகள் இன்றும் என்னுள் நிழலாடுகின்றன. காலம் என்பது கறங்கு போற்சுழலும் தன்மையது என்று சும்மாவா சொல்லி வைத்தனர். இத்தனை ஆண்டுகளில் எத்தனை மாற்றங்கள்?

இவ்வாண்டு உதயனின் பிரதம ஆசிரியரும் என் போன்ற பலரது எழுத்துத்துறைச் சார்ந்த ஊக்குவிப்பாளருமாகிய ம.வ.கானமயில்நாதன் ஐயாவின் இழப்புடன் உதயனின் அகவை நிறைவு அமைந்துள்ளது. உதயனுக்காக உழைத்த உத்தமர்கள் வான்நின்று ஆசி பெய்யத் தடம்மாறாத் திசைப் பயணம் என்றும் இனிதாய் அமையட்டும்.

**செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன்**
தலைவர், யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம்




## போர்ச் சூழலுக்குள்ளும் தளராத ஊடகப்பணி!



எம் மண்ணில் நீண்டகாலமாக நிலைத்து நின்று செய்திசொல்லும் உதயன் பத்திரிகையின் ஆண்டுவிழா குறித்து நல்லாசி கூறுவதில் மிக்கமகிழ்ச்சி அடைகிறேன். கடினமான போர்ச்சூழலில் பல இடர்களுக்கு மத்தியில் தளராது தன் சேவையைத் தொடர்ந்த உதயன் பத்திரிகைக்கு என்றும் எம் சமூகம் நன்றிக்கடன் பட்டுள்ளது. உதயன் பத்திரிகையின் வரவுக்காக அயராது உழைத்த ஆசிரியர் உயர்திரு. கானமயில்நாதன் சமீபத்தில் இறையடி சேர்ந்தார். உதயன் பத்திரிகையின் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்த அப் பெருமகனாரையும் இவ்வேளையில் நாம் நினைவுகூரவேண்டும்.

உதயன் பத்திரிகைப் பணியில் ஈடுபட்டு தம் உயிரையே அர்ப்பணம் செய்த பணியாளர்கள் என்றும் மறக்க முடியாதவர்கள். எமது மக்களுக்கு ஊடகங்களின் உன்னத சேவை என்றும் வேண்டும். உண்மையை நேர்மை வழியில் நின்றுசொல்லவேண்டும். பாரபட்சமின்றி மக்களை ஆற்றுப்படுத்த வேண்டும்.

உதயன் பத்திரிகை தொடர்ந்தும் தன்பணியைச் சிறப்பாகச் செய்து மக்களைகாக்க வேண்டுகிறேன்.

உதயன் பத்திரிகையின் முதல்வர் ஈ.சரவணபவனுக்கும், பிரதம ஆசிரியர் மற்றும் செய்தி ஆசிரியர்கள், பணியாளர்கள் அனைவருக்கும் எமது மக்கள் சார்பில் நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். இருபத்தியோராம் நூற்றாண்டுக்கு பொருத்தப்பாடாக உதயன் பத்திரிகை மேலும் பிரகாசிக்க பிரார்த்தனை செய்து அமைகிறேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்,** *தலைவர்*
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.*
*தலைவர், சிவபூமி அறக்கட்டளை இலங்கை.*
*உப தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்.*



## வெற்றிப் பயணம் மேலும் தொடரட்டும்

யாழ்ப்பாணம் மத்தியில் அமைந்துள்ள உதயன் பத்திரிகை நிறுவனம் தனது 37ஆவது ஆண்டில் காலடிவைக்கும் நாளைக் கொண்டாடுவதில் மிக மகிழ்ச்சியடைகிறேன். மக்கள் மனதில் நிறைந்த இடம்பிடித்த பத்திரிகை உதயனாகும்.

காலையில் எழுந்தவுடன் கரங்களில் பிடிக்கும் முதல் பத்திரிகை உதயனாகும். எந்தக் காலகட்டத்திலும் தவறாது தனது பணியைத் தொடர்ந்து ஆற்றி வருவது உதயன் பத்திரிகை ஆகும்.

உதயன் பத்திரிகையின் பணி மேன்மேலும் சிறக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு உதயன் பத்திரிகை ஆசிரியர்கள், பணியாளர்கள் அனைவருக்கும் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சிவஸ்ரீ யோகிஸ்வர ஜெகதீஸ்வரகுருக்கள்**
தலைமைக்குரு,
பள்ளம்புலம் முருகமூர்த்தி ஆலயம்,
உதயன் பத்திரிகை வளாக சிவன் ஆலயம்.

## போர்க்கால அச்சுறுத்தலில் திடமுடன் செயற்பட்டவன்



போர்க்காலத்தில் பெரும் அச்சுறுத்தலுடன் தனது ஊடகவியலாளர்களைக்கூட பறிகொடுத்து சொல்ல முடியாத அழுத்தங்களின் மத்தியில் மக்களுக்காகச் செயற்பட்டவன் உதயன்.

எம் தாயக மண்ணில் ஒரு தன்னிகர் இல்லாத ஊடகமாக எம்மக்களின் குரலாய் எம்மவர் மனங்களில் ஆழுறைந்தாய் உதயன். தினமும் சூரியன் உதயமாகு முன்னே எம்மவர் கைகளில் பத்திரிகை வடிவில் நீ தவழ்வாய். 37ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் உன்னை வாழ்த்துவதில் நான் பெருமிதம் அடைகிறேன். 'நீ வாழ்க! வாழ்க!' உனது குரல் ஊடாக எம்மக்களுக்கு அரசியல், சமூக, கலாசார சீர்திருத்த விடயங்களையும் கல்வி, பொருளாதாரம், சமயம் சார் கருத்துக்களையும் விளம்பரம், துக்கம், மகிழ்ச்சி ஆகிய விடயங்களையும் கற்றவரும் மற்றவரும் விளங்கக்கூடிய விதத்தில் போதிய மொழி வளத்துடன் வெளிப்படுத்தி, எமது சமூகத்துக்கு நல்வழி காட்டியாகவும் திகழ்ந்து வருகிறாய்.

போர்க்காலத்தில் பெரும் அச்சுறுத்தலுடன் தனது ஊடகவியலாளர்களைக்கூடப் பறிகொடுத்து சொல்ல முடியாத அழுத்தங்களின் மத்தியில் மக்களுக்காகச் செயற்பட்ட உதயனுக்கு வாழ்த்துக்கள். இத்தருணத்தில் உதயன் முதல்வர், பிரதம ஆசிரியர், உதவி ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

**முருகேசு எசக்கியேல்**
*அருளுரையாளர்,*
*மெதடிஸ்த திருச்சபை.*

## நடுநிலையான ஊடகப்பணிக்கு இலக்கணமானவன் உதயன்



நடுநிலையான ஊடக நெறியாக்கத்துக்கு அமைவாக செயற்படுவதன் காரணமாகவே உதயன் பத்திரிகை பல்வேறு சவால்களுக்கு மத்தியில் 37 வருடமாக நிலைத்து நிற்கின்றது. இன நல்லிணக்கத்துடன் செயற்படும் உதயன் பத்திரிகை பல்லாண்டு காலம் நிலைத்துநிற்க வாழ்த்துக்களைப் பகிர்கின்றோம்.

சமூக, அரசியல், மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் 37 வருடங்களாக ஒரு பத்திரிகை நிலைத்துநிற்பது சவால்மிக்கது. நடுநிலையான பக்கச்சார்பற்ற ஊடக நெறியாள்கையால் உதயன் பத்திரிகை இச்சாவாலை வெற்றிகொண்டுள்ளது. என்பதற்கு பலவிடயங்கள் சான்றுபகிர்கின்றன.

தமிழ்பேசும் சமூகங்களின் இதயக்குரலாக வரும் உதயன் நடுநிலையாக நின்று செய்திகளை தரும் அதேநேரம் மக்களின் சமகால பிரச்சினைகளை உடனுக்குடன் சுட்டிக்காட்டி ஆவனசெய்யும் உந்தலையும் தந்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

உண்மை, நேர்மை வெளிப்படைத்தன்மையுடன் தொடர்ந்து உதயன் பத்திரிகை வெற்றிநடைபோடவும் மக்களின் மனதில் நீங்கா இடம்பிடித்து ஒரு தனித்துவத்துடன் அனைவரது கரங்களிலும் மணம்கமிழ இறையாசியுடன் மனம்நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**சிவஸ்ரீ நா.பிரபாகரக்குருக்கள்**
***கருமாரி அம்மன் தேவஸ்தானம்.***
***குட்செட் வீதி, வவுனியா.***

## துன்பத்திலும் துணைநிற்பவன்



ஈழத் தமிழர் வரலாற்றில் தடம் பதித்த தனித்துவமான பத்திரிகையாக உதயன் உள்ளான். எத்தனையோ துன்பங்கள் நேர்ந்தபோதெல்லாம் எம்மைவிட்டு அகலாது தமிழர்களுக்காக தமிழர்களுடன் இரண்டறக் கலந்தவனாக உதயன் நின்று பணியாற்றியுள்ளான்.

உதயனுக்கு சமயக்கட்டுரைகள் எழுதி அனுப்பிய நினைவுகள் இன்றும் பசுமையாக உள்ளன. எமது நீண்டகாலத்து உறவில் இன்று ஆசியுரை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். 36 ஆண்டுகள் என்பது ஓர் சாதனையாகும். நவீன தொழில்நுட்ப காலத்தில் பத்திரிகைகள், இணையங்கள் சஞ்சிகைகள், முகப்புத்தகங்கள், என பற்பல வடிவங்களில் ஊடகங்கள் வந்தாலும் அவற்றினையெல்லாம் பின்தள்ளி மக்கள் மத்தியில் இன்றும் முதன்மையாகத் திகழ்கின்றான் உதயன். 37ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் உதயன் மென்மேலும் வளர்ச்சியுற வாழத்துகின்றேன்.

**சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள்**
**குருமுதல்வர்**
**வீணாகானகுருபீடம்**
**ஸ்ரீசரஸ்வதி அம்பாள் உபதேச**
**திருக்கோவில், சண்டிலிப்பாய்.**

## சரித்திரப் பின்புலத்தை கொண்டவன் உதயன்!



உதயன் பத்திரிகையின் ஆரம்ப காலம் முதல் கடந்த 36 வருடங்களாக உதயனோடு நெருங்கிய உறவில் இருக்கின்றமையால் உதயன் பத்திரிகையின் 37ஆவது பிறந்த தினம் எனக்கும் ஒரு மகிழ்வான தினமாகும்.

இந்த மகிழ்வான நேரத்தில் உதயன் பத்திரிகைக் குடும்பத்தின் நிர்வாக இயக்குநர், ஆசிரியர் குழுவினர், செய்தியாளர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் முதலில் இறையாசீர் மிக்க அன்பு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் மகிழ்கிறேன்.

உதயன் பத்திரிகை தமிழ் மக்களின் குரலாக என்றும் ஒலிக்க வேண்டும். அவர்களின் எல்லா அனுபவங்களிலும் அவர்களோடு பயணிக்க வேண்டும். அவர்களோடு வாழ்ந்து அவர்களின் செய்திகளை அவர்களுக்கே சொல்லிக்கொண்டிருக்கவேண்டும் என்ற பணியை அன்றுமுதல் இன்றுவரை சிறப்பாக ஆற்றியே வந்துள்ளது.


கடந்தகாலப் பத்திரிகைகளின் வரலாற்றில் ஒரு நீண்டகால சரித்திரப் பின்னணியைக் கொண்ட ஒரு பத்திரிகையாக உதயன் பத்திரிகை இன்றும் தலைநிமிர்ந்து உயிர் வாழ்கிறது என்பது பாராட்டப்படவேண்டிய ஒரு சாதனையாகும்.

1959ஆம் ஆண்டு ஈழநாடு பத்திரிகை வெளியானபோது வாழ்த்துத் தெரிவித்த யோகர் சுவாமிகளுடைய வார்த்தைகள் இன்றும் நீடித்து நின்று சாதிக்கப்போகிற பத்திரிகைகளுக்கு வழங்கப்படும் வாழ்த்துக்களாகவே அமைகின்றன.

'ஏசுவார்கள், எரிப்பார்கள் உண்மையை எழுதுங்கள். உண்மையாக எழுதுங்கள்' என்ற அந்த வார்த்தைகள் உதயன் பத்திரிகையினுடைய வரலாற்றிலும் வாழப்பட்ட வார்த்தைகளாகும். உதயன் பத்திரிகை தமிழ் மக்களின் குரலாக என்றும் ஒலிக்க வேண்டும். தொடரட்டும் உதயன் பத்திரிகையின் பணி என இறையாசீருடன் வாழ்த்துகிறேன்.

**கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள்**
**ஊடக வருகை விரிவுரையாளர்**
**இலங்கை திறந்த பல்கலைக் கழகம்**

## பெருந்தொற்றுக் காலகட்டத்தில் பதற்றமில்லா செய்தியளித்தவன்



எமது நாட்டின் பத்திரிகைகள் என்பது மிகவும் முக்கியமான இடத்தில் உள்ள ஓர் ஊடகமாகும். எந்தச் செய்தி ஆனாலும் நடுநிலையாகவும் பக்கசார்பில்லாமலும் மிகவும் தெளிவாகவும் விளக்கமாகவும் மக்களுக்கு எடுத்துச் செல்வது பத்திரிகைகள் ஆகும். இன்றைய நவீன உலகில் பல சமூக ஊடகங்கள் வந்த போதிலும் இன்னும் மக்கள் மத்தியில் அழியாத ஓர் ஊடகமாக பத்திரிகைகள் இருக்கின்றன.

அந்தவகையில் உதயன் பத்திரிகையானது தனது ஆரம்ப காலத்திலிருந்து இன்று 37ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் இந்த வருடம் வரை தமது பத்திரிகை தர்மத்தை மதித்து அதன் விழுமியங்களின் படி நேர்மையாகவும் நடுநிலைமையாகவும் பக்கசார்பற்றும் தமது செய்திகளை தெளிவாகவும் விளக்கமாகவும் மக்களுக்கு கொண்டு செல்வதில் மிகவும் சிறப்பாகச் செயற்பட்டுள்ளது என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மையாகும்.

பல இடர்காலங்களிலும் சரி தற்போதய பெருந்தொற்றுக் காலங்களிலும் சரி மக்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தாது உண்மையான செய்திகளினை உரியவரிகளிடம் கேட்டு அதன் உண்மைத் தன்மையினை உறுதிப்படுத்திய பின் மக்களுக்கு கொண்டு செல்வது உதயன் பத்ததிரிகையின் சிறப்பம்சமாகும்.

மக்களின் உடல் உள ஆரோக்கியத்துக்காக மருத்துவ கட்டுரைகளையும் அது தொடர்பான நிபுணர்களுடன் பெற்று பிரசுரித்தும் உள்ளனர். தமது பத்திரிகையூடாக மக்களுக்கு நன்மை பயக்கின்ற எந்த விடயங்களானாலும் அதனை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும் என்பதில் ஆர்வமாகவும் சிறப்பாகவும் உதயன் செயற்பட்டு வந்துள்ளது என்றால் அதில் மிகையல்ல.

தமிழ் தேசியத்தை தமது வாழ்நாள் இலட்சியமாகக் கொண்டு இயங்கி வரும் உதயன் பத்திரிகையானது இன்று இந்த உயரத்தை அடைவதற்கு இத்தனை வருடங்களாக கொடுத்த விலை மிக அதிகம். உயிர்ப் பலிகள் சொத்திழப்புக்கள் ஏராளம் இருந்த போதிலும் தான் கொண்ட இலட்சியத்துக்காக இன்று வரை உழைத்து இந்த உயரத்தை உதயன் அடைந்துள்ளான்.

இந்த ஊடகம் மேன்மேலும் வளர்ச்சி அடைந்து 100 வருடங்களை கடந்து, வெற்றி நடை போட வேண்டும் என்று வாழ்த்துவதுடன் இதற்காக உழைத்து வரும் பத்திரிகையின் ஆசிரியர்கள், நிருபர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் நல்ல ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் வழங்க வேண்டும் என்று இறைவனை பிரார்த்தித்து உங்கள் பணி தொடர வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

**மருத்துவர் த.சத்தியமூர்த்தி**
பணிப்பாளர்
போதனா மருத்துவமனை யாழ்ப்பாணம்.

## இக்கட்டான காலங்களில் சிறப்பான மக்கள் பணி!



37ஆவது அகவையில் கால்பதிக்கும் உதயன் பத்திரிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். தகவல் தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்து ஊடகத்துறை வியாபித்த வளர்ச்சி கண்டுள்ள இந்தநிலையில், உதயன் பத்திரிகை 36 ஆண்டுகளை வெற்றிகரமாக கடந்து, வீறுநடை போட்டுக்கொண்டு இருக்கின்றது. மிக இக்கட்டான- நெருக்கடியான காலகட்டங்களில்கூட எமது பிரதேசத்தின் நாளிதழான உதயன் சரியான உண்மைத் தகவல்களை மக்களுக்கு வழங்கியுள்ளது.

நீதி, நேர்மை, நெறிதவறாமை, நடுநிலை உண்மைத்தன்மை போன்ற குணாதிசயங்களுன் ஒவ்வொரு நாளும் காலையில் எமது மக்களை உதயன் தரிசிக்கிறான். எம் தமிழினத்தின் சமூகப் பொறுப்புணர்வுள்ள பத்திரிகையாக உதயன் வலம் வருகின்றான். சுகாதாரத் துறையைப் பொறுத்தவரையில் பெருந்தொற்று ஏற்பட்டுள்ள காலங்களில், அதைத் தடுப்பதற்குரிய விழிப்புணர்வுக் கருத்துக்களை மக்களுக்கு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் உதயன் பத்திரிகை சுகாதாரத் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களை மக்களுக்கு சரியானமுறையில், சரியான நேரத்தில் வழங்கியிருந்தது. உதயன் எமது சமூகத்தில் பல்லாண்டு காலம் தழைத்து நின்று சேவையாற்ற எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மருத்துவர் வி.கமலநாதன்,**
பதில் வைத்திய அத்தியட்சகர்,
ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை.

## தமிழ்த் தேசிய உணர்வுகளை மழுங்கடிக்காது பயணிப்பவன்



வடமாகாணத்தின் சிறந்த தமிழ் இதழ் என்ற பெருமைக்குரியதாக 36 வருடங்கள் ஊடகச் சேவையாற்றிய 'உதயன்' பத்திரிகையைப் பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

1985ஆம் ஆண்டு நவம்பர் 27ஆம் திகதி 'உதயன்' பத்திரிகை அதன் முதலாவது வெளியீட்டை மேற்கொண்டதிலிருந்து இன்று வரை அதன் வளர்ச்சியையும் எதிர்கொண்ட சவால்களையும் கண்கூடாகப் பார்த்தவன் என்ற முறையில் உதயனின் தனித்துவம் மேலோங்கி நிற்பதைப் பார்க்கின்றேன்.

தமிழ்த் தேசிய உணர்வுகள் மழுங்கடிக்காது ஊடகப் பணியைத் தொடர்ந்து நிறைவேற்றியமை பாராட்டுக்குரியது. தமிழ்த் தேசிய உணர்வுடன் இலக்கியம், சமயம், கல்வி போன்ற துறைகளிலும் 'உதயனின்' ஊடகப் பணி அற்புதமானது.

பத்திரிகைத்தாள் தடை, மின்சாரத் தடை, எரிபொருள் தடை, புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல், அரச சார்புகளின் அடாவடிகள் யாவற்றையும் சந்தித்து எதிர்நீச்சலடித்து 36 வருடங்கள் நீடித்து நிலைக்கும் உதயன் 37ஆவது அகவையில் கால்பதிக்கும் இந்த நாளில் இன்னல்கள், இடையூறுகள், தடைகள் நீங்கி சீரிய பணியாற்ற இறைவன் அருள் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

**சீ.வீ.கே.சிவஞானம்**
*அவைத்தலைவர், வடமாகாண சபை.*

## ஊடக தர்மம்காத்து சாதித்த உத்தமனே!



யாழ்ப்பாணம் மண்ணிலிருந்து வெளிவருகின்ற எம் தமிழ்த் தேசிய நாளிதழான உதயன், 37 ஆவது ஆண்டுக்குள் காலடி எடுத்துவைக்கின்றான் என்பதை அறிந்து எனது மனம் புளகாங்கிதமடைகின்றது. ஆசிரிய பீடத்தினரதும், நிர்வாகத்தினரதும் அயராத உழைப்பே உதயனின் இன்றைய நிலைபேறாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் உதயன் ஆசிரியபீடத்தினரதும், நிர்வாகத்தினரதும் அயராத பணி வியந்து போற்றத்தக்கதாகும்.

பல்வேறு காலகட்டத்தில் மக்களின் தேவையறிந்து காத்திரமான செய்தியைத் தொகுத்து வழங்கும் அற்புதமான பணியை உதயன் செவ்வனே ஆற்றுகின்றான். ஊடக தர்மம் காத்து மென்மேலும் மக்கள் பணியாற்ற வேண்டுமென்று உதயனை வாழ்த்துவதில் பேருவகை அடைகின்றேன்.

**திருமதி சி.சுஜீவா**
*ஆணையாளர், மாகாண மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம், வடமாகாணம்*




## Uthayan as the symbol of the North

"It's my great pleasure to congratulate the Uthayan newspaper and its team on the completion of 37 years of continuous publication on behalf of the Northern Province Tourism bureau.

Over the years Uthayan has maintained unbiased, people centric, high quality news and other reporting for the betterment of the Northern Province region and as a whole for theTamil community. Though it's very hard to acknowledge real sources of informa tion these days in the reporting media, Uthayan newspaper greatly put in effort to establish its context and facts and I appreciate their genuine effort.

On this commemorative occasion we wish all the very best for more years of success in Newspaper media and blessings from Northern Province Tourism Bureau for many more years of prosperity".

Best Regards!

**Stanley Mascarenhas**
Chairman
Northern Province Tourism Bureau
A9 Road, Kaithady, Jaffna.
Sri Lanka.

### எழுத்தாளர்களை உருவாக்கும் அற்புதமான பணி தொடரட்டும்!



பல தசாப்தங்களாக யாழ்.மண்ணின் கண்ணாடியாக உலகெங்கும் பிரதிபலிக்கும் உதயன் பத்திரிகையின் 37 ஆவது ஆண்டை முன்னிட்டு, வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். இலக்கியம், சமூகவியல், அரசியல், தமிழ்த் தேசியம், மனித உரிமைகள் தொடர்பாக ஆணித்தரமான களத்தை உதயன் எமது சமூகத்துக்கு அமைத்துக் கொடுத்துள்ளது. மேலும் இளம் எழுத்தாளர்களையும் புதிய தலைமுறை இலக்கியவாதிகள் பலரையும் உதயன் உருவாக்கியுள்ளது. இப்பணி தொடர்ந்து மிளிர எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

**மருத்துவர்.சி.யமுனாநந்தா**
*பிரதிப்பணிப்பாளர்*
*யாழ் போதனா வைத்தியசாலை.*

## கதிரவனைப் போன்று ஒளிவீசட்டும் உதயன்

எமது அபிமானப் பத்திரிகையான 'உதயன்' நாளிதழுக்கு இன்று 37ஆவது பிறந்தநாள். புதிய ஆண்டில் காலடி பதிக்கும் 'உதயன்' நல்ல முறையில் வளர்ச்சியுற்று இலங்கையில் குறிப்பாக யாழ்.மண்ணில் தனது சேவையை செவ்வனே ஆற்ற வேண்டும் என்று வாழ்த்துவதில் பேருவகை அடைகின்றோம்.

காலையில் எழுந்ததும் எமது கண்கள் முதலில் தேடுவது உதயனைத்தான். தனது ஒளிச் சுடர்களைப் பரப்பி நாட்டில் நல்லதே நடக்க வேண்டும் என்று கிரணங்களை நாலாபக்கமும் நீட்டி வரும் கதிரவனைப் போன்று உதயனும் பிரகாசித்து ஒளிவீச வேண்டுமென்று ஆசி நல்கி உளமார வாழ்த்துகின்றோம்.

**கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்**

## எமது மக்களின் உரிமைக்குரலாக உரக்க உரைக்கட்டும் உதயன்




பல நெருக்கடிகளையும் தடைகளையும் எதிர்கொண்டும் தளராமலும் தடம் மாறாமல் தனது இலட்சியப்பணயத்தில் தொடர்ந்தும் உறுதியுடன் பயணிக்கும் உதயன் நாளிதழ் 37ஆவது ஆண்டுக்குள் காலடிவைக்கின்றது. ஜனநாயகத்தின் 4ஆவது தூண் என வர்ணிக்கப்படும் ஊடகங்கள் ஒடுக்கப்பட்ட சமூகத்தின் உரிமைக் குரலாகவே இருக்க வேண்டும். அதனால்தான் ஊடகங்களை நாம் பொதுமக்களின் சொத்தாகவே கருதுகின்றோம். அவ்வகையில் தமிழ் மக்களின் ஒரு சொத்தான உதயன் நாளிதழ் இனவிடுதலைக்காகப் போராடும் எமது மக்களின் உரிமைக்கான குரலாக அன்றுமுதல் இன்றுவரை தொடர்ந்தும் ஒலிக்கின்றது.

'பல வேடிக்கை மனிதரைப்போல் வீழ்ந்துபோவேன் என்று நினைத்தாயோ' என்ற பாரதியாரின் வரிகளுக்கு வலுச் சேர்க்கும் வகையில் பல உயிர்பலிகளையும் அழிவுகளையும் கொலை அச்சுறுத்தல்களையும் தாங்கிக்கொண்டு இன்றும் தமிழ்மக்களின் மனங்களில் தமிழ்த்தேசியத்தை உயிர்போடு வைத்திருக்க உதவுபவன் உதயன் என்றால் அது மிகையல்ல.

37ஆவது ஆண்டுக்குள் காலடி எடுத்து வைக்கும் இந்நாளில் உதயனின் இந்த நெடிய பயணத்தில் தமது உயிர்களை அர்ப்பணித்த உதயன் நாளிதழ் பணியாளர்களையும் எம் மனதில் நிறுத்தி எமது மக்களின் உரிமைக்குரலாக தொடர்ந்தும் உதயன் உரத்து உரைக்க வாழ்த்துகின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
முதல்வர், யாழ்.மாநகர சபை

## போர்மேகம் சூழ்கையில் பொன்னான பணிசெய்தான்




ஈழத்தமிழ் பத்திரிகை வரலாற்றில் தனக்கென தன்னிகரற்ற தனியான இடத்தை பிடித்துள்ள 'உதயன்' தனது 37 வயதில் காலடி பதிக்கிறான் என்ற செய்தி மிக மகிழ்வுக்குரியது.

எம் மண்ணில் போர் மேகங்கள் சூழத்தொடங்கிய காலத்தில் சூல்கொண்டு பல்வேறு ஈகங்கள், அர்ப்பணிப்புகள், தியாகங்களைப் புரிந்து எண்ணற்ற சவால்கள், அச்சுறுத்தல்கள், சோதனைகள், பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வளர்ந்து உயர்ந்து ஒளிர்ந்து இன்றும் தளராத துணிவோடு நடைபோடுகிறான் அவன்.

காலையில் இந்த 'உதயனைக்' காண்பதும் கடன் என்பவர்கள் பலர். இன்றும் தன் ஒளிகுன்றாமல் வருவது அவன் திறம். இவ்வேளையில் இன்றுவரை 'உதயன்' பிரகாசிக்க உதவிய அனைவரையும் பாராட்டி இன்னும் பல்லாண்டு காலம் எம்மண்ணில் 'உதயன்' சுடர்விட்டுப் பிரகாசிக்க எனது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்து பணிகிறேன்.

**இ.த.ஜெயசீலன்**
ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.

## அஞ்சா நெஞ்சினன்



வெற்றிகரமாக 37ஆவது ஆண்டுக்குள் பல இன்னல்களையும் தடைகளையும் இழப்புக்களையும் தாண்டி வெற்றிக்களிப்புடன் தடம் பதிக்கும் உதயன் நாளிதழுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்களுக்கு உள்ளவற்றை உள்ளவாறு கொண்டு சேர்ப்பதிலும் மக்களுக்கேயுரிய மக்களின் குரலாகவும் ஊடகங்கள் விளங்கவேண்டும். அந்த வகையில் எங்களில் ஒருவராக உதயன் நாளிதளை நாம் காண்கிறோம், அதனடிப்படையிலே இத்தனை வருடங்களாக எங்களுடன், எங்கள் உரிமைக் குரலாய் ஒலித்து கொண்டிருக்கிறது.

பல உயிர்களைக் காவு கொடுத்தும் பல கொலை மிரட்டல்களைத் தாண்டியும் அஞ்சா நெஞ்சினனாய் இன்றும் தமிழ் மக்கள் மனங்களில் இடம்பிடித்து தமிழ்த் தேசியத்துக்காய் தளராது உழைக்கிறது உதயன்.

புத்தகவையில் காலடி பதிக்கும் உதயன் எம் மண்ணையும் மக்களையும் மனதில் இருத்தி தனது பணியை மேன்மேலும் சிறப்புடன் தொடர மனதார வாழ்த்துகிறேன்.

**பா.மயூரன்**, *தவிசாளர்,*
*நல்லூர் பிரதேச சபை.*

## தமிழர்களின் வரலாறோடு இரண்டறக் கலந்தவன்



தமிழ் மக்களின் உரிமைக் குரல் உதயனுக்கு அகவை 37. உதயனின் பயணத்தைத் தனியே ஓர் ஊடகப் பயணமாகப் பார்க்க முடியவில்லை. தமிழர் போராட்டத்தின் அங்கமாகவே நோக்கமுடிகின்றது. உதயன் எப்போதும் தமிழ் மக்களுக்காகவே பணியாற்றியிருக்கின்றான். போர்க்கால வரலாற்றை நோக்குகின்ற ஒருவருக்கு உதயனின் காத்திரத்தினை புறந்தள்ளிவிட்டு தமிழர் வரலாற்றை நோக்க முடியாத அளவுக்கு உதயன் பத்திரிகையின் ஊடகப்பணி அரும்பணியாக அமைந்திருந்துள்ளது.

உதயனின் ஊடகப்பயணத்தின் கனதி அதன் மீது சர்வதேசத்தின் கவனத்தையும் அங்கீகாரத்தினையும் ஏற்படுத்தி நிற்கின்றது. உலகிலேயே ஊடக அடக்குமுறைகளை அதிகப்படியாக எதிர்கொண்டபோதும் ஒருபோதும் தனது வெளியீடுகளை நிறுத்தாத உறுதி உதயனுக்கு நிகர் உதயன்தான்.

போரின் அச்சத்துக்குள்ளும் பாதிப்புக்குள்ளும் எமது மக்கள் திண்டாடியபோது உதயன் மக்களுக்கு அவர்களைச்சுற்றி என்ன நடக்கின்றது என்ற உண்மையை விட்டுக்கொடுப்பின்றி உரைத்து வந்திருக்கின்றான்.

ஊடகச் சுதந்திரம், தகவல் சுதந்திரம் என பலதரப்பட்ட தளங்களில் பேசப்படும் உரிமைகளுக்காக செயல்வடிவம் கொடுத்துப்போராடிய பெருமை உதயனையேசாரும். எமது மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளை மூடிமறைக்க வேண்டும் என நாட்டின் அரச கட்டமைப்பே திட்டமிட்டுச் செயற்பட்ட போதேல்லாம் உதயன் பத்திரிகை பேனாமுனையில் அதற்கெதிராக போராடியிருக்கின்றது. அந்தப் போராட்டத்தில் உயிர்த்தியாகங்களைக்கூட தியாகம் செய்தமை கண்டு கொள்ளத்தக்கது.

உதயன் பத்திரிகை தமிழ் மக்களில் கணிசமானவர்களுக்கு அரசியல் ஆசானாகவும் வழிகாட்டியாகவும் இருந்திருக்கின்றது. தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்தின் நியாயங்களை வெளிச்சொல்வதிலும் அதற்கு ஏற்றால்போல் வழிநடத்துவதிலும் அதன் பங்கு பெரியது. இவ்வாறாக ஒரு காத்திரமான ஊடகம் ஒன்று அகவையில் 37 ஆண்டுகள் காண்பதை இட்டு நானும் வலிகாமம் கிழக்கு மக்களும் பேருவகை அடைகின்றோம். உதயனின் பணி சிறக்கவும் வாழ்த்துகின்றோம்.

**தியாகராஜா நிரோஷ்,**
தவிசாளர்,
வலிகாமம் கிழக்கு பிரதேசசபை,
புத்தூர்.

## அரச அடக்குமுறைக்கு எதிராக எதிர்நீச்சல் போட்டவன் உதயன்



உதயன் பத்திரிகை தனது 36 வருடங்களைப் பூர்த்தி செய்து, தனது 37ஆவது ஆண்டில் கால் எடுத்து வைக்கின்றது. உதயன் பத்திரிகையின் வரலாறு மேலும் நீட்சி பெற எமது பிரதேச சபையின் சார்பிலும் பொதுமக்கள் சார்பிலும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்த் தேசிய நீரோட்டத்தில் உதயன் பத்திரிகையின் பங்களிப்பு என்பது அளவிட முடியாதது. எமது மக்கள் மீது அடக்குமுறைகள், ஒடுக்குமுறைகள் என வெளி உலகுக்குத் தெரியக்கூடாது என ஆட்சியாளர்கள் செயற்பட்டுவரும் நிலையில் அதற்கு எதிராக ஊடக தர்மத்தின் நிலை நின்று எதிர்நீச்சல் போட்ட பத்திரிகை என்பது மிகையாகாது.

ஊடகப் படுகொலைகள் காரியாலயத்துக்கு உள்ளே நடைபெற்றபோதிலும் தனது வெளியீட்டை எப்போதும் உதயன் நிறுத்தியதில்லை. சர்வதேச அளவிலும் இராஜதந்திர வட்டாங்களிலும் உதயன் பத்திரிகையின் காத்திரமான ஊடகப்பங்களிப்புக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் கௌரவம் அளிக்கப்பட்டு வந்துள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது.

எமது மக்களின் வாழ்வியல் பயணத்தில் உதயன் பிரித்துப்பார்க்க முடியாத ஓர் இலட்சிய நாயகனாக எப்போதும் வீற்றிருக்கிறான். எமது மக்களின் அரசியல் அபிலாஷைகளையும் அவர்களது அரசியல் நிலைப்பாட்டையும் தெட்டத்தெளிவாகப் பறை சாற்றுவதற்கு உதயன் வரலாறு நீட்சிபெற வாழ்த்துகின்றேன்.

**க.தர்ஷன்,**
*தவிசாளர், வலி.தெற்கு பிரதேசசபை,*
*சுன்னாகம்.*




உதயனாக
என்றும்
உயர்ந்து நிற்பாய்



ஆதவன் உதயமாவதற்கு முன்பதாக
அதிகாலை வேளைதனில்
எம் கைகளில் கிடைத்திடுவாய்
உடன் செய்திகள்
உண்மைச் செய்திகள்
உலகச் செய்திகள் அனைத்தும்
உன்னதமாய் என்றும் தந்திடுவாய்
உலகம் முழுதும் இன்று
உயர்ந்து நிற்கின்றாய்
ஊடக சுதந்திரத்துக்காக
உலக விருது வென்றவன் நீயே
தலைநகர் கொழும்பிலும்
உனக்கு ஓர் தனியிடம்
நடு நிலை என்றும் தவறாத நற்றமிழ்ஏடு
உன்னைப் போற்றுவர், ஏசுவர் அதற்காக – நீ
அஞ்ச வேண்டாம்.
உள்ளதை உள்ளபடி என்றுமே துணிச்சலோடும்
துணிவோடும் இன்றுபோல எழுதி வா

**நயினை விசு - இராசநாயகம்,**
*பிரதேச சபை உறுப்பினர், வேலணை.*



## தமிழ்த் தேசிய இனத்தின் ஆயுதமாக ஒலிக்கின்றான்



தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் மிகுந்த முக்கியத்துவம்வாய்ந்த நாளான நவம்பர் 27ஆம் திகதியன்று, அதாவது இன்று தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தில் காத்திரமான பங்களிப்பை நல்கிவரும் உதயன் தனது 36ஆவது அகவைக்குள் காலடி எடுத்து வைக்கின்றான். அவன் இதுநாள் வரையான தனது பயணத்தில் எதிர் கொண்ட சோதனைகளும் வேதனைகளும் அதிகம்.


அரசாங்கத்தின், ஊதுகுழலாக இல்லாமல் இனத்தின் நலனேமேலானது என்று தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு உரம் சேர்க்கும் ஆசிரியத் தலையங்கங்களைத் தீட்டியும், ஆக்கங்களையும் செய்திகளையும் பிரசுரித்தும் வந்தமையால் கொடுத்த உயிர்ப்பலிகளும் சொத்திழப்புக்களும் ஏராளம். எனினும், இன்றுவரை அவன் துவண்டுபோகவில்லை.

தமிழினத்தின் குரலாக உதயன் ஒலித்துக்கொண்டிருக்கும் அதேவேளை, ஊடகங்களின் நற்பண்புகளில் ஒன்றான நடுவுநிலை என்பதிலும் இதுவரை அவன் தவறியதில்லை. தமிழ்த்தேசியத்துக்கு எதிரான நிலைப்பாடு உடையவர்களின் கருத்துக்களையும் செய்திகளையும் மக்களுக்குத் தெரிவிப்பதில் அவன் ஒருபோதும் பின்னின்றதில்லை. இதனாலேயே சகல தரப்பாலும் நேசிக்கப்படும், வாசிக்கப்படும் ஒருவனாக உதயன் இன்றும் மிளிர்கின்றான்.

முள்ளிவாய்க்காலில் தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஆயுத அலகு முடக்கப்பட்டதன் பின்னர் தடுப்பாரின்றிப் பேரினவாதம் திட்டமிட்ட இன அழிப்பை இங்கே நிகழ்த்திக்கொண்டிருக்கிறது. இந்நிலையில் தமிழினத்திடம் இருக்கும் ஆயுதம் என்பது இன்றும் தமிழ்த் தேசியத்தில் இருந்து வழுவாத ஊடகங்கள்தான். அந்தவகையில், உதயன் எம் மக்களையும், அவர்தம் பிரதிநிதிகளான அரசியல்வாதிகளையும் நெறிப்படுத்தவும், வலுப்படுத்தவும், இனத்தின் குரலாக திக்கெட்டும் ஓங்கி ஒலிக்கவும் என்றும் குன்றாத இளமையுடன் துடிப்புடன் செயலாற்ற இயற்கை என்ற பேரிறைவனை இறைஞ்சுகின்றேன்.

**பொ.ஐங்கரநேசன்**
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

## உதயனின் இருப்பென்பது வெற்றியின் வெளிப்பாடே!



இலங்கை வாழ்மக்களின் நெஞ்சங்களில் நீங்கா இடம் கொண்டு திகழும் ஜனரஞ்சக பத்திரிகையாம் உதயன் பத்திரிகை தனது 37ஆவது அகவைக்குள் காலடி எடுத்து வைப்பதை முன்னிட்டு வெளியீடு செய்யப்படுகின்ற சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் உளமார மகிழ்கிறேன்.

அனுபவத்தில் நீட்சியான காலத்தையும் ஆழ்ந்த சிந்தனையும், அறிவாற்றல் மிகுந்த பத்திரிகையாளர்கள் குழாத்தையும் தன்னகத்தேகொண்டு திகழும் உதயன் பத்திரிகையானது அது சுமந்து வரும் பல்சுவை செய்திகள், கட்டுரைகள், ஆய்வுகள், இலக்கியம், சிறுவர் உலகம் என்பவற்றின் ஊடே பத்திரிகைத்துறையில் தனக்கென ஓர் இடத்தை தக்கவைத்துள்ளமையானது, அதன் இமாலய வெற்றியின் வெளிப்பாடெனவே நான் கருதுகின்றேன்.

தமிழ்த் தேசியப் பாதையில் தடம்மாறாது பயணிக்கும் உதயன் பத்திரிகை ஊடகப் பரப்பில் இன்னும் பல தசாப்தங்கள் தன் சீரிய பணியை வழங்க வேண்டும் என்று வாழ்த்தி அமைகின்றேன்.

**சுரேஷ் பிறேமச்சந்திரன்,**
தலைவர், ஈ.பி.ஆர்.எல்.எவ்.




## உதயனின் ஊடகப் பயணம் ஒரு இமாலய சாதனை!




37ஆவது ஆண்டிலேயே தடம் பதிக்கும் உதயன் பத்திரிகைக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள். ஊடக பரப்பிலே முப்பத்தி ஏழு ஆண்டுகளை கடப்பது என்பது ஒரு சாதாரண விடயம் கிடையாது. அதுவும் இலங்கை போன்றதொரு ஊடக அடக்குமுறைகள் நிறைந்த உரிமைகளும் சுதந்திரங்களும் பறிக்கப்பட்ட ஒரு நாட்டிலே 37 ஆண்டுகள் ஊடகப் பணியாற்றுவது என்பது உண்மையில் ஒரு இமாலய சாதனை ஆகும்.

அந்த வகையில் உதயனின் நிர்வாகத்துக்கும் ஊழியர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஜனநாயகத்தின் நான்காவது தூணாக வர்ணிக்கப்படுகின்ற துறையே ஊடகத்துறையாகும். அந்த வகையிலே ஊடகத்துறையின் மாண்புக்கு ஏற்ப தமிழர்களின் தாயகமான இணைந்த வடக்கு-கிழக்கு மற்றும் தமிழர்களுடைய சுயநிர்ணய உரிமை உத்தரவாதப்படுத்த வேண்டும் ஆகிய அடிப்படைக் கோட்பாடுகளைத் தொடர்ந்து வலியுறுத்தி தமிழ்த் தேசிய விடுதலைக்கான பயணத்தில் தொடர்ந்தும் உதயன் காத்திரமான ஒரு பங்காளராக இருக்க வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம்- விரும்புகின்றோம்- வாழ்த்துகின்றோம்.

மாற்றுக் கருத்துக் கொண்டவர்களுக்கும் இடம்வழங்கி எந்தநேரத்திலும் எந்தச் சூழலிலும் ஊடகத்துக்குரிய மாண்புகளோடு உதயன் தொடர்ந்தும் வெளிவரவேண்டும் என்று நாங்கள் மனதார வாழ்த்துகின்றோம்.

**கனகரட்ணம் சுகாஸ்,**
தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி




## மன்னார் மாவட்ட விவசாயிகளின் உற்றதோழன் உதயன் பத்திரிகை



உதயன் பத்திரிகையானது பல இன்னல்களை சந்தித்து இன்று ஒரு தமிழ் பேசும் சமூ கத்தின் வெற்றிகரமான ஒரு பத்திரிகையாக வலம் வந்து கொண்டிருப்பதை நினைத்து நான் பெருமைப்படுகிறேன்.

அதேவேளை மன்னார் மாவட்ட விவசாயிகளுக்கு தேவையான விவசாய தகவல்களையும் குளங்களின் நிலைமைகளையும் தொடர்ச்சியாக எடுத்துக்கூறி விவசாயிகள் தங்களுடைய விவசாய நடவடிக்கைகளை பாரதூரம் இல்லாமல் இலகுவாக செய்வதற்கு தேவையான அனைத்து விடயங்களையும் உதயன் பத்திரிகை செய்து கொண்டிருக்கின்றது.

மேலும் மன்னார் மாவட்டத்தில் இடர் நேரங்களில் விவசாய நிலங்களுக்கும் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை துல்லியமாக எடுத்துக் கூறுவதோடு மட்டுமல்லாமல், ஒரு இடர் நேரப் போவதை முன் கூட்டியே மக்களுக்கு தெரிவித்து விழிப்புணர்வுச் செயற்பாடுகளை செய்து கொண்டிருப்பதில் உதயன் பத்திரிகை முதன்மையான பங்காற்றுகின்றது என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். அது எனது தார்மீக கடமையும் ஆகும்.

உதயன் பத்திரிகை மேலும் மேலும் பல அகவைகள் கண்டு அனைத்து மக்களுக்கும் நல்லதொரு சேவையை செய்ய வேண்டும் என்று இந்நாளில் வாழ்த்தி நிற்கின்றேன்

**என்.யோகராசா**
நீர்ப்பாசனப் பணிப்பாளர்
மன்னார் மாவட்டம்

## உயர்ந்து மிளிரட்டும் உதயன்



மக்களின் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ் உதயன். 37ஆம் ஆண்டில் வெற்றிநடைபோட இருக்கின்றான் என்பது மகிழ்வான செய்தி.

இலங்கை வாழ் தமிழர்களின் குறிப்பாக வடபகுதி தமிழர்களின் வாழ்வோடு பின்னிப்பிணைந்த பத்திரிகை உதயன். மிகவும் பிரச்சினைகள் சிக்கல்கள் நிறைந்த காலகட்டங்களில் தமிழ்மக்களின் தோழனாக ஆலோசகனாக வழிகாட்டியாக விளங்கி யது உதயன், இன்றும் காலை எழுந்ததும் தேநீர்கோப்பையுடன் உதயனை தேடுபவர்கள் அதிகம். அரசியல், பொருள்தாரம், ஆன்மிகம், கல்வி கலாசாரம், பொழுதுபோக்கு என அனைத்து அம்சங்களையும் காலை உதிக்கும்போதே கொண்டுவரும் உதயன், சமய சஞ்சீவியாகவும் விளங்கி வீடுகளை மிளிரவைக்கின்றான். உதயன் 100ஆண்டு விழாக்கண்டும் மேலும் மிளிர்ந்து வளர்ந்து பணி செய்ய வாழ்த்துகின்றேன்.

**தமிழருவி த.சிவகுமாரன்**
அமைப்பாளர், வவுனியா தமிழ்ச்சங்கம்.

## தமிழர்களின் உணர்வுகளுடன் ஒன்றித்துள்ளவன் உதயன்!



தமிழ் மக்களின் முதல் நிலை ஊடகங்களில் ஒன்றாக விளங்கி வரும் உதயன் பத்திரிகை தனது 37ஆவது ஆண்டில் காலடி வைப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

உதயன் கடந்துவந்த அத்தனை ஆண்டுகளும் தமிழினத்தின் வரலாற்றிலும் உதயனின் வரலாற்றிலும் முக்கியமானதாகும். தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்கான போராட்டமும் அந்தப் போராட்டத்தின்போது நடந்த நிகழ்வுகளும் அதனுடைய வரலாற்றுச் செல்வழியும் எவ்வாறிருந்தன என்பதை உதயனின் தடங்களில் காணலாம். மக்கள் பத்திரிகையாக உதயன் 36 ஆண்டுகளாக நீடித்திருப்பதற்கு அது கொண்டிருக்கும் உறுதிப்பாடே காரணமாகும். மக்களின் உணர்வுகளோடும் அவர்களுடைய அரசியல் போராட்டத்தோடும் இணைந்து நின்றதால் மக்கள் அந்தக் காலத்தில் சந்தித்த பலவிதமான அச்ச நிலைகளை உதயனும் சந்திக்க வேண்டியேற்பட்டது. அது கொண்டிருக்கும் உறுதிப்பாடே இன்றைய வெற்றியாக அமைந்துள்ளது. ஓர் ஊடகமானது சமூகத்தில் பல விதமாகச் செல்வாக்குகளைச் செலுத்தும் என்பதற்கு அமைய உதயனின் செல்வாக்கினால் இன்று சமூகத்தில் பல துறைகளிலும் ஆளுமையாளர்கள் உருவாகியுள்ளனர். இது நமது வரலாற்றில் உதயனுக்கான சிறப்பிடத்தைக் கொடுக்கும். தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் ஊடகத்துறைப் பண்பாட்டுக்கும் உதயன் அளப்பரிய பணிகள் ஆற்ற வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

**முருகேசு சந்திரகுமார். தலைவர். சமத்துவக் கட்சி.**
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்



# அகவை 37



## தமிழ் மக்களின் குரலாக ஒலிக்கின்றான் உதயன்!



தமிழ் மக்களின் குரலாகத் தொடர்ந்து உரத்து ஒலித்துக் கொண்டிருக்கின்றான் உதயன்.

கடந்த 36 ஆண்டுகளாக பத்திரிகைத் தர்மத்தின் வழிநின்று, சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் படித்து இன்புறும் வகையில் பல்வேறு விடயங்க ளைத் தாங்கிவரும் உதயனுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன். பல்வேறு நெருக்கடியான காலகட்டங்களிலும் நடுநிலையில் நின்று தன் சேவையை வழங்கத் தவறாத உதயன் தனக்கே உரித்தான மிடுக்குடன் தொடர்ந்தும் பயணிக்க வாழ்த்துகின்றேன்.

**ம.ஜெகூ**
பிரதேச செயலர்,
காரைநகர் பிரதேச செயலகம்.

## தமிழ் மக்களுக்கு கிடைத்த வரப்பிரசாதம்


தமிழ் மக்களின் வாழ்வியலோடு ஒன்றித்து பயணித்த உதயனுக்கு வாழ்த்துரை வழங்குவதற்கு எனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். கடந்த 37 ஆண்டு காலமாக தமிழ் மக்களின் துடிப்பறிந்து அவர்களிற்கான வழிகாட்டியாகவும், செல்லும் பாதையில் உற்ற தோழனாகவும் பயணித்த உதயன் இற்றைவரை தொடர்ந்து பயணிப்பது தமிழ் மக்களுக்கு கிடைத்த பெரும் வரப்பிரசாதமாகும்.

ஓர் சமூகம் உயர்வான நிலைக்கு தன்னை நகர்த்திச் செல்வதற்கு அந்தச் சமூகம் சார்ந்த ஊடகத்துறை தனது சேவையை சிறப்பாக செய்ய வேண்டும். அந்த வகையில் தமிழ்ச் சமூகம் தனது இலக்கில் வெற்றிநடை போடுவதற்கு ஏற்ற உயர்வான பணியினை உதயன் தனக்கேயான மிடுக்குடன் செயலாற்றி வருவது போற்றுதற்குரியது.

உதயன் தனது ஊடக பணிக்காக இழந்த இழப்புக்கள் மிகப்பெரிது. இத்தகைய இழப்பினை எதிர்கொண்டும் தனது பயணப் பாதையில் சற்றும் தளராது பயணித்து 36 ஆண்டு காலமாக தமிழ் மக்கள் வாழ்வியலோடு வீறாப்புடன் செயலாற்றி வருவதானது, தான் சார்ந்த சமூகத்தின் மீது கொண்ட பற்றுதியேயாகும் என்பதுடன் உதயன் தனது இலக்கைத் தொடர்ந்து உயரிய பல இலக்குகளை அடைய வேண்டும் என்பதுடன், தனது தடத்தினை அகலப்பதித்து பெருவிருட்சமாக மலர்ந்து இன்னும் பல சாதனைகள் படைக்க வேண்டுமென உளமார வாழ்த்தி நிற்கின்றேன்.

**யு.ஜசோதா**
*பிரதேச செயலாளர்,*
*பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்.*

## உதயன் என்பவன் பீனிக்ஸ் பறவை!



37ஆவது அகவை காணும் உதயன் - சஞ்சீவி நாளிதழுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின் றேன். நியாயங்களுக்காகக் குரல்கொடுப்பதோடு அநியாயங்களைத் தட்டிக்கேட்கும் மக்களின் குரலாக விளங்கும் உதயன் கடந்துவந்த பாதை மிகக் கடினமானது. சகல தடைகளையும் தாண்டி பீனிக்ஸ் பறவைபோல எழுந்துநிற்கும் 'உதயன்' தன்பணி தொடர வாழ்த்துக்கள்.

**எஸ்.தயாளபாலன்**
*உப செயலாளர்*
*கரப்பந்தாட்டச் சங்கம்*
*யாழ்ப்பாண மாவட்டம்*

## உதயன் ஒரு கருத்துருவாக்கி



ஊடகத்துறையில் இத்தனை வருடங்கள் நிலைத்து நிற்றல் என்பதே மிகவும் அவதானமாகப் பார்க்கப்பட வேண்டிய சாதனைதான். எத்தனைவிதமான இன்னல்களையும் தடங்கல்களையும் தாண்டி உதயன் பயணப்பட்டிருக்கின்றது என்பதற்கப்பால் இப்போது வரையும் அதன் பயணம் தொய்வின்றித் தொடர்கின்றதென்பது முக்கியமானது.

தமிழ் தேசியப் போராட்டத்தில் கருத்தியல் ரீதியிலான களத்தை எப்போதும் உயிர்ப்புடன் வைத்திருத்தல் என்பது மிகவும் முக்கியமான விடயம். அதற்கு அபார ஆற்றலும் துணிச்சலும் தேவை. எல்லாவற்றுக்கும் அப்பால் தனது மக்கள் மீதான காதலும் அபிமானமும் நேசமும் வலுவாக அமையப்பெறுகின்றபோதுதான் இன்னல்கள் அனைத்தையும் துச்சமெனக்கொண்டு அத்தகைய கருத்தியல் போராட்டத்தளத்தை உயிர்ப்போடு வைத்திருக்கவும் முடியும். அந்த அடிப்படையில் உதயனின் தமிழ்தேசியப் போராட்டத்துக்காக கருத்தியல்தள ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் அளவீடு செய்ய வார்த்தைகள் கிடையாது. ஒரு கட்டத்தில் உதயனின் கருத்து குறிப்பிட்ட விடயத்தில் என்னவாக இருக்கின்றது என்பதை அறியும் ஆவல்கொண்ட சூழல் உருவாகி இருந்தது. அதுதான் மக்களுக்கான ஊடகப்பணியின் தவிர்க்கவொனாத வெற்றி. அந்த வெற்றி உதயனுக்குக் கிடைத்திருக்கின்றது.

உதயன் இன்னும் நீண்ட காலம் ஊடகப்பபணி செய்து செழித்து தனித்துவமாகத் தலைநிமிர்ந்து ஓங்கிய புகழோடு வளமாக நிற்க எனது வாழ்த்துகளும் பிரார்த்தனைகளும்

**கே.வி.தவராசா**
ஜனாதிபதி சட்டத்தரணி

## தடைகளைத் தகர்த்தெறிந்து எழுச்சியுறுகின்றான் உதயன்

தமிழ் மக்களின் குரலாய் ஓங்கி ஒலிக்கும் உதயன் பத்திரிகை 36 வருடங்களை கடந்து தனது 37ஆவது ஆண்டில் தடம் பதிப்பதையிட்டு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ்ப்பாணத்தை தளமாகக்கொண்டு இயங்குகின்ற ஊடகங்களுள் உதயன் தமிழ் மக்களுடைய உணர்வலைகளை வெளிப்படுத்துகின்ற ஒரு ஊடகமாக விளங்குகின்றமை யாவரும் அறிந்ததே.

வருகின்ற தடைகளையெல்லாம் உடைத்தெறிந்து துணிச்சலுடன் வளர்ச்சியும், எழுச்சியும் பெற்ற ஒரு பத்திரிகையாக உதயன் தலைநிமிர்ந்து நிற்கின்றான். அச்சு ஊடகமாக அவதரித்த உதயன் இன்று மாறிவரும் தொழிநுட்ப முன்னேற்றத்துக்கு ஏற்றவாறு தன்னையும் மாற்றியமைத்து வளர்ச்சியடைந்துள்ளான் என்றால் மிகையாகாது.

இத்தகைய பெருமை மிக்க உதயன் தனது 36 வருட சவால்கள், சோதனைகள், மற்றும் பல்வேறு நெருக்கடி நிலைமைகளுக்குள்ளும் தனது பணியில் தளர்வுறாது இன்று 37ஆவது அகவையில் தடம் பதிப்பதையிட்டு பெருமையடைகின்றேன்.

**எஸ்.சுதர்சன்,**
பிரதேச செயலாளர்,
யாழ்ப்பாணம்.

## நடுநிலை காத்து மேலும் வளர்க!



கடந்த 36 ஆண்டு காலமாக வடபுலத்து மக்களின் மனதில் நீங்காது நின்றொலிக்கும் பெயராக உதயன் திகழ்கின்றது.

ஒவ்வொரு காலகட்டங்களிலும் ஏற்பட்ட ஒவ்வொரு வகையான இடர்பாடுகளையும் தாங்கி தமிழ் மக்களுக்கான தன் பணியைச் செவ்வனே ஆற்றிவரும் உதயனின் பணி மகத்தானது. செய்திகளை உடனுக்குடன் வழங்குவதுடன், இலக்கியத்துறை சார்ந்த வகையிலும், உதயனின் வாரமலரான சஞ்சீவிக்குப் பெரும்பங்குண்டு. குடாநாடு யுத்தத்தால் முடங்கியிருந்த போது பலரது எழுத்தாற்றலுக்குக் களம் கொடுத்தது உதயன் சஞ்சீவியேயாகும். அவ்வகையில் முப்பத்தாறாண்டுகளைக் கடந்து இன்னும் பல்லாண்டுகள் வீறுடன் பயணிக்கவிருக்கும் உதயனை அவனது பிறந்த நாளில் வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

**திருமதி பிரேமினி பொன்னம்பலம்**
*பிரதேச செயலாளர், வலி மேற்கு.*

## ஈழத்தமிழரின் இதயத்துடிப்பு



உதயன் ஒரு நாளிதழல்ல. அவன் ஈழத் தமிழர்களின் இதயத் துடிப்பு. ஈழத் தமிழரின் வாழ்வை, இருப்பை, இயல்பை, கருத்தியலை, ஜனநாயகப் பண்பை, அரசியல் அபிலாசைகளை, பண்பாட்டு செல்நெறியை எடுத்தியம்பும் ஓர் குறிகாட்டி.

உதயன் தான் எம்மக்களின் கருத்தியலை உருவாக்கும் கருத்துக் கருவூலமாக கடந்த 36 ஆண்டுகளாக கோலோச்சி வருகின்றான். தினமும் செய்திகளை பிரசுரிக்கும் ஒரு சராசரி நாழிதழ் எனும் தன்மையினைத் தாண்டி உதயன் எம்மக்களின் கருத்தியலை பிரதிபலிக்கும் கண்ணாடியாக முதன்மை பெற்று மிளிர்கின்றான். உதயனை கடந்த 36 ஆண்டுகளாக எம்மினத்தின் குரலாக ஒலிக்கும் ஓர் ஊடகமாக உருவாக்கி வளர்த்தெடுத்த ஆசிரியபீடத்தினருக்கும், தடைகள் பலதாண்டி கொள்கைப்பிடிப்போடு உதயனை உதயமாக்கிவரும் நிர்வாக இயக்குநருக்கும் என் பாராட்டுக்களை தெரிவிப்பதோடு உதயன் நூற்றாண்டுகள் கண்டு எம் விடுதலையை எமக்கு அறிவிக்கும் நாளிதழாக நாளும் மலர வாழ்த்துகின்றேன்.

**த.முகுந்தன்**
*பிரதேச செயலர்*
*உடுவில் பிரதேச செயலகம்.*

## சரித்திரம் போற்றும் உதயன்



ஈழத்தின் வடபகுதியில் இருந்து தமிழ் இனத்தின் பெருமைகளையும், தமிழ் மக்களின் உரிமைகளையும் வரி வடிவங்களாய் சுமந்து உலகெங்கும் வியாப்பித்திருக்கும் உதயன் இன்று தனது 37ஆவது வயதில் காலடி எடுத்து வைக்கின்றான்.

36 வருட காலப்பகுதியில் உதயன்பட்ட துன்பங்கள் சொல்லிலடங்காதவை. துப்பாக்கி முனையில் பல உயிர்களையும் உடமைகளையும் இழந்த பின்பும் மனம் சோராமல் 37ஆவது அகவையிலே காலடி எடுத்து வைக்கின்றான். தமிழ் மக்களின் விடிவுக்காகவும், தமிழ் மக்களின் விடியலுக்காகவும் இரவு பகல் பாராது அயராது உழைத்து உலகெங்கும் வாழும் மக்களின் மனங்களிலே மாறாத இடம்பிடித்த உதயன் இன்று 37 ஆவது வயதில் காலடி வைத்துள்ளமை கண்டு உள்ளம் பூரிப்படைகின்றேன்.

தமிழ் இனத்தின் அச்சு ஊடகமாக விளங்கிய நீ இன்று இலத்திரனியல் சாதனங்களில் மின்னிதழ்களாகவும் வலம் வருவதைக் கண்டு உலக வாழ் மக்களும் மகிழ்ச்சியடைகின்றனர். பக்கச்சார்புகள் ஏதுமின்றி உண்மைச்செய்திகளை உன் பேனா முனை தினந்தோறும் போராடுவதைக் கண்டு உள்ளம் மகிழ்கின்றேன். இதே போன்று நீ இன்னும் நூறாண்டு காலம் மிடுக்குடன் பேனா முனை கொண்டு போராட வேண்டும் என உனது 37ஆவது அகவையிலே வாழ்த்துகின்றேன்.

**த.நடனேந்திரன்,** தவிசாளர்.
வலிகாமம் மேற்கு பிரதேச சபை.

## மகத்தான சேவை மண்ணில் தொடரட்டும்



ஈழத்தமிழர்களின் நெஞ்சங்களை வென்று 37ஆவது வருடத்தில் கம்பீரமாக காலடி எடுத்து வைக்கும் உதயன் நாளிதழிதளுக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் நான் பெரும் மகிழ்வடைகின்றேன்.

தமிழ் பேசும் மக்களின் தனித்துவமான நாழிதழாக இத்தனை வருட போராட்டங்களைத் தாண்டியும் நிலைத்து நீடித்து தனது கரங்களை ஓங்கச் செய்திருக்கின்றான் உதயன் என்றால் இதனை ஒரு சாதனைப்பயணமாகவே நான் பார்க்கின்றேன். பல்வேறுபட்ட செய்திகளையும் துணிச்சலாகவும் உண்மையானதாகவும் உடனுக்குடனும் வெளியிடுவதில் சுறுசுறுப்பான தனது சேவையினை இற்றைவரை உதயன் வழங்கி வருகின்றான் என்றால் மிகையாகாது. உதயனின் மகத்தான சேவை தொடர எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**க.வாமதேவன்**, தவிசாளர்,
சாவகச்சேரி பிரதேச்சபை,

## பத்திரிகா தர்மத்தை பின்பற்றி உயர்ந்து நிற்கின்றான்

பாமர தமிழ் மக்களின் குரலாக யாழில் வெளிவந்து கொண்டிருக்கும் உதயன் பத்திரிகையானது முப்பத்தி ஆறு ஆண்டுகளைப் பூர்த்தி செய்து 37ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறான். அதனை ஒட்டி வெளிவர உள்ள சிறப்பு இதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

பல இடர்கள் வந்தபோதும் பத்திரிகைதர்மத்தைப் பின்பற்றி உண்மை விடயங்களை உரக்கச் சொல்வது உதயனுக்கு நிகர் உதயன் என்றால் மிகையாகாது. அரசியல் மாத்திரமல்லாமல் சமூக சமய கலாச்சார பண்பாட்டு விழுமியங்கள் போன்ற பல்வகைச் செய்திகளை நித்தமும் தன்னகத்தே கொண்டு தமிழர் கரங்களில் தவழும் உதயனின் பணி தொடர்ந்தும் சிறக்க உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ம.அப்புத்துரை**
தவிசாளர்
பிரதேச சபை
காரைநகர்




## தமிழ்த் தேசியத்தின் பாதையில் தடம்மாறாமல் பயணிக்கின்றான்!

உதயன் பத்திரிகை 37ஆவது அகவையில் கால் பதிப்பது குறித்து நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். தமிழ்த் தேசியச் சூழலில் உதயன் பத்திரிகை ஆற்றிவரும் ஊடகச் சேவை அளப்பரியது. மக்களின் தேவைகளை நிறைவேற்றப் பக்கபலமாகவும், நேரியதோர் வழிகாட்டியாகவும் சமூகத்தின் உரிமைக்குரலாகவும் அமையும் ஊடகங்களின் வரிசையில் உதயனின் சேவையும் அளப்பரியது.

தான் வரித்துக்கொண்ட ஊடகக் கொள்கையின்பால் முப்பத்தாறு ஆண்டுகள் கழிந்தும் வழி தவறாது நெறி மாறாது ஊடக தர்மத்தின் சான்றாக இன்றுவரை உதயன் விளங்குகின்றது. இந்திய இராணுவத்தினர் ஈழப்பகுதிகளினை ஆக்கிரமித்திருந்த போது உதயன் வாரப்பத்திரிகை மூலம் எழுதப்பட்ட கட்டுரைகள், தமிழ்த்தேசியச் சூழலை அடித்தளமாகக் கொண்டு விளங்கியதை நாம் அறிவோம். அன்று தொட்டு இன்று வரை தடம் மாறாத தமிழ்த்தேசியத்தையும் ஊடக தர்மத்தையும் இணைத்துச் செல்லும் பாங்கு மதிப்பிற்குரியதாகும்.

பல்வேறு சந்தர்ப்பவாத ஊடக வெளியீடுகளுக்கு மத்தியிலும் ஆயுத அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் அடிபணியாது நின்று ஈழ மக்களின் அபிலாசைகளையும் எதிர்பார்ப்புக்களினையும் பூர்த்தி செய்து நற்சேவை புரியும் உதயன் பத்திரிகையின் ஊடக குழாமிற்கு 37ஆவது அகவையில் வாழ்த்துத் தெரிவிப்பதில் கரைச்சி பிரதேச சபையினர் ஆகிய நாம் மகிழ்வும் நிறைவும் கொள்கின்றோம்.

**அருணாசலம் வேழமாலிகிதன்**
*தவிசாளர்*
*கரைச்சி பிரதேச சபை , கிளிநொச்சி*

## சோதனைகளை எதிர்கொண்டு சாதனைகளாக மாற்றியவன்



தமிழர் மனங்கவர் நாளிதழாக விளங்கும் பத்திரிகையென்றால் அது உதயன் பத்திரிகைதான். இந்தப் பத்திரிகை தொடங்கிய ஆண்டிலிருந்து இற்றைவரை பல சோதனைகளுக்கு முகங்கொடுத்துள்ளது. உதயன் குழுமத்தின் பணிப்பாளர், செய்தியாளர்கள் மற்றும் ஊழியர்கள் பல அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டுள்ளனர். எனினும் எவ்வித தொய்தலும் இன்றி உண்மையை வெளிக்கொணர்வதில் உதயன் பத்திரிகை பல சாதனைகளையும் புரிந்துள்ளது. உதயனின் ஆசிரியர் தலையங்கம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

நாட்டின் தேவையினை நாட்டில் நடப்பவை பற்றிய நடுநிலைமையான கருத்தாக அவை இருப்பது பெறுமதியானது. இன்று இலங்கையில் மட்டுமல்லாது கணினிப்பதிப்பின் மூலம் சர்வதேசங்களில் இருக்கும் புலம்பெயர் தமிழர்களும் உதயன் பத்திரிகையைத் தினமும் வாசிக்கின்றனர்.

ஞாயிறுதோறும் வெளிவரும் வாரமலர் சஞ்சீவி பத்திரிகையானது உதயனை மேலும் மெருகூட்டும் ஒரு அம்சமாகும். இனிவரும் காலங்களிலும் உதயன் பத்திரிகை தனது தார்மிகக் கடமையை சிறப்பாக செய்ய வேண்டும் என்ற வேண்டுதலுடன் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

**அ.ஜெபநேசன்**
தவிசாளர்
வலி.தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

## பத்திரிகைப் பணிக்கு இலக்கணம் வகுத்தவன்



உதயன் பத்திரிகை உதயமாகி இன்று முப்பத்தாறாவது வருட நிறைவை கொண்டாடுகின்ற இவ்வேளையில் அதனை வாழ்த்துவதில் பெருமிதம் அடைகின்றேன்.

வடபுலத்து தமிழ்மக்களை அதிகளவில் உள்ளீர்த்து பல்வேறு சோதனைகளில் சாதனை படைத்த ஒருபத்திரிகை என்றால் அது நிச்சயமாக உதயன் பத்திரிகையாகத்தான் இருக்கமுடியும்.

ஊடகம் என்பது உண்மை நிலையை சீர்தூக்கிப் பார்ப்பதுடன் சமூகம் சார்ந்த அடக்குமுறைகளை துணிச்சலுடன் வெளிக்கொணர்வதும் தனது வாசகர்களுக்கு சரியான தகல்களை உரிய நேரத்தில் வழங்குவதும் மிகமுக்கியமாகும். அந்தவகையில் உதயன் பத்திரிகையானது இவ்விடயத்தை செவ்வனே செய்துமுன்னிலையிலும் உள்ளது.

இவ்வாறு இப்பத்திரிகை முதன்மை பெறுவதற்கு இப்பத்திரிகையை நடத்துகின்ற பத்திரிகை ஆசிரியர், செய்தி சேகரிப்பாளர்கள், தொகுப்பாளர்கள் பிரதேச நிருபர்கள் ஆகியோரின் அர்ப்பணிப்பான சேவையும் துணிச்சலான செயற்பாடுகளுமே காரணமாகும். இப்பத்திரிகை பொன்விழா தொடங்கி பல விழாக்கள் கண்டு பல சாதனைகளை படைக்கவேண்டுமென வாழ்த்துவதோடு உதயன் குழுமத்தை பாராட்டுகின்றேன்

**ச.தணிகாசலம்**, *தவிசாளர்*
*வவுனியா வடக்கு பிரதேசசபை*

## முட்கள் நிறைந்த பாதையில் உதயனின் வெற்றிப் பயணம்



ஈழத்திருநாட்டின் மகுடம் என விளங்கும் வடபால் அமைந்துள்ள பகுதிகளில் தமிழ்மொழி செய்தித்தாள்கள் வரிசையில் தனக்கென்றொரு இடம் பிடித்து மிளிர்கின்ற உதயன் பத்திரிகை தனது 37ஆம் ஆண்டில் கால் பதிப்பதையிட்டு பேருவகை அடைகின்றேன்.

1985ஆம் ஆண்டின் தனது தோற்றத்திலிருந்து இன்று வரை உதயன் தனது காலத்தை முட்கள் நிறைந்த பாதை வழியே தனது சாதனைப்பயணத்தை மேற்கொண்டு, ஈழத்தமிழ் மண்ணில் கடுமையான உழைப்பின் மத்தியில் தமிழர் வரலாற்றுடன் இணைந்து, வளர்ந்து, பிரிக்க முடியாத பந்தத்தை ஏற்படுத்தி, மக்களின் மனங்களில் நீங்காத இடம்பிடித்த நடுநிலை நாளிதழாகவும் மக்கள் குரலாகவும் ஒலித்த வண்ணம் என்றும் உதயன் திகழ்வது பாராட்டுக்குரியதொன்றாகும்.

மிகப்பெரிய வாசகர் வட்டத்தை தன்னகத்தே கொண்டு இனிய செந்தமிழில் தமிழர்க்ளின் நம்பிக்கைக்குரிய நாளிதழாகவும் கலை, இலக்கியம், அறிவியல், அரசியல், சமூகம், ஆன்மிகம், விளையாட்டு என அனைத்து துறைகளைச் சார்ந்த செய்திகளையும் வெளியிட்டு, இன்று ஆன்றோர், இளைஞர், மங்கையர், பாலகர் என அனைத்து தரப்பினரும் விரும்பும் நாளிதழாகவும் தனித்த அடையாளத்துடன் உதயன் திகழ்கின்றமை பெருமைக்குரியதொன்றாகும்.

தமிழர்கள் பெருமிதம் கொள்கின்ற வகையில் வெற்றிமேல் வெற்றிகளை குவித்து வருகின்ற உதயன், மேலும்பல சாதனைகளைப் படைத்து, தமிழ்கூறும் நல்லுலகு உள்ள வரை மேன்மேலும் வளர்ந்தோங்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்

மேலும் இந்தப் பத்திரிகை நிறுவனத்தின் சாதனைக்கு வித்திட்ட அனைவருக்கும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சோமசுந்தரம் சுகிர்தன்,**
தவிசாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேசசபை,
காங்கேசன்துறை

## தான் வரித்துக்கொண்ட கொள்கையில் தடம் புரளாது பயணிப்பவன் 'உதயன்'



உயிர்ப் பலிகளையும் சொத்திழப்புக்களையும் தாங்கிக்கொண்டு தமிழ்பேசும் மக்களுக்கான மகத்தான சேவையில் அல்லும்பகலும் உழைத்துவரும் 'உதயன்' பத்திரிகைக்கு எனது பிறந்தநாள் வாழ்த்துக்கள்.

36 ஆண்டுகளாகத் தமிழ்த் தேசிய நாளிதழாக வலம்வரும் 'உதயன்', தான் வரித்துக் கொண்ட கொள்கையில் தடம்புரளாது தொடர்ந்து பயணிப்பான் என்பதில் எவரும் ஐயம் கொள்ளத் தேவையில்லை.

தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களின் குரலாக 'உதயன்' தொடர்ந்து ஒலித்து வருகின்றான். அதிக பக்கங்களுடனும் ஏராளமான வாசகர் வட்டத்துடனும் தமிழர் தாயகத்தில் 36 ஆண்டுகளாகத்தொடர்ந்து நிலைத்து நிற்கும் ஒரேயொரு பத்திரிகையாக 'உதயன்' மிளிர்கின்றான்.

தமிழினத்தின் உரிமைக்கான விடுதலைப் போராட்டத்தின் புனிதமான நாளான நவம்பர் 27ஆம் திகதி 37ஆவது ஆண்டுக்குள் காலடி எடுத்துவைக்கும் 'உதயன்' என்ற தன்மான நாளிதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

**அ.சா.அரியகுமார்**
தவிசாளர்,
பிரதேசசபை,
பருத்தித்துறை.

## சிறுபான்மை மக்களுக்காக வீறுகொண்டு செயற்படுபவன்


உதயன் பத்திரிகை இலங்கை முழுவதும் வாழும் அனைத்து சிறுபான்மை மக்களுக்காகவும் வீறுகொண்டு செயல்படும் பத்திரிகையாக மிளிர வேண்டும் என்பது எனது ஆசை.

இலங்கையில் வாழும் சிறுபான்மை மக்களுக்காக ஒரு தனித்துவமான குரலாக வெளிவந்து கொண்டிருக்கும் உதயன் பத்திரிகையின் 36ஆவது வருட பூர்த்தியையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

உதயன் பத்திரிகை செய்தி மூலம் எத்தனையோ வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட கிராமங்களில் அபிவிருத்திகள் நடைபெற்றதைக் காணக்கூடியதாக இருந்தது. ஏற்ற இறக்கம் இல்லாமல் சிறுபான்மை மக்களின் குரலாக ஒலிப்பதில் உதயன் பத்திரிகைக்கு நிகர் எதுவுமில்லை. பல தசாப்தங்கள் கடந்து தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமை அவர்களுடைய கலாசார பண்பாட்டுக் காகவும் செயற்பட்டுவரும் உதயன் பத்திரிகையை நினைத்து நான் பெருமிதம் அடைகிறேன்

உதயன் பத்திரிகையின் பிரதிகள் வடபகுதி மக்களுக்கு மட்டுமல்லாமல், இலங்கை முழுவதும் உள்ள சிறுபான்மை மக்கள் அனைவருக்கும் கிடைக்கும் வகையில் வழிசெய்ய வேண்டும் என்று உதயன் பத்திரிகையின் 37ஆவது அகவையில் கேட்டுக்கொள்கின்றேன்.

**அப்துல் முகமட் முஜாஹிர்**
*தவிசாளர்,*
*மன்னார் பிரதேசசபை.*




## தமிழ்த் தேசியத்தின் உரிமைக்காக தொடர்ந்து ஒலிக்கவேண்டும் உதயன்



நீண்ட நெடிய காலமாக பௌத்த மேலாதிக்க சிந்தனைவாதிகளால் அடிமைப்படுத்தப்பட்டு வந்திருக்கின்ற தமிழ்ச் சமுகத்தின் உரிமைக்குரலாக மூலைமுடுக்கு எங்கும் ஒலித்து, எங்கெல்லாம் தமிழ்த் தேசிய இனத்துக்கு அநீதி இழைக்கப்படுகின்றதோ அங்கெல்லாம் சென்று அவர்களின் குரலை உலகறியச் செய்து, அவர்களின் வாழ்வியலோடு ஒன்றித்துப் போயுள்ள எங்கள் உதயன் 37ஆவது அகவை காண்பது மகிழ்ச்சியே.

எமது இனத்தின் வீர வரலாறுகளை இளைய தலைமுறையிடம் கொண்டு சேர்ப்பதிலும் தாயக இனவிடுதலை போராட்டத்தை வளர்ப்பதிலும், ஊக்கப்படுத்துவதிலும், எமது கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை பேணிப்பாதுகாப்பதிலும் உதயனுக்கு நிகர் உதயனே! 37ஆவது அகவையில் காலடிவைக்கும் உதயன் வருகின்ற தடைகளை தகர்த்து, நடுநிலை தவறாத நாளிதழாக திகழ இறைவனை பிரார்த்திப்பதோடு வாழ்த்துக்களையும் வழங்குகின்றேன். அத்துடன் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் சேவையாற்றும் உதயன் குழுமத்தினரின் மன உறுதியையும் பாராட்டி வாழ்த்துகிறேன்.

**சுப்பிரமணியம் சுரேன்**, தவிசாளர்
பிரதேச சபை, பச்சிலைப்பள்ளி

## உதயவழி தொடரட்டும்

உலகத்தமிழ் மக்களின் உள்ளமெலாங் கொலுவிருக்கும் உதயனுக்கு உதயநாள் வாழ்த்துக்களை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். கல்லும், முள்ளும் நிறைந்த கரடு முரடான பாதையில் சோதனைகள் பலவற்றைச் சந்தித்து இனத்தின் குரலாக ஒலிப்பவன் உதயன். சத்திய சோதனைகளைச் சகித்துக்கொண்டு வெற்றிகளைக் குவித்தபடி வீறுநடை போடும் உதயனின் ஊடக சேவை மேன்மேலும் தொடர இறையருளை இறைஞ்சுகிறேன்.

வான நிலவாக நின்று எம் இதயங்களில் ஒளிகமழும் உதயனின் பிரதம ஆசிரியர் அமரர் கானமயில்நாதனையும் இந்தச் சமயத்தில் நினைவுகூர்ந்து அவர் வழியில் தொடர்கவென உதயனை மனமார வாழ்த்துகின்றேன்.

**திருமதி சிவமங்கை இராமநாதன்**
*தவிசாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி.*

## ஊடகத்துறையில் தனியான அடையாளம்



தமிழர்களின் பாரம்பரிய மண்ணிலே ஊடகத்துறையில் தனக்கென ஓர் அடையாளத்தை பதித்த உதயன் பத்திரிகையின் 37ஆவது ஆண்டில் தடம் பதிப்பதை வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

உதயன் பத்திரிகை பல தரப்பட்ட தகவலை பல கோணங்களில் மக்களை சென்றடைய கூடிய விதத்தில் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவரும் படித்தறியும் விதத்திலான செய்தி துணுக்குகள், ஆக்கங்கள், சிந்தனை துளிகள் என பல வடிவங்களில் அமைந்து காணப்படுகின்றது.

நாட்டின் தமிழ்பேசும் மக்களுக்கான உரிமையை வென்றெடுப்பதில் தன்னுடைய முயற்சித் தடத்தை ஆரம்பித்து இன்றைக்கு 37ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் உதயன் பத்திரிகையையும் அதன் ஊழியர்களையும் வாழ்த்துவதில் மகிழ்வடைகிறேன். மேலும் இத்துறையில் வளர்ச்சிபெற்று பற்பல சாதனைகளைப் படைத்து, முன்னேற எனது இதய பூர்வமான வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**சுப்பையா ஜெகதீஸ்வரன்,**
*பிரதேசசபை தவிசாளர்,*
*வெங்கலசெட்டிகுளம், வவுனியா.*




## வடக்கின் முதுகெலும்பாக மிளிர்கின்றான் உதயன்

பத்திரிகைத்துறையில் வடக்கு மக்களின் முதுகெலும்பாக இருக்கும் உதயனுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள் தெரிவிப்பதில் பெருமை அடைகிறேன்.

கடந்த பல தசாப்தங்களுக்கு மேலாக தமிழ்பேசும் சமூகத்தின் அரசியல் உரிமைக் குரலாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் உதயன் பத்திரிகை ஊடகத்துறையில் ஒரு மைல்கல்லாகவும் இருக்கிறது.

போர்க்காலத்தில் உயிர், உடைமை பொருள் இழப்புக்களை உதயன் பத்திரிகை சந்தித்தது போன்று வேறு எந்த ஒரு பத்திரிகையும் சந்தித்திருக்கவில்லை என்பது வரலாற்று உண்மை வடக்கு கிழக்கு மக்களுக்கு உரித்தான செய்திகளை உள்ளதை உள்ளபடி மிகத் துல்லியமாக தெரிவிப்பதில் உதயனுக்கு நிகர் உதயனே!

தமிழ் பேசும் மக்களின் அரசியல், கலை, கலாசார உரிமைகளை எந்த இடத்திலும் விட்டுக் கொடுக்காமல் போராடி வருவதில் உதயன் உன்னதமான ஒரு பேனாப் போராளி. உதயன் பற்றிய பெருமைகளைச் சொல்லிக்கொண்டே போகலாம். அதற்கு ஈடிணை இல்லை.

இவ்வாறானதொரு பத்திரிகையை எமது தமிழ் மண்ணுக்கு தந்ததையிட்டு உதயன் குடும்பத்தினருக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு, உதயன் பத்திரிகையானது மேலும் மேலும் பல அகவைகளைக் கண்டு உலகின் முதல்தர தமிழ் பத்திரிகையாக வரவேண்டும் என்று இந்நாளில் வாழ்த்தி நிற்கின்றேன்.

**ஞா.அன்ரணி டேவிட்சன்**
தலைவர், மன்னார் நகரசபை.


## தொடர்ந்து உதிக்கட்டும்



உதயனுக்கு அகவை முப்பத்தியேழு என்பது பிரமிப்பை ஏற்படுத்துகிறது. வடமாகாண மக்களுக்கான பத்திரிகையாக உதித்து, இலங்கைத் தீவு முழுவதும் வலம் வருவது சிறப்பு. இல்திரனியல் ஊடகங்கள் நிறைந்து கிடக்கும் உலகமயமாக்கல் உலகில் துணிச்சலுடன் வலம்வரும் பத்திரிகைகளில் உதயனும் ஒன்று என்பது மகிழ்ச்சியே. உதயன் தினசரி தொடர்ந்து உதிக்க வாழ்த்துக்கள்.

**தேசபந்து இ.கௌதமன்**
நகரபிதா,
வவுனியா நகரசபை .

## தமிழர்களின் தனித்துவக் குரலாக உரத்து ஒலிக்கின்றான் உதயன்



உதயன் பத்திரிகையானது 37ஆவது வருடத்தில் காலடி எடுத்து வைக்கும் இந்தத் தருணத்தில் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதுடன் தொடர்ந்தும் தமிழ் பேசும் மக்களின் தனித்துவ குரலாக ஒலிக்க வேண்டும் என ஆசிகளை தெரிவிப்பதில் பேருவகை கொள்கின்றேன்.

அத்துடன் உதயன் பத்திரிகையின் குடும்பத்தாருக்கும் நிர்வாகிகள், ஆசிரியர் குழாம் மற்றும் செய்தியாளர்கள் என அனைவருக்கும் மகிழ்வான இத்தருணத்தில், இனிய வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

37ஆவது அகவையில் கால்தடம் பதிக்கும் உதயன் பத்திரிகையானது, ஊடகப்பொறுப்புடனும் நடுநிலைமை தவறாமையுடனும் பத்திரிகை தர்மத்தை பேணி, சரியான பாதையில் தொடர்ந்தும் பயணிக்க மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**இ.தயாபரன்**, *செயலாளர்,*
*நகரசபை, வவ்னியா.*



## எதிர்காலச் சந்ததியினதும் நம்பிக்கையை பெறட்டும்

என்றும் எங்கள் வாசல் தேடி வந்து வாசம் வீசும் உதயன் பத்திரிகை 37ஆவது அகவையில் காலடிபதிப்பதையிட்டு புளங்காகிதம் அடைகின்றேன். உதயன் புகழ் 37 அகவையை தாண்டி வைர மணி விழாக்களோடு சதக விழாவைக் காண வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

உதயன் நாளேடுகளில்வரும் அரசியல், பொருளாதாரச் செய்திகள் அன்றாட பரபரப்பு வசனங்கள், கல்வி, சினிமா என்று நீளும் வாசகர்களின் பட்டியல் மேலும்மேலும் அதிகரிக்கட்டும். எம்மைத்தாண்டி எமது பரம்பரைகளின் உதயனாகவும் நீ வாழவும்! வளரவும்! வாழ்த்தி நிற்கின்றேன்

**றோமன் டிவ்னா குரூஸ்**
*(ஆசிரியை)*
*பிரதேசசபை உறுப்பினர்,*
*மன்னார் .*

## அடக்குமுறைக்கு எதிராக சமராடியவன் உதயன்!



ஆட்சியாளர்களினதும் அவர்கள் சார்பான ஒட்டுக்குழுக்களினதும் அடக்குமுறைகள் பல வன்முறைகளாய் அச்சுறுத்திய போதும் தன்னிலை தளராமல் பயணித்தவன் உதயன். உதயனின் முதுகெலும்பான ஊடகவியலாளர்கள் அடக்கு முறையாளர்களால் தாக்கப்பட்டு, காவுகொள்ளப்பட்ட போதும் ஈழத் தமிழ் மண்ணுக்கானதும் தமிழ் மக்களுக்கானதுமான உரிமைக்குரலாய் தமிழர் உரிமைப் போராட்டத்தின் உண்மைச் செய்திகளை தாங்கிவர உதயன் தவறவில்லை.

எத்தடைவரினும் எந்நிலை வரினும் பரம்பரிய அச்சு ஊடகம் முதல் நவீன சமூக ஊடகவியல் தொழில்நுட்பங்களையும் பயன்படுத்தி காலத்துக்கு ஏற்ப தளராது - அஞ்சாது- ஊடகசமராடி வரும் உதயனின் ஊடகப்பணி தொடர அன்புரிமையோடு வாழ்த்துகின்றேன்.

**அ.ஜோன் ஜிப்பிரிக்கோ**
பிரதேசசபை உறுப்பினர்
வலி.தென்மேற்கு.

## தமிழர்களின் விடுதலைக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுபவன்



தமிழ் மக்களின் விடுதலைக்காக கொள்கை வழி நின்று, அர்ப்பணிப்புடன் செயற்படும் ஊடக முன்னோடி என்றால் அது உதயன் மட்டும்தான். தமிழ் சமூகத்துக்குச் சொல்லவேண்டிய உண்மை செய்திகள், தகவல்கள் மற்றும் ஆவணப்படுத்தல்களை முப்பத்தி ஆறு வருடங்களாக உதயன் சிறப்பாகச் செய்து வருகின்றான். அதற்காக ஊடகத்துறையில் உயிரிழப்புக்கள்," உடைமைச் சேதங்கள் போன்றவற்றை எதிர்கொண்டு, தன்னிகரில்லா ஊடக முதல்வனாக உதயன் மக்கள் மனங்களில் திகழ்கின்றான் என்றால் அது மிகையாகாது. இந்தத் துறையில் சிறப்பாக மிளிர்ந்து- தொடர்ந்து மக்கள் மனதில் நீங்கா இடம்பிடிக்க மனதார வாழ்த்துகிறேன்.

**ச.ஜெயந்தன்**
*பிரதேசசபை உறுப்பினர்,*
*வலி.மேற்குப் பிரதேச சபை.*

## வாசிப்பின் பூரணத்துவத்தை உணர்த்துகின்றது உதயன்!



உதயன் பத்திரிகையின் 36ஆவது ஆண்டு நிறைவு நாளில் எமது பாடசாலை சமூகத்தின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான் என்பார்கள். உதயன் நாளிதழ் வாசிப்பின் பூரணத்துவத்தை நிறைவு செய்யும் பத்திரிகையாக வெளிவருகின்றது. செய்திகள், கட்டுரைகள், கவிதைகள், செய்தி விமர்சனங்கள் என்று அனைத்துத் துறைசார்ந்த தகவல்களையும் பொருத்தமான செய்திப்படங்களுடன் தரும் பத்திரிகையாக உதயன் விளங்குகின்றது. பொதுமக்கள் மத்தியிலும் விசேடமாக மாணவர்கள் மத்தியிலும் ஒரு விழிப்புணர்வை உருவாக்கும் அச்சு ஊடகமாக இந்தப் பத்திரிகை திகழ்கின்றது. முக்கியமாக கொரோனா பெருந்தொற்றுக்காலத்தில் நோய் பற்றிய சந்தேகங்களை நீங்கி மக்களை விழிப்படையச் செய்வதில் உதயன் ஆற்றும்பணி மகத்தானது. இவ்வாறு காலத்திற்கேற்றவாறு சமூகக் கரிசனையுடன் ஊடகப் பணியாற்றும் உதயன் மேன்மேலும் வளர வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

**ந.ஜெயரூபன்**, *அதிபர்*
*கைதடி குருசாமி வித்தியாலயம்*



## உதயனுடன்தான் பொழுதுகள் புலரும்




முப்பத்தி ஏழு ஆண்டுகளாக ஒரு பத்திரிகை செயற்பாட்டில் இருப்பது சாதனை. இன்றைக்கும் தமது பதிப்புக்கள் மூலமாக சாமானிய மக்கள் தொடக்கம் நாடாளும் அதிபர் வரை அதிர்வுகளை ஆற்றக்கூடியதாக இருப்பது ஆச்சரியம்.

அதிலும் ஒவ்வொரு விரல் நுனியிலும் நொடிக்குநொடி செய்திகள் பரிமாறப்பட்டு கொண்டிருக்கக்கூடிய அறிவியல் வளர்ச்சி மிக்க இந்த நாள்களில் உதயனை வாசித்துவிட்டுத்தான் தமது அன்றாடப் பணிகளை மேற்கொள்ளுகின்ற பல்லாயிரக் கணக்கானவர்களை தம்மோடு வைத்திருப்பதில் உச்சபட்ச சாதனை என்றே நான் சொல்லுவேன். அரசியல் விமர்சனங்களுக்கு எம்மை உட்படுத்தி இருந்தாலும்கூட உதயனின் வாசகனாக இருப்பதில் நான் இன்றைக்கும் திருப்தி உடையவனாகவே இருக்கின்றேன்.

**பா. கஜதீபன்**
*முன்னாள் உறுப்பினர், வடக்கு மாகாணசபை*

# YARL SMART *Water Solution (Pvt) Ltd.*

*"Smart Water, Smart Life"*





இலவச நீர் பரிசோதனையுடனும், மிகக் குறைந்த விலையிலும்,
அதிகபட்ச உத்தரவாதத்துடனும், எங்கும் பெறக்கூடிய உதிரிப்பாக வசதிகளோடும்,
வாழ்நாள் முழுவதும் பராமரிப்பு சேவைகளுடனும்,
24 மணித்தியாலத்தினுள் முறைப்பாடு திருத்திக்கொடுத்தல்.

**YARL SMART** *Water Solution (Pvt) Ltd.*
No.341 K.K.S Road, Jaffna.
Karadippoku Junchtion Jaffna Road, Kilinochchi.
021 430 0044 | 076 666 5267
yarlsmartwater@gmail.com | www.yarlsmartwater.com

# Yarl Smart PARTY

"happy home, happy life"




**SMART PARTY**
"happy home, happy life"
No. 319, KKS Road, Jaffna
TP:- 021 430 0045 | 076 919 9989

37 ஆவது அகவை காணும் "உதயன்"
முடிவிலா அகவை காண வாழ்த்துகின்றோம்

# சாய்ராம் பல்பொருள் அங்காடி



நம்பகத்தரமான அனைத்து வகையான பலசரக்குப் பொருள்களையும் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்....

(cr.36464) (2.6)

பெருங்குளம் சங்கத்தானை வீதி, சாவகச்சேரி.

37 ஆவது அகவை காணும் "உதயன்"
முடிவிலா அகவை காண வாழ்த்துகின்றோம்

# தபேசன் அக்ரோ

விவசாயத்திற்குரிய கிருமிநாசினிகள், விதைபொருள்கள். சகல விதமான உரவகைகளும் மற்றும் உபகரணங்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்



பலாலி வீதி, கோண்டாவில் சந்தி.

(cr.36461) (2.6)

சர்வதேச விருது கண்ட ஒரே தமிழ் பத்திரிகை "உதயன்" இன்னும் பல அகவை காண வாழ்த்துகின்றோம்.



யாழ் மண்ணில் பிரமாண்டமான தயாரிப்பில்

இல்லத்தரசிகளின் அரசன் V.S.P நல்லெண்ணெய்

# V.S.P நல்லெண்ணெய்

## SPECIAL GINGELLY FOOD OIL

சுத்தமான முறையில் உணவுக்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்டது

தாயின் அன்பைப்போல நம்பிக்கையானது V.S.P நல்லெண்ணெய்

உரிமையாளர் : திருமதி பாஸ்கரன்

போலிகளைக் கண்டு ஏமாறாமல் V.S.P நல்லெண்ணெய் வாங்கும் போது பரிமளா ஸ்ரோர்ஸ் எனும் பெயரைப் பார்த்து வாங்கவும், சந்தேகம் இருப்பின் எமது தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

குடும்பத்தின் ஆரோக்கியத்துக்கும் மகிழ்ச்சிக்கும் காரணம் V.S.P நல்லெண்ணெய்

தயாரிப்பாளரும் ஏக விநியோகஸ்தரும் : பரிமளா ஸ்ரோர்ஸ்
முட்டாஸ் கடைச் சந்தி, K.K.S வீதி அருகாமை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 4135, 021 222 9165

(CR 35894) (3/6)

திருகோணமலையில்
நியூ சிறி விநாயகர் சுப்பர் மார்க்கட்
60, திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை
T.P : 077 304 4462

மட்டக்களப்பு வாழ் மக்களின் நன்மை கருதி
சண்முகா ஏஜென்சி
159, திருமலை வீதி, மட்டக்களப்பு
H.L : 077 990 4636 T.P : 065 222 2139
065 222 5380


கொழும்பில் விற்பனையாளர்
மகாராஜா பூட்சிற்றி
18/3, Dr.E.R.Cooray, Mawatha, Wellawatta, Colombo - 06
T.P : 011 236 0926, 011 465 4444

வவுனியாவில் விற்பனையாளர்
சுகந்தன்ஸ்
13A. மன்னார் வீதி, வவுனியா
T.P : 024 222 3348, 077 020 9495

# சிவன் ஸ்ரோர்ஸ்

## பல்பொருள் அங்காடி

சகல விதமான பத்திரிகைகள், Phone Reload cards, காஸ்சிலிண்டர், ICE கீறிம், பால்மா வகைகள், மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.




37வது பிறந்த நாளை முன்னிட்டு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்

246 இராமநாதன் வீதி, பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி
T.P: 0778558761



அ.கிருபாகரன்
-அதிபர்-

# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS

தலைமைக் காரியாலயம்

இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 222 4353 0777 399 480

0777225292

DS.589 அரச அங்கீகாரம் பெற்ற A தர கனரக சாரதிப் பயிற்சிப்பாடசாலை

**'உதயன்'**
**மக்கள் மனம் வென்று**
**மகத்தான சேவைதனை**
**தடையின்றி செய்திட**
**வாழ்த்துகின்றோம்.**





வட மாகாணத்தின் முதற் தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை




- ★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- ★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
- ★ இரவு நேர வாகனப் பயிற்சி.
- ★ எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- ★ தவணை முறைக் கட்டணங்கள்.
- ★ அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- ★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்

No. 1 Driving Training School
In North




**கிளைக் காரியாலயங்கள்:**

**யாழ்ப்பாணம்**

227/6, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம், (மதவடி அருகில்)
021 224 2022, 071 4546 956

முதலாம் கட்டைச் சந்தி, பருத்தித்துறை.
021 226 1100, 071 4546 961

36, கச்சேரி நல்லூர் வீதி, (கச்சேரி அருகில்) யாழ்ப்பாணம்.
021 222 6699, 076 722 5292

ஓம்பிளாசா, பருத்தித்துறை வீதி, ஆவரங்கால்.
021 222 6688, 071 777 6969

கண்டி வீதி, சாகவச்சேரி. (நீதிமன்றம் அருகில்)
021 227 0700, 071 4546 957

பிரதான வீதி, (பொலிஸ் நிலையம் முன்பாக), நெல்லியடி.
021 300 6550, 077 474 7417

காரைநகர் பிரதான வீதி, சித்தங்கேணி.
021 225 2500, 076 212 1299

**வவுனியா**

216, ஏ9, வவுனியா. (வசந்தி திரையரங்கு முன்பாக)
024 222 7777, 0777 100 444

**மன்னார்**

94, பிரதான வீதி, மன்னார்.
023 225 1656, 077 847 2732

**கிளிநொச்சி**

ஏ9 வீதி, கிளிநொச்சி. (கச்சேரி முன்பாக)
021 228 5505, 071 454 6955

புளியடிச்சந்தி, முல்லை வீதி, விசுவமடு.
021 320 1515, 077 8585 263

வாடியடி சந்தி, பூநகரி.
021 320 1818, 070 333 7171

(CR 35889)1-6

# வாயுபுத்ரா போன் சொப்
# Vayuputhra

**Phone Shop, Oppo & Vivo Distributors**

oppo
vivo
realme
Redmi

- Phone accessories
- Phone Sales
- Repairing
- Unloking
- Software



OPPO F19Pro
Ultro Function, Ultimate Fun

அனைத்து விதமான கட்டணங்களையும் இங்கு மேற்கொள்ளலாம்.
**All Types of Recharge Available Here**

அனைத்து சேவைகளும் நியாயமான விலையிலும் துரித வேகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

வாயுபுத்ரா புக்கிங் சென்றர் சகல விதமான பேருந்துகளுக்கும் ஆசனப் → பதிவுகளைமேற்கொள்ள முடியும்.

ஆசனப் பதிவகம்
யாழ் ⇆ கொழும்பு (தினமும்)

(CR 35893)1-6



# சசிகா லேணர்ஸ்
# THE SASIKA LEARNERS

அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை

Reg.No: DS882

உரிமையாளரின் தொடர்புக்கு
0777 226 247 / 077 614 0361

email: sasikadrivingschool@gmail.com web: sasikalearners.com



தலைமைக்காரியாலயம்
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
021 221 7578 / 7678
070 301 3011

கிளைக் காரியாலயங்கள்:

| | | | |
|---|---|---|---|
| மல்லாகம்<br>T.P: 021 224 3393<br>070 301 3014<br>077 343 6622 | பண்டத்தரிப்பு<br>T.P: 021 225 2333<br>071 255 4135<br>077 434 3798 | சங்கானை<br>T.P: 021 225 1664<br>070 301 3016<br>077 434 3149 | சாவகச்சேரி<br>T.P: 021 227 0616<br>071 577 0616<br>077 435 3995 |
| யாழ் மத்தி (Town)<br>T.P: 021 222 8004<br>070 301 5004<br>070 301 3017<br>077 998 6247 | நெல்லியடி<br>T.P: 021 226 0999<br>071 775 0999<br>077 261 2446 | புன்னாலைக்கட்டுவன்<br>T.P: 021 224 5001<br>076 384 0684<br>வேலனை :<br>T.P: 021 221 5472, 070 301 3012 | காரைநகர்<br>T.P: 021 225 2454<br>070 510 2484 |

(CR 35889)1-6



# U-Fresh

**Ufresh பருகி பரிசு வெல்லுங்கள்!**

நீங்கள் செய்ய வேண்டியது இவ்வளவுதான்
Ufresh குளிர்பானம் பருகுவது போல
ஒரு Selfie எடுத்து அதை
எமது WhatsApp இலக்கத்திற்கு அனுப்பி
**10,000/= வெல்லுங்கள்!**

With Natural Flavours

WhatsApp 077 473 7737



யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | முல்லைத்தீவு | திருகோணமலை | அநுராதபுரம்

(CR 35456) 1/6

உத்தியோகபூர்வ விநியோகஸ்தர்
**Rathee Event Management**
077 473 7737 / 076 366 7737 / 076 944 7737
www.facebook.com/ufreshjafna



# ஹேர்பல் கெல்த் கெயார் சென்ரர்
# HERBAL HEALTH CARE CENTRE

**Dr.G.Sritharan**
B.S.M.S (SL.),M.Phil(Jaf)
PGDAS(Kelany)P.h.D (Ind)
(Ayurvedic Surgery)
Regd.No.10093
Tel:0750413579, 0778201195

**Dr.(Mrs)S.Anpuchelvi**
B.S.M.S (SL.),M.D. (Ind.)
(Consultant Physician) Sen.
University of Jaffna.
Regd.No.10434
Tel:0777110619

**No.65, K.K.S. Road, Kokuvil.**

## சித்த ஆயுர்வேத நிபுணத்துவ சிகிச்சை

பொது மருத்துவ சிகிச்சை,
குழந்தை மருத்துவம்,
சித்த ஆயுர்வேத அறுவை
மருத்துவம்,
வர்ம சிகிச்சை
காயகல்ப சிகிச்சை
என சித்த மருத்துவ நிபுணர்களினால்
சிகிச்சையளிக்கப்படுகிறது.



மாறாத குடற்புண், இருமல், ஆஸ்துமா, நாட்பட்ட சர்ம நோய்கள் மூட்டு வலி, முள்ளந்தண்டுப் பிரச்சினை, முழங்கால் வலி, சோரியாசிஸ், குழந்தைகளுக்கு ஏற்படும் மூச்சு கஸ்டம், குறிப்பாக 3 மாதத்திற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு உடனடி நிவாரணம். இதய அடைப்பு, சிறுநீரக கற்கள், முறிவு, நெறிவு அதனால் ஏற்பட்ட மூட்டுவலி, தசை இறுக்கம், பாதிக்கப்பட்ட இடம் அசைக்க முடியாநிலை, பெண்களின் ஏற்படும் கர்ப்பப்பை கட்டிகள், PCOS பிரச்சினைகளுக்கு காயகல்ப பயிற்சியும் சிகிச்சையும், இளநரை, முடியுதிர்தல் போன்ற பிரச்சினைகள், பாரிச வாத நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், பிஸ்ரியுலா, சைனஸ், புரைபோடிய நீரிழிவுப் புண்கள் இவற்றுக்கு சிறப்பான நிபுணத்துவ சிகிச்சைகள் வழங்கப்படுகிறது.

**முற்பதிவு அவசியம்:**
**Tel:0750413579, 0778201195**

**தினமும் 9.30 AM - 5.00 PM வரை**

இல.65, கே.கே.எஸ் வீதி, கொக்குவில்.

சித்த ஆயுர்வேத நிபுணர்கள், சித்த மருத்துவபட்டதாரிகள் மூலம் சித்த ஆயுர்வேத ஆலோசனையும் சிகிச்சையும் வழங்கப்படுகிறது.

(CR 35883)1-6



37ஆவது பிறந்த நாளை முன்னிட்டு
எமது மனப்பூர்வமான
நல் வாழ்த்துக்கள்
2022 ஆண்டுக்கான
வாக்கிய பஞ்சாங்க
தின நாட்காட்டி மற்றும்
கலண்டர்கள்
கரிகணன்
Harikanan Calendar
கரிகணன்
Harikanan Calendar
கரிகணன்
Harikanan Calendar
கரிகணன்
வடக்கின் அச்சகதாரர்
Offset | Digital | Screen | Design
இல.672 B, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
+94 21 222 2717 | 18
(CR 36450)


பல தசாப்தங்களை கடந்தும்
உன் சேவை தொடர வாழ்த்துகின்றோம்
பூபாலசிங்கம்
புத்தகசாலை
பத்திரிகைகள்
சஞ்சிகைகள்
கதைப்புத்தகங்கள்
பாடசாலை உபகரணங்கள்
உயர்கல்வி பாடபுத்தகங்கள்
அனைத்து விதமான காகிதாதிகள்
இவை அனைத்து தேவைகளுக்கும்
யாழ் நகரின் முன்னணி ஸ்தாபனம்
பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.

வேதனைகளை சாதனையாக்கிய " உதயன் "
முடிவிலா அகவை காண வாழ்த்துகின்றோம்

NEWS PAPER AGENT

பத்திரிகைகள், சஞ்சிகைகள்
பாடசாலை உபகரணங்கள், Photo Copy



K.K.S. Road, Inuvil.

# ஊடகத் தலைவன் வாழ்க!

ஊடகச் சிற்பியாய் உயர்வுக்கு கொண்டு
தேடல் உள்ளோர்க்குத் தேனாய் இனித்தே
விடியற் காலத்து விடியலாய் வந்து
மிடிமை நீங்க மிளிர்ந்து ஒளியாகவே
திரும்பும் இடமெங்கும் தீங்கின்றி உலவி
கரும்பாய் இனித்திடும் கருத்துக்கள் படைத்தே
எத்தடை வரினும் எதிர்த்து நின்றே
தித்திக்கும் செய்திகளை திக்கெட்டும் பரப்பியே
அரசியல் தடைகளை அடியோடு வெறுத்து
சிரசினில் பணியின் சிறப்பினைக் கொண்டே
கற்றுத் தேர்ந்திட கல்வி உலகாகி
தொற்றுக் காலத்தின் தொய்யாத சேவையே
உண்மையை உலகுக்கு உரைத்து மகிழ்ந்து
திண்ணிய மனதாய் திடமாய் வளர்ந்தே
அகவை புதிதில் அழகாய் நடந்திடும்
இகத்துச் சூரியனே இன்புற்று வாழ்கவே

37

உடுவிலூர் கலா

சர்வதேச விருது கண்ட ஒரே தமிழ் பத்திரிகை 'உதயன்" இன்னும் பல அகவை காண வாழ்த்துகின்றோம்.

எல்லா விதமான வர்ணபூச்சுக்கள், வீட்டு மின் இணைப்பு உபகரணங்கள்
எல்லாவற்றையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ள
நாட வேண்டிய ஒரே இடம்...

ராஜா ஸ்ரோர்ஸ்



ஸ்ரேசன் வீதி, கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்

(CR 36463) (3/6)

077 251 8508

37 ஆவது அகவை காணும் " உதயன் "
முடிவிலா அகவை காண வாழ்த்துகின்றோம்

மணியம் ஸ்ரோர்ஸ்
MANIUM STORES

நாளாந்த பத்திரிகைகள்,
சஞ்சிகைகள். சிங்கள
ஆங்கில கொழும்பு
பத்திரிகைகள் மற்றும்
பாடசாலை உபகரணங்கள்
காகிதாதிகள்



Kandy Road, Chavakachcheri
Tel: 077 902 4275

(cr.36462) (2.6)




MATHI COLOURS

Laser Cutter Engraver

சிறந்த முறையில் நீங்கள் விரும்பிய
வடிவமைப்பில் அனைத்து விதமான


அழைப்பிதழ்களையும்
பரிசுபொருட்கள் மற்றும்
நினைவுச்சின்னங்களையும்

எம்மிடம் மிகக் குறைந்த
விலையில் பெற்றுக்கொள்ளலாம்...



இல. 10, முருகேசர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
No. 10, MURUGESAR LANE, NALLUR, JAFFNA.

DIGITAL Printing




BANNERS | X BANNERS | HOARDINGS |
DEALER BOARDS | STICKER PRINTS | FABRIC PRINTS |
REFLECTIVE FLEX & ETC...

TEL : 021 222 9285
E-mail : mathicolours@gmail.com
CUSTOMER CARE +94 77 722 2259

# விக்கிலேணர்ஸ்
# Vikki Learners

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சி பாடசாலை






பத்திரிகை உலகின் தனக்கென தனிஇடம் பதித்த 'உதயன்' தமது அகவையில் வெற்றிகள் காண வாழ்த்துகின்றோம்.

- ★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- ★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
- ★ எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- ★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்

தலைமை காரியாலயம்
136/1, பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

கிளை
இல.125/1, K.K.S. வீதி,
சுன்னாகம்.

அந்தோனியார் கோவிலடி,
மானிப்பாய்.

T.P:077 830 8360 / 021 722 3201

(CR 36419) 1-6




KUBERA MAHAL
WEDDING HALL

# குபேர மஹால்

திருமண மண்டபம்

## KUBERA MAHAL WEDDING HALL




37வது அகவையை முன்னிட்டு மனம் நிறைந்து வாழ்த்துகின்றோம்



- ◆ திருமண வைபவம்
- ◆ பூப்புனித நீராட்டுவிழா
- ◆ பிறந்தநாள் கொண்டாட்டங்கள்
- ◆ ஒன்றுகூடல்கள்
- ◆ மற்றும் அனைத்து நிகழ்வுகளும்

வாழ்வின் உன்னதமான
தருணங்களில் என்றும்
உங்களோடு நாம்...





Suthumalai, Manipay, Jaffna. (CR 35891) 1-6 021 225 5703 / 0777 574 564 / 021 225 6775

## மாவீரர்...

**இரா.சம்பந்தன்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், @@தமிழ் மக்கள் தமது உணர்வுகளை வெளிக்கொண்டு வருவதற்கும் இறந்தவர்களை நினைவுகூருவதற்குமான உரிமை அவர்களுக்கு உண்டு. எனவே மக்கள் அமைதியாக, குழப்பம் இல்லாமல் நினைவேந்தலை முன்னெ டுக்க வேண்டும்" - என்றார்.

**கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், "இறந்தவர்களை நினைவுகூரும் உரிமை அடிப்படைச்சட்டம். இலங்கைச் சட்டத்தின் பிரகாரமும்கூட மறைந்தவர்களை நினைவுகூருவது அடிப்படை உரிமை. அரசும் இறந்தவர்களை நினைவுகூரலாம் தடையில்லை என சர்வதேச மட்டத்தில் தெரிவித்துள்ளது. எனவே மக்கள் அனைவரும் நினைவு கூரலாம்" என்றார்.

**த.சித்தார்த்தன்**

புளொட் அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன், "தமது இறந்த உறவுகளை நினைவுகூருவதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமை உள்ளது. அந்த உரிமையை மறுப்பது ஒரு மனித உரிமை மீறல். ஆகவே யாரை நினைவுகூருவது என்றாலும் அவர்களது உரிமையை அரசு மறுப்பதை நாம் கண்டிக்கிறோம்" என்றார்.

**செல்வம் அடைக்கலநாதன்**

ரெலோ அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய செல்வம் அடைக்கலநாதன், "எமது மாவீரர்கள் தினத்தை நினைவுகூர்ந்தே ஆக வேண்டும். நீதிமன்றம் தடை விதித்துள்ள இடங்களில் அதை உடைத்தெறிந்து போக முடியாது. தடை விதிக்கப்படாத இடங்களில் வெளிப்படையாக மக்கள் அஞ்சலி செலுத்தலாம். அரசு சொல்லும் அறிவிப்புகளுக்கு கட்டுப்பட முடியாது" என்றார்.

**சுரேஷ்பிரேமச்சந்திரன்**

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ்பிரேமச்சந்திரன், "மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பது என்பது அனைவரதும் உரித்து. மாவீரர் தினம் தடை செய்யப்பட்டிருப்பது ஒரு சில அரசியல்வாதிகளுக்குதான். பொதுமக்களுக்கு தடை விதிக்கப்படவில்லை. அஞ்சலி செய்யலாம்" என்றார்.

**சிவஞானம் சிறீதரன்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், "ஒவ்வொருவரும் தமது வீடுகளில் விளக்கு ஏற்றி குடும்பமாக வணக்கம் செலுத்த வேண்டும். அதை அடுத்தகட்ட பயணம் நோக்கி செல்லும் நாளாக கருதி பிரார்த்திக்க வேண்டும். கட்சிப் பிரதிநிதிகள் தமது அலுவலகங்களில் வெளிப்படையாக செய்ய முடியும். துயிலுமில்லத்துக்கு போவதற்குதானே தடை. எமது இருப்பிடங்களில் நினைவுகூரத் தடை இல்லையே. எனவே, துணிவுடன் நினைவேந்துவோம்" என்றார்.

**எம்.கே.சிவாஜிலிங்கம்**

தமிழ்த் தேசியக் கட்சியின் செயலரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம்,

"மாவீரர் தினமான இன்று எல்லோரும் மாலை 6 மணி என்று காத்திருக்காமல் சந்தர்ப்பம் கிடைக்கக்கூடிய இடங்களிலே, நேரங்களிலே ஒன்றுகூடி அதாவது கோவில்கள், தேவாலயங்கள், பொதுஇடங்கள், இராணுவம் முற்றுகையிட்டுள்ள துயிலுமில்லங்களுக்கு அண்மையில் உள்ள வீதியோரங்களில் உங்கள் உறவுகளை நினைத்து அஞ்சலி செலுத்த வேண்டும்" என்றார்.

**அனந்தி சசிதரன்**

ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்தின் தலைவியும், வடக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சருமான திருமதி அனந்தி சசிதரன், "மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு மாவீரரின் பெற்றோர், உறவினர்களுக்கு எந்த தடையும் விதிக்கப்படவில்லை. எனவே, அச்சம் இல்லாமல் பொதுவெளியில் நினைவேந்த லில் ஈடுபடலாம்"- என்றார். (த-ஒ,7)

## வடக்கு...

பற்றிய மகாத்மாகாந்தியின் கருத்தை சபையில் சமர்ப்பித்தார், நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தவாரம் வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கு ஒரு முக்கிய வாரம். வீரமரணம் அடைந்த மாவீரரை நினைவுறுத்தும் வாரம். அதுவும் இன்று (நேற்று) இந்தவாரத்தினுள் அதிவிஷேட தினம்.

நேதாஜியின் தேசப்பற்று எவர்க்கும் குறைந்ததல்ல. அவரின் வீரம் அவரின் சகல காரியங்களிலும் பளிச்செனப் பிரதிபலிக்கின்றன. அவர் உன்னத குறிக்கோள்களை முன்வைத்தார். ஆனால் தோல்வியுற்றார். ஆனால் யார்தான் தோல்வியைத் தழுவாதவர்கள்?" இன்னொரு சந்தர்ப்பத்தில் காந்தியவர்கள் "இந்தியாவுக்கு ஆற்றிய சேவையின் நிமித்தம் நேதாஜி என்றென்றும் சிரஞ்சீவியாக மக்கள் மனதில் வாழ்வார்!" என்று கூறினார். அஹிம்சையின் பால் ஈர்க்கப்பட்டவன் என்ற முறையில் மேற்கண்ட காந்திஜியின் வாசகங்களை இலங்கையில் வடக்கு கிழக்கை மையமாக வைத்து அங்கு உதித்த வீரத் தமிழனின் இன்றைய பிறந்தநாளன்று அவர் ஞாபகார்த்தமாகச் சமர்ப்பிக்கின்றேன்.

**படையினரே விழுங்குகின்றனர்!**

அரசாங்க ஊழியர்கள் எமது நிதியில் பெரும் பங்கை எடுத்துவிடுகின்றார்கள் என்று நிதி அமைச்சர் கூறியிருந்தார். இது தவறு. படையினர் தான் எமது வருமானத்தில் கூடிய பங்கை விழுங்கி வருகின்றார்கள். 308 பில்லியன் ரூபாவை ஒரு சிறிய நாடான இலங்கையின் பாதுகாப்புக்கு பாவிக்க முனைவது வியப்பை அளிக்கின்றது. பாதீட்டால் வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கு எந்தப் பயனும் கிடைக்கவில்லை. போரால் பாதிக்கப்பட்ட மக்களின் குறை தீர்க்க எந்த ஒரு திட்டமும் வகுக்கப்படவில்லை.

போர் முடிந்த பின்னரும் படையினருக்கு வருடாவருடம் கூடியதொகை நிதியை பாதீட்டில் ஒதுக்கிவருவது எதற்காக? மாலைதீவோ இந்தியாவோ எமக்கெதிராகத் தாக்குதல்களை மேற்கொள்ளமாட்டா. நீங்கள் இந்த நாட்டின் சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய இனமக்களுக்கு எதிராகத்தான் படையினரைப் பாவிக்கப் போகின்றீர்கள். மக்கள் உங்களை வெறுக்கத் தொடங்க மேலும் மேலும் இராணுவ பலத்தைப் பாவிப்பதற்காகவா இத்துணை பெரிய தொகையை படையினர் சார்பில் செலவிடுகின்றீர்கள்? இந்தத் தொகையில் ஒரு பகுதியையாவது பிறநாட்டுக் கடன்களை அடைக்கப் பாவிக்கலாம் என்று உங்களுக்குத் தோன்றவில்லையா? நாட்டில் சமாதானமும் சுபீட்சமும் ஏற்பட வேண்டுமானால் 'ஒரு நாடு ஒரு சட்டம்' என்று கூறித்திரிந்தால் மட்டும் போதாது. சுய நிர்ணய உரிமைக்குரியவர்களுக்கு சமஷ்டி முறையான ஓர் அரசியல் யாப்பை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களையும் சமமான முறையில் வரவேற்றால்தான் சமாதானமும் சுபீட்சமும் உதயமாகும். - என்று தெரிவித்தார். (து)

## பிரபாவின்....

உருவாகி அடிதடி ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. லண்டனில் இலங்கைத் தூதரகம் முன்பாக முன்னர் போராட்டம் நடத்திய ஈழத்தமிழர்களை இராணுவ அதிகாரி ஒருவர் கழுத்தில் கையை வைத்து கொலை அச்சுறுத்தல் விடுக்கும் ஒளிப்படத்தை கடற்படையில் இணைந்து தாதிய பயிற்சி பெறும் மாணவர் ஒருவர் கடந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினமன்று தமிழ் மாணவர்களுக்கு அனுப்பினார்,, பதிலுக்குத் தமிழ் மாணவர்கள், பிரபாகரனின் பிறந்தநாளான நேற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கேக் வெட்டிய ஒளிப்படத்தை அந்த மாணவருக்கு அனுப்பினர். அதனால் இருதரப்புக்குமிடையே முரண்பாடு ஏற்பட்டு அடிதடி ஏற்பட்டது .

இது தொடர்பில் மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தியிடம் கேட்டபோது, ஆரம்ப கட்டவிசாரணையில், தமக்குள் கருத்து முரண்பாடு இருந்ததாகவும், அதனால் இன்று (நேற்று) கைகலப்பாக மாறியதாகவும் குறித்த இரு தரப்பினரும் தெரிவித்தனர்.

மேலும் இரு தரப்பினரும் பிழை இருப்பதை ஒத்துக்கொண்டமையுடன், விசாரணைக்கும் ஒத்துழைக்கின்றோம் என்று தெரிவித்தனர். இரு தரப்பும் கருத்து முரண்பாட்டை விடுத்து சுமுகமாக செல்கின்றோம் என்று கூறியமையால், பல மாணவர்கள் கல்விகற்கும் இடமென்பதால் நான் சமாதானமான முறையில் மாணவர்களை அனுப்பிவைத்தேன்- என்றார். (த-7)

## புலிகளின்...

ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 67ஆவது பிறந்தநாள் நேற்றாகும். இந்தநிலையில், பல்கலைக்கழக வளாகத்தினுள் மாணவர்கள் அவரது உருவப்படத்துக்கு முன்பாக கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடினர்.

அதேவேளை, மாவீரர் வாரம் அனுஸ்டிக்கப்பட்டுவரும் நிலையில், யாழ்.பல்கலைக்கழக சூழல் உள்ளிட்ட பகுதிகளில் ஆயுதங்களுடன் இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டுள்ளனர். புலனாய்வாளர்களின் கண்காணிப்பும் தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையில், பல்கலைக்கழகத்தினுள் மாணவர்கள் கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடியுள்ளனர். (த-26)

## மேதகுவின்...

'கேக்' கொடுத்து கொண்டாடினார், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம். கிளிநொச்சி நீதிவான் மன்றில் வழக்கு ஒன்றுக்குச் சென்றிருந்த அவர், வழக்கு நிறைவடைந்தபின்னர் வெளியேவந்து அங்கு நின்றவர்களுக்கு 'கேக்' கொடுத்து மேற்கண்டவாறு கூறி தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். (த-6)

## ரயர்...

மான நேற்று, குருநகர் பகுதியில் வீதியில் ரயர் கொளுத்தினர் என்றுகூறி மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-26)

## மீன்பிடித்தவர்...

சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் மின்னல் தாக்கி உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

இதே பகுதியைச் சேர்ந்த சிவலிங்கம் தினேஷ்குமார் (வயது-28) என்ற இளம் குடும்பஸ்தரே சடலமாக மீட்கப்பட்ட வராவார்.

வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்ற அவர் நெடுநேரமாகியும் வீடு திரும்பாத தால், அவரைத் தேடிச் சென்றபோதே சடலமாகக் காணப்பட்டார். நெளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-110,18)

## நினைவேந்தலை...

நேற்று நிராகரித்தது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், மன்னார் நகரசபைத் தவிசாளர் ஞா. அன்ரனி டேவிட்சன், உப தவிசாளர் எஸ்.ஜாட்சன், நகர சபை உறுப்பினர் எஸ்.ஆர்.குமரேஸ் மற்றும் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் ஆகிய 6 பேருக்கு எதிராகவே தடை விதிக்குமாறுகோரி மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மன்னார் நீதிமன்றில் கோரிக்கை முன்வைத்தார். எனினும், போதிய சாட்சியங்கள் மன்றில் சமர்ப்பிக்கப்படாமையால், பொலிஸாரின் விண்ணப்பத்தை மன்னார் நீதிமன்று நிராகரித்தது. (த-56)

## மீண்டும்...

னையும் நீக்குமாறு கோரி மன்றில் பொலிஸார் நேற்று விடுத்த கோரிக்கையை நீதிமன்று நிராகரித்தது.

பொலிஸாரின் கோரிக்கையின்படி முன்னர் நினைவேந்தலுக்குத் தடை விதிக்கப்பட்டது. பின்னர் நேற்றுமுன்தினம் பொதுமக்கள் பிரதிநிதிகள் சார்பில் மனுமுன்வைத்து திருத்திய கட்டளையுடன் நினைவேந்தலுக்கு மன்று அனுமதி வழங்கியிருந்தது. இந்தநிலையிலேயே, அதற்கும் தடை விதிக்குமாறு நீதிமன்றில் பொலிஸார் நேற்று கோரிக்கை விடுத்தபோதும் நீதிமன்று நிராகரித்தது. (த-19,246)

## நாடாளுமன்றில்...

வித்துக்கொள்கின்றேன்." என்று நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் சபையில் நேற்றுத் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு-செலவுத் திட்டத்தின் குழுநிலை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வாழ்த்து தெரிவித்தார். "சங்ககாலத்து மன்னர்களைப் பற்றி நாம் படித்திருக்கின்றோம். இந்தக்காலத்தில் எங்களுக்கு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டிய மிகப்பெரிய தலைவர் அவர். அவருக்கு எனது பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்." என்றார். (த-44)


## மற்றொரு...

மையாகச் சேதமடைந்துள்ளது என்று நிக்கவெரட்டிய பொலிஸார் தெரிவித்தனர். வெடிப்பு சம்பவத்தின்போது வீட்டில் எவரும் இல்லாதமையால் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். இந்த மாதத்தில் நடந்த ஐந்தாவது சிலிண்டர் வெடிப்புச் சம்பவம் இது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் படுகாயமடைந்து கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த பெண் ஒருவர் உயிரிழந்தார் என்று கூறப்பட்டபோதும், அவர் சிலிண்டர் வெடித்து உயிரிழக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். அவருடைய கணவனுடனான வாக்குவாதத்தால் அந்தப் பெண் தனக்குத் தானே தீ மூட்டியு உயிரிழந்தார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (த-இ)

## தடையை...

ஆனால் கோவில்களில் விளக்குகள் ஏற்றி அஞ்சலி செய்ய முடியும் என்றும் கிளிநொச்சி நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. மாவீரர்நாள் நினைவேந்தலுக்கு பொதுமக்கள் பிரதிநிதிகள் சிலருக்கு விதிக்கப்பட்டதடையை நீக்குமாறுகோரிய மனு நீதிமன்றில் நேற்று எடுக்கப்பட்டது. அதன்போது, நீதிவான் லெனின்குமார் மேற்கண்டவாறு குறிப்பிட்டார் என்று மக்கள் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (த-6,113)

# மழை தொடர்ச்சியாகப் பெய்தால் இரணைமடுக்குளம் வான்பாயும்



**கிளிநொச்சி, நவ.27**

**தற்போது நிலவும் தொடர் மழையால், கிளிநொச்சி மாவட்டத்தில் 6 நீர்பாசனக் குளங்கள் வான்பாய ஆரம்பித்துள்ளன. 36அடி அடைவு மட்டம் கொண்ட இரணை மடுக்குளம் 31 அடி 3 அங்குலமாக உயர்ந்துள்ளது. தொடர்ச்சியாக மழைவீழ்ச்சி பதிவானால் இரணைமடுக்குளம் வான்பாயலாம் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.**

25 அடி அடைவுமட்டம் கொண்ட அக்கராயன்குளம் 23 அடி ஒரு அங்குலமாகவும், 10 அடி அடைவு மட்டம் கொண்ட கரியாலை நாகபடுவான் குளம் 7 அடி 11 அங்குலமாகவும் உயர்ந்துள்ளது.

அதேவேளை 26 அடி அடைவு மட்டம் கொண்ட கல்மடுக்குளம் அடைவுமட்டத்தை அடைந்து ஒரு அங்குலமாகவும், 19 அடி அடைவுமட்டம் கொண்ட புதுமுறிப்புக் குளம் அடைவுமட்டத்தை அடைந்து 3 அங்குலமாகவும், 12 அடி அடைவு மட்டம் கொண்ட பிரமந்தனாறு க்குளம் அடைவு மட்டத்தை அடைந்து 7 அங்குலமாகவும், 10 அடி ஆறு அங்குலம் கொள்ளளவு கொண்ட கனகாம்பிகைக்குளம் அடைவுமட்டத்தை அடைந்து 3 அங்குலமாகவும், 9 அடி ஆறு அங்குலம் அடைவுமட்டம் கொண்ட வன்னேரிக்குளம் அடைவு மட்டத்தை அடைந்து 4 அங்குலமாகவும், 8 அடி ஆறு அங்குலம் அடைவுமட்டம் கொண்ட குடமுருட்டிக் குளம் அடைவுமட்டத்தை அடைந்தும் வான் பாய ஆரம்பித்துள்ளன என்று நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. எனவே நீர் நிலைகள் மற்றும் நீர் வடிந்தோடும் பகுதிகளுக்குச் செல்வதைத் தவிர்ப்பதுடன், தாழ்நிலப் பகுதிகளில் உள்ள மக்கள் தொடர்ந்தும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு எச்சரித்துள்ளது.

(ஒ-46)

# நாவலர் நினைவரங்கம்

யாழ்ப்பாணம், நவ.27

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் முன்னெடுக்கும் நாவலர் நினைவரங்கம் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்ச்சங்கத் தலைவர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் கரிகணன் நிறுவனப் பணிப்பாளர் சிவ.ராஜ்குமார் தம்பதியர் மங்கல விளக்கேற்றுவர்.

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தொடக்கவுரையையும், யாழ். மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன் வாழ்த்துரையையும் நிகழ்த்துவர்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன் ச.அமலஅசாம் "நடையில் நின்றுயர் நாயகன் நாவலர்" என்ற பொருளிலும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன் ஜெ. தவேதன் "எழுந்த கொழுங்கனல்" என்ற பொருளிலும் உரையாற்றுவர்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரித் தமிழாசிரியரும், இந்து ஆன்மிகப் பிரசாரகருமாகிய க. கனகதுர்க்கா "நாவலர் வழி" என்ற பொருளில் நினைவுப் பேருரையாற்றுவார்.

தமிழ்ச்சங்கச் செயலாளர் இ.சர்வேஸ்வரா நிறைவுரையையும், நன்றியுரையையும் வழங்குவார்.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நிகழ்வில் பங்கேற்குமாறு தமிழ்ச்சங்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

(ஒ-4)

வவுனியா மாவட்டத்தில்

# தொடர்கிறது கனமழை: 50 குடும்பங்கள் பாதிப்பு



வவுனியா, நவ. 27

வவுனியாவில் தொடர் மழை காரணமாக 50 குடும்பங்களைச் சேர்ந்த 182 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

வவுனியாவில் சில நாள்களாக கனமழை பெய்து வருகின்றது. தாழ் நிலப் பகுதி வீடுகளுக்குள்ளும் வெள்ளம் புகுந்துள்ளது.

அதன்படி, வவுனியா பிரதேச செயலக பிரிவில் 11 குடும்பங்களைச் சேர்ந்த 37 பேரும், வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 19 குடும்பங்களைச் சேர்ந்த 66 பேரும், வவுனியா தெற்கு பிரதேச செயலக பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 3 பேரும், வெங்கலசெட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 19 குடும்பங்களைச் சேர்ந்த 76 பேருமாக மாவட்டத்தில் 50 குடும்பங்களைச் சேர்ந்த 182 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இது தவிர, வவுனியா பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 4 வீடுகள் பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. அவை பற்றிய முழுமையான தகவல்களை இடர்முகாமைத்துவ நிலையம் சேகரித்து வருகின்றது.

(த-110)

# நீர் இறைக்கும் மோட்டர் திருட்டு

யாழ்ப்பாணம், நவ.27

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலி மேற்குப் பகுதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்து, நீர் இறைக்கும் மோட்டர் நேற்றுமுன்தினம் இரவு திருடப்பட்டுள்ளது.

வீட்டில் உள்ளவர்கள் தொலைக்காட்சி பார்ப்பதில் ஆழ்ந்திருந்தனர். அந்தவேளையில் அங்கு வந்த திருடன் தனது கைவரிசையைக் காட்டியுள்ளான்.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. சந்தேக நபர் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

(ஒ-4-27)

**காணி விற்பனைக்கு**

நூல் நிலையம் மற்றும் பிரபல பாடசாலைக்கு அண்மையில் அமைந்துள்ள 125/1, 2ஆம் குறுக்குத் தெருவில் 3/4 பரப்பில் அமைந்துள்ள வீடும் காணியும், விற்பனைக்கு உண்டு.

(CS 41261) (3/6) தொடர்பு: 077 776 8606

**வேலைவாய்ப்பு**

வல்லையில் புதிதாக அமைந்துள்ள VILLAGE HOTEL AND INDIAN RESTAURANT இற்கு

1. Receptionist 2. House Keeper 3. Waiter

தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். நேர்முகத்தேர்வு: 28.11.2021 ஞாயிற்றுக்கிழமை 12.00 மணிக்கு நேரில் வரவும்.

(cs.41282) (2.6) தொடர்புகளுக்கு: 076 830 3931

உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

"CHRISMAS OFFER" Over - 11kg

உள்நாடு 24 Hours

வெளிநாடு 3 - 5 Days

- U.K - 1000/-
- Germany - 1300/-
- Australia - 1650/-
- France - 1400/-

Lanka Cargo Worldwide Express
315, Kasthuriyar Road, Jaffna.

பணியாளர்கள் தேவை

(CS 41295) (3/6) 076 283 2397

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் சுன்னாகம் சந்தி அருகாமையில் புன்னாலைக் கட்டுவன் வீதியில் 6 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. 1 1/2 பரப்பாக பிரித்து கொடுக்கப்படும்.
(சுன்னாகம் பஸ் நிலையத்திலிருந்து 500 M தூரம்).
ஒரு பரப்பின் விலை 8.5 லட்சம்.

076 8909 259, 077 015 0353

(CS 692) 1-6

ALLIANCE FRANCAISE DE JAFFNA

af பிரெஞ்சு மொழி



- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).

021 222 8093 17, Kandy Road, Jaffna

கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம் (வ/து) - வட்டக்கச்சி

**பகிரங்க ஏல விற்பனை**

எமது சங்கத்தின் பாவனையில் உள்ள
TAFE RB 5244 உழவு இயந்திரமும்
RV 8910 உழவு இயந்திரப் பெட்டியும்
ஏல விற்பனை செய்யப்படவுள்ளது.

- 03.12.2021,04.12.2021 ஆம் திகதிகளில் பார்வையிட முடியும்

**பகிரங்க ஏல விற்பனை நடைபெறும் காலம்**

- திகதி : 11.12.2021 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணி
- இடம் : அலுவலகம், இராமநாதபுரம்
- தொடர்புகொள்ள - 077 829 4846

(cr.36471) (2.6)

தலைவர் : ந.கௌரிதாசன்
கரைச்சி கிழக்கு, ப.நோ.கூ.சங்கம் (வ/து) - வட்டக்கச்சி.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.